www.padippakam.com

1 - 15 ஜூன் '92

ரூ. 2.50

# புதிய ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய அரசியல் ஏடு

## புலி தடை ஏன்?




# சாராய சதிராட்டம்

படிப்பகம்

www.padippakam.com

# நக்சல்பாரி எழுச்சியின் 25-ம் ஆண்டு:
# இந்திய மக்களின் விடிவெள்ளி

**நக்சல்பாரி!**

இந்தப் பெயரைக் கேட்டாலே ஆளுங் கும்பலும் ஆதிக்க வர்க்கங்களும் நடுநடுங்குகின்றன. அவர்கள் 'பயங்கரவாதிகள் என்று பீதியூட்டுகின்றன முதலாளித்துவப் பத்திரிகைகளும், ஓட்டுக் கட்சிகளும். 'இடது தீவிரவாதிகள், குறுங்குழுவாதிகள், வறட்டுவாதிகள்' என்று வசைபாடுகின்றனர் இடது - வலது போலிக் கம்யூனிஸ்டுகளும் ஓடுகாலிகளும்.

நக்சல்பாரி - அது மே.வங்கத்தின் டார்ஜிலிங் மாவட்டத்திலுள்ள சிறிய கிராமம் தான். ஆனால் அது இன்று இந்தியாவெங்கும் பிரபலமாகி, புரட்சிகர சக்திகளின் நம்பிக்கை நட்சத்திரமாகிவிட்டது.

1967, மே 23 - கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் ஆயிரக்கணக்கான விவசாயிகள் அமைப்பு ரீதியில் அணிதிரண்டு மாபெரும் எழுச்சியை நக்சல்பாரி வட்டாரத்தில் நடத்தினர். நிலப் பிரபுக்களின் நிலங்களும் அவர்களிடமிருந்த ஆயுதங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. கடன் பத்திரங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. கொடிய நிலப்பிரபுக்களுக்கு விவசாயிகளின் புரட்சிக் கமிட்டி தண்டனை விதித்தது மரபுவழி ஆயுதங்களோடு துப்பாக்கி ஏந்திய விவசாயிகள் அதிகாரத்தைத் தங்கள் கையில் எடுத்துக் கொண்டனர். எல்லா கிராமங்களிலும் ஆயுதமேந்திய செங்காவலர் குழுக்கள் அமைக்கப்பட்டன. விவசாயிகளின் பேரெழுச்சியைக் கண்டு அஞ்சி நிலப்பிரபுக்களும் போலீசாரும் கிராமங்களை விட்டே ஓடினர். அடிமைப்பட்டுக் கிடந்த விவசாயிகள் முதன் முதலாக சுதந்திரக் காற்றை சுவாசித்தனர்.

அன்று வங்கத்தை ஆண்ட இடது - வலது போலிக் கம்யூனிஸ்டுகளின் ஐக்கிய முன்னணி அரசு நக்சல்பாரி விவசாயிகள் மீது அடக்குமுறையை ஏவியது. வெகுண்டெழுந்த விவசாயிகள் போலீசுப் படையைத் திருப்பித் தாக்கி விரட்டியடித்தனர். மீண்டும் பெரும்படையுடன் வந்து போலீசார் .துப்பாக்கிச் சூடு நடத்தினர். 9 பேர் தியாகிகளானார்கள். விவசாயிகள் பலர் கைதானார்கள். தலைவர்களைக் காட்டிக் கொடுக்குமாறு சித்திரவதை செய்யப்பட்ட போதிலும் அவர்களின் உறுதி குறையவில்லை. நக்சல்பாரிப் பாதையில் விவசாயிகளின் போராட்டங்கள் காட்டுத் தீயாகப் பரவத் தொடங்கியது. "நக்சல்பாரி பாதையே இந்தியப் புரட்சிக்கான பாதை" என்று கல்கத்தா நகரெங்கும் புரட்சிகர மாணவர்களும் இளைஞர்களும் எதிரொலித்தனர். "இந்தியாவில் வசந்தத்தின் இடிமுழக்கம்" என்று தோழர் மாவோ தலைமையும், சீனத்தின் மக்கள் தினசரியும் நக்சல்பாரி எழுச்சியை புரட்சிகர வாழ்த்துக்களுடன் வரவேற்றன.

நக்சல்பாரி எழுச்சியைத் தலைமையேற்று நடத்தியதற்காகவும் ஆதரித்ததற்காகவும் மே.வங்க 'மார்க்சிஸ்டு' கட்சியிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டனர். அதைத் தொடர்ந்து நாடெங்கும் 'மார்க்சிஸ்டு'களின் துரோகத்துக்கு எதிராக கட்சிக்குள்ளேயே கலகக் கொடி உயர்ந்தது. கட்சி இருகூறுகளாக உடைந்தது. நக்சல்பாரியை ஆதரித்தவர்கள் புதிய புரட்சிகர மையத்தை நிறுவினர். நக்சல்பாரி எழுச்சி ஓர் உண்மையான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சிக்கு அடித்தளமிட்டது. ஆளும் வர்க்கங்கள் பீதியடைந்து ஆத்திரத்தோடு குறிப்பிடும் 'நக்சலைட் கட்சி' எனப்படும் இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட்)



1969-ம் ஆண்டு ஏப்ரல் 22-ம் நாளில் (தோழர் லெனினது 100-வது பிறந்த நாளில்) உதயமானது.

நக்சல்பாரி - சுதந்திரப் போராட்டக் காலத்திற்குப் பிறகு, நிலத்திற்காகவும் அரசியல் அதிகாரத்திற்காகவும் புரட்சியாளர்களின் தலைமையில் விவசாயிகள் நடத்திய ஆயுதமேந்திய பேரெழுச்சி. போலிக் கம்யூனிஸ்டுகளின் நாடாளுமன்ற சமரச - சரணடைவு துரோகத்துக்கு எதிராக நடந்த எழுச்சி. இந்திய மண்ணில் முதன் முதலாக ரஷிய திருத்தல்வாதப் பாதையை மறுதளித்து, மக்கள் யுத்தப் பாதையை நிலைநாட்டிய எழுச்சி. நக்சல்பாரி பேரெழுச்சி, மார்க்சிய - லெனினிய - மாசேதுங் சிந்தனையை உயர்த்திப் பிடித்தது. இந்தியப் புதிய ஜனநாயகப் புரட்சியின் தலைவனும் வழிகாட்டியுமான மார்க்சிய - லெனினிய புரட்சிகர பொதுவுடமைக் கட்சி மலருவ்தற்கு அடித்தளமிட்டது. அது தோன்றிய நாள் முதலாக எவ்வித சமரசத்திற்கும், சந்தர்ப்பவாதத்துக்கும் பலியாகாத, தியாகங்களுக்கு அஞ்சாத வீரப் புதல்வர்களை - புரட்சிகர கம்யூனிஸ்டுகளை நாடெங்கும் உருவாக்கியது.

நடைமுறைத் தவறுகளாலும், எதிரிகள் - துரோகிகளின் சீர்குலைவுகளாலும் நக்சல்பாரி இயக்கம் தற்காலிகமாகப் பின்னடைந்திருந்தாலும், அது ஒன்றுதான் இந்திய மக்களின் ஒரே விடிவெள்ளி!

மே 23, 1992 இன்று நக்சல்பாரி பேரெழுச்சியின் 25-வது ஆண்டு பிறந்த நாள். எத்தனை அடக்குமுறைகள், சித்திரவதை நரவேட்டைகளை ஆளும் வர்க்கங்கள் கட்டவிழ்த்துவிட்ட போதிலும், ஆயிரமாயிரம் புரட்சியாளர்கள் தியாகிகளான போதிலும் நக்சல்பாரி பேரியக்கத்தை அவர்களால் அழிக்க முடியவில்லை அழிக்கவும் முடியாது. காரணம், அது மக்கள் எனும் கடலில் நீந்தித் திரியும் மீன் போன்றது. உழைக்கும் மக்கள் எனும் விளை நிலத்தில் ஊன்றிய விதை போன்றது. அது வேர்விட்டுப் பரவுவதையும் பூத்துக் குலுங்குவதையும் எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது.

காரிருள் சூழ்ந்த இந்திய வானத்தைக் கீறி வைகறையைத் தோற்றுவித்த நக்சல்பாரி புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேறுவோம்! இந்தியாவெங்கும் வசந்தத்தின் இடிமுழக்கத்தை எதிரொலிக்கச் செய்வோம்! புதிய ஜனநாயகப் புரட்சியில் வெல்லுவோம்!

## அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே**

கடுமையான நிதிநெருக்கடியின் காரணமாக 16-31 மே '92 இதழை வெளியிட இயலவில்லை. இதழ் முறையாக வெளிவருவதில் வாசகர்களும் முகவர்களுமாகிய உங்கள் பங்கு மிக முக்கியமானது. விற்பனைத் தொகையை உடனுக்குடன் அனுப்பியும் இதழ் வளர்ச்சிக்கு நிதியுதவி அளித்தும் ஆதரவு தருமாறு கோருகிறோம்.

— ஆசிரியர் குழு.

படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய - லெனினிய
அரசியல் ஏடு

ஏழாம் ஆண்டு

13 & 14

6 மே - 15 ஜூன் '92

உள்நாடு:
தனி இதழ்: ரூ.2.50
ஆண்டு சந்தா: ரூ.60

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US $ 15

டைப்புகள் அனுப்பவும்
ற்றும்
னைத்துத் தொடர்புக்கும்

ரா.சண்முகராசு,
சிரியர், புதிய ஜனநாயகம்,
சாமியார் தோட்டம்,
லந்தூர் சாலை,
சதாப்பேட்டை,
சன்னை - 600 015.

# ஜெயாவின் சாராய சதிராட்டம்

ஓசைப்படாமல் மதுவிலக்கை ரத்து செய்துவிட்டது, பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். இந்த உண்மையை மூடிமறைக்கும் வகையில் சென்னையைக் குலுக்கும் பரபரப்போடு இரண்டு விழாக்களையும் அது நடத்தியது. அரசுப் பணத்தை பார்ப்பன கும்பல்களுக்கு வாரி இறைத்து மதுவிலக்குப் பிரச்சாரத்துக்காக 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற சினிமாவையும், 'வெளிச்சம்' என்ற நாடகத்தையும் துவக்கி வைத்தார், ஜெயலலிதா. இதற்கு வாழ்த்துத் தெரிவித்து பத்திரிகைகளின் முழுப்பக்க விளம்பரங்கள், பூதம் பூதமாய் நகரெங்கும் சுவரொட்டிகள், பனைபனையாய் 'கட் - அவுட்'டுகள் என்று கலக்கிவிட்டார்கள்.

''நாங்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் மலிவு விலை சாராயத்தை முழுமையாக ஒழித்ததை இந்த நாடே நன்கு அறியும். எதிர்வரும் காலத்தில் தமிழகத்தில் பூரண மதுவிலக்கு என்ற நிலையை அடையவேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்'' என்று சினிமா, நாடகத் துவக்க விழாக்களில் பாசிச - பார்ப்பன ஜெயா சொன்னார். கருணாநிதி கொண்டு வந்த மலிவு விலை நாட்டுச் சாராயக் கடைகளை மூடியபோதும் இப்படித்தான் பக்கம் பக்கமாக ஜெயலலிதாவின் துதிபாடி, ''தாய்குலத்தின் குடிகாக்க குடி ஒழித்த கோமளமாக'' பத்திரிகைகளில் விளம்பரங்கள் வந்தன. ஆனால் தனது உடன் கட்டை எம்.ஜி.ஆரைப் போலவே பாசிஸ்டுகளுக்கே உரிய கோயபல்சுத்தனமாக எதைச் சொல்கிறாரோ அதற்கு நேரெதிராக செயல்படுகிறார்.

மலிவு விலை சாராயக் கடைகளை மூடியபோது ''நாடே நன்கு அறியும்'' வகையில் பெரும் சவடால் அடித்த பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல், இப்போது மறைமுகமாக மதுவிலக்கை ரத்து செய்வதை மட்டும் ஏதோ மாவட்ட கலெக்டர்கள் வழக்கமாக நடத்தும் 'ஜமாபந்தி'யைப் போல செய்கிறது. சாதாரண அதிகாரவர்க்க நடவடிக்கையாக இந்தியாவில் தயாராகும் வெளிநாட்டு வகை மதுக் கடைகளை இரண்டு மடங்காக அதிகரித்தும், இதுவரை இல்லாத புது வசதியாக மதுக்குடியகம் ('பார்') இணைந்ததாகவும் மாற்றி, கிராமப் புறங்களுக்கும் அதை விரிவுபடுத்தி ஏலம் விட்டுள்ளது.

கோடிக்கணக்கில் லஞ்சம் வாங்கிக் கொண்டு முறைப்படியான 'டெண்டர்' - ஏலம் இல்லாமல் அரசுக்குச் சொந்தமான எரிசாராய வடிப்புத் தொழிற்சாலையைத் தனியாருக்குத் தாரைவார்த்தது, ஜெயா கும்பல். இந்தக் குற்றச்சாட்டு எழுந்தபோது, ''அரசாங்கமே சாராயத் தொழில் நடத்தும் முட்டாள்தனத்தை இனிமேலும் தொடர இந்த அரசு அனுமதிக்காது'' என்று பெருங்கூச்சல் போட்டு அதை மறைத்தார், பாசிச ஜெயா. இப்போது சென்னை, மதுரை நகர சாராய வியாபாரிகள் கூட்டணி அமைத்து, அரசு எதிர்பார்த்த அளவுக்கு ஏலத்தொகை அதிகரிப்பதைத் தடுத்துவிட்டனர். இதன் காரணமாக இந்நகரங்களில் அரசே மதுக் கடைகளை நடத்தும் என்று முடிவும் செய்தார், ஜெயா.

ஆக, ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிக்கிறது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். மலிவு விலைச் சாராயக் கடைகளை மூடுவது, கள்ளச் சாராயத்தை ஒழிக்க முடியவில்லையானாலும் கட்டுபடுத்துவது, அரசு வடிசாராயத் தொழிற்சாலையை தனியாரிடம் தாரைவார்ப்பது ஆகியவற்றால்தான் ஏதோ மதுவிலக்கு கொள்கையின் உறுதியான காந்தியவாதியாக நாடகமாடி ஓட்டுப் பொறுக்குகிறது. அதேசமயம் இந்த நடவடிக்கைகளினால் இந்தியாவில் தயாரிக்கும் வெளிநாட்டு வகை சாராயக் கம்பெனிகளின் அதிபர்களாகிய விஜய் மல்லையா, உடையார், புருஷோத்தமன் போன்றவர்களுடன் கள்ளக்கூட்டு சேர்ந்துகொண்டு கோடி கோடியாய்ச் சம்பாதிக்கிறது. இவர்களின் கொள்ளையை அதிகரிப்பதற்காகத்தான் மதுக்கடைகளை இரட்டிப்பாக்கி, மதுக் குடியகங்களை அனுமதிப்பதோடு அங்கு புட்டிகளில் அடைத்த நடுத்தர ரக மதுக்களை விற்கவும் முடிவு செய்துள்ளனர்.

ஒவ்வொரு முறை ஓட்டுப் பொறுக்கும்போதும் 'மதுவிலக்கு மகாத்மாக்களாக' நாடகமாடி மக்களை ஏய்ப்பதும், ஆட்சிக்கு வந்ததும் மதுவிலக்கை அமலாக்குவதும் ஏதாவது காரணத்தைக் கூறி சில மாதங்களிலேயே அதை ரத்து செய்துவிட்டு சாராய சாம்ராஜ்ஜியங்களோடு சேர்ந்து கொள்ளையடிப்பதும் இந்த ஆளும் அ.தி.மு.க - காங்கிரசு கும்பலுக்கு வாடிக்கையாகிவிட்டது. இப்படித்தான் மதுவிலக்கு வாக்குறுதி கொடுத்து ஆட்சியைப் பிடித்த எம்.ஜி.ஆர் கட்டங்கட்டமாக மதுவிலக்கை ரத்து செய்து, இறுதியில் உடையாரோடு சேர்ந்து சாராய சாம்ராஜ்ஜியத்தையே நிறுவினார். இப்போது அவரது உடன்கட்டை ஜெயலலிதாவும் அதையே செய்கிறார். கருணாநிதி ஆட்சியின் போது மதுவிலக்கை அமல்படுத்தக் கோரி சுதந்திரப் போராட்ட தியாகிகள் என்கிற பெயரில் ஆர்ப்பாட்டங்களை நடத்தி சிறை சென்ற காந்தீய - காங்கிரசு கயவாளிகள் பிறகு வாய் மூடிக் கொண்டு எம்.ஜி.ஆர் - ஜெயா கும்பலோடு சேர்ந்து கொண்டு மதுக் கடை ஏலத்தில் இறங்கி விடுகிறார்கள். இந்த நம்பிக்கைத் துரோகிகள்

படிப்பகம்

www.padippakam.com

# புலி தடை ஏன்?

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு ஓர் சட்டவிரோத அமைப்பு என்று பிரகடனம் செய்து அதற்குத் தடைவிதித்துள்ளது. இந்திய அரசு. ''இலங்கையின் வட - கிழக்கு பிராந்தியங்களைக் கொண்ட தமிழ் ஈழம் அமைப்பது மட்டும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நோக்கமன்று. இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டையும் தனியே பிரித்து தமிழர்களுக்கான அகண்ட தாயகம் காண்பதுதான் புலிகளின் விரிவான நோக்கம். இந்தியாவின் சுயாதிகாரம், பிரதேச ஒருமைப்பாடுக்கு ஆபத்து விளைவிக்கும் பயங்கரவாதச் செயல்களில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். அசாமின் தடை செய்யப்பட்ட 'உல்ஃபா' அமைப்போடு தொடர்பு வைத்திருக்கிறார்கள். தமிழ்நாட்டு இளைஞர்களை ஈழத்துக்கு அழைத்துக் கொண்டுபோய் பயிற்சியும் ஆயுதங்களும் கொடுத்து தமிழ் தேசிய மீட்புப் படை ஒன்றையும் அமைத்துள்ளார்கள். ஆகவே மத்திய மாநில அரசுகளின் கரங்களை வலுப்படுத்தி புலிகள் அமைப்பை ஒடுக்கவும் அதனால் நாட்டுக்கு ஏற்படும் ஆபத்தைத் தடுக்கவும் அது தடை செய்யப்படுகிறது'' என்கிறது இந்திய அரசு.

தடை செய்யப்படுவதற்குப் பத்து நாட்களுக்கு முன்புதான் அப்படிச் செய்வதற்குத் தகுந்த தடயங்கள் - ஆதாரங்கள் தம்மிடம் இல்லை, ராஜீவ் கொலை மட்டுமே தடை செய்வதற்குப் போதிய காரணமாகிவிட முடியாது என்று மத்திய உள்துறை மந்திரி சொன்னார். புலிகள் அமைப்பைத் தடை செய்வதுதான் ராஜீவுக்குக் காட்டும் விசுவாசம் என்கிற நிர்ப்பந்தம் உருவாக்கப்பட்டது: ஜெயலலிதா - வாழப்பாடி கும்பல் இதற்கான பிரச்சாரத்தை முன்னின்று நடத்தியது. இப்போது அதே மந்திரி, புலிகள் அமைப்பைத் தடை செய்வதற்கான தகுந்த ஆதாரங்கள் இருப்பதாகவும், ஆனால் அவற்றை வெளியிடமுடியாது என்றும் கூறுகிறார்.

புலிகளுடன் பிரேமதாசா கும்பல் அவ்வப்போது நடத்தும் பேரம் - சமரச முயற்சிக்கு, பாதகமாக இத்தடை விதிப்பு அமைந்து, அதனால் இலங்கை அரசு இதை மதிக்காமல் போகலாம்; தானே புலிகளுடன் பேரம் - சமரசம் பேசும் வாய்ப்பு வரலாம் என்பது போன்ற காரணங்களால் இந்திய அரசு இதுவரை தடை விதிக்காமல் இழுத்துக் கொண்டிருந்தது. ஆனால் தனது தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கத்துக்கு புலிகள் அமைப்பை இனிமேலும் நம்ப முடியாது என்கிற முடிவுக்கு இப்போது இந்திய அரசு வந்துவிட்டது. ஆகவே புலிகளுடன் இனி எவ்வித பேரமும் நடத்துவதைத் தடுக்கவும், ராஜீவ் கொலைக்குப் பழிவாங்கவும் புலிகள் அமைப்பைத் தடை செய்துள்ளது.

குறிப்பாக, ராஜீவ் கொலை வழக்கை இரகசியமாக நடத்தி, தகுந்த ஆதாரமில்லாமலேயே பலரையும் அதிக பட்சம் தண்டிக்க

புலனாய்வுக் குழு தாக்கல் செய்துள்ள குற்றப் பத்திரிகையிலேயே குறிப்பிடுவதாக இருந்து கடைசி நேரத்தில் அகற்றப்பட்ட கொலைக்கான முக்கிய காரணங்களில் ஒன்று 'மனித வெடிகுண்டா'கிய தானு இந்திய இராணுவத்தினரின் கும்பல் கற்பழிப்புக்குப் பலியானவர்; அதற்கு பழிவாங்கவே ராஜீவைக் கொன்றார் என்று கூறுகிறது.

ஈழத்தில் இந்திய இராணுவம் கொலை - சித்திரவதை, கற்பழிப்பு, ஓரின பாலுறவு, கடத்தல் போன்ற பல கிரிமினல் குற்றங்களில் ஈடுபட்டதாக இந்தியப் பத்திரிகைகளே எழுதியுள்ளன. இந்திய உளவுப்படை ஈழப் போராளிகளைப் பிளவுபடுத்தி, சதிகாரச் செயல்கள் புரிந்ததாகவும் கூட குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இன்னொரு தேசத்தை ஆக்கிரமித்து கிரிமினல் குற்றங்களில் ஈடுபடக் காரணமானவர்களுக்குத் தண்டனை கிடையாதா? குறிப்பாக கும்பல் கற்பழிப்புக்குப் பலியான பெண் அதற்கு அரசியல் பொறுப்பாளியானவரை பழிவாங்கும் செயலைத் தனியே பிரித்து 'ஒரு கொலை' என கிரிமினல் சட்டப்படி அணுகுவது சரியா? கிரிமினல் சட்டத்தின் முழுமையான கண்ணோட்டப்படியும் சரி, தார்மீக ரீதியிலும் சரி, இயற்கையான நீதியின் (NATURAL JUSTICE) படியும் சரி ராஜீவ் கொலைகாரர்களைத் தண்டிப்பதற்கு உரிமை உண்டா? இப்படிப்பட்ட நியாய அநியாயங்களைப் பகிரங்கமாக அலசுவதை மத்திய - மாநில ஆட்சியாளர்கள் சிறிதும் விரும்பவில்லை. அப்படியாரும் பேசவிடாது வாயடைப்பதற்கு, குறிப்பாக குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்காக வாதாட வக்கீல்கள் கூட முன்வரக் கூடாது என்று மிரட்டுவதற்காக புலிகள் அமைப்புக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் காரணங்களோடு, தன்னுரிமைப் போராளிகள், புரட்சிகர - ஜனநாயக சக்திகள் உட்பட எல்லா எதிர்த் தரப்பினரையும் ஒடுக்குவதற்கு இன்னும் ஒரு ஆயுதமாக இந்தத் தடைவிதிப்பு இருக்கும் என்பதால் பார்ப்பன பாசிச ஜெயா கும்பலும் அதன் அடிவருடிகளான வாழப்பாடி - த.பாண்டியன் போன்றவர்கள் வற்புறுத்திச் சாதித்துள்ளனர். இத்தடை விதிப்பு இனித் தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கைப் பராமரிப்பதை எளிதாக்கியிருக்கிறது என்று பாசிச ஜெயா அறிவித்திருக்கிறார். புலி ஆதரவு சக்திகளை ஒடுக்குவதாக எச்சரித்து எல்லா எதிர்த் தரப்பினரையும் மிரட்டியுள்ளார். கருணாநிதியைச் சீண்டும் வேலையில் அவரது அடிவருடிகள் ஈடுபட்டுள்ளனர்.

**தனது தெற்கு ஆசிய பிராந்திய ஆதிக்கத்துக்கு புலிகள் அமைப்பை இனிமேலும் நம்ப முடியாது என்கிற முடிவுக்கு இப்போது இந்திய அரசு வந்துவிட்டது. ஆகவே புலிகளுடன் இனி எவ்வித பேரமும் நடத்துவதைத் தடுக்கவும், ராஜீவ் கொலைக்குப் பழி வாங்கவும் புலிகள் அமைப்பைத் தடை செய்துள்ளது.**

ஏற்கனவே ''தடா'', தே.பா.ச. போன்றவற்றைக் கேடாகப் பயன்படுத்திவரும் பாசிச ஜெயா கும்பலுக்கு புலிகள் அமைப்புக்குத் தடைவிதிப்பு இன்னும் ஒரு ஆயுதமாக இருக்கும். ஏனென்றால் இத் தடைவிதிப்பு நூறு ''தடா'' சட்டங்களை உள்ளடக்கிய கருப்புச் சட்டமாகப் பயன்படும். சட்ட விரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் 1967 இன் கீழ் புலிகள் அமைப்புத் தடை செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்தியாவின் பிரதேச ஒருமைப்பாடு, சுயாதிகாரத்தை சீர்குலைப்பது மட்டுமல்ல, அதைக் கேள்விக்குள்ளாக்குவது, அந்த எண்ணம் இருப்பதோ கூட சட்ட விரோதமாகும். அதற்கான வார்த்தை, எழுத்து, பேச்சு, சமிக்கை, காட்சிப்பொருள் மற்றும் அம்மாதிரியான எவையும் சட்ட விரோதமானது; அப்படிச் செய்யும் எந்தத் தனி நபரும் அமைப்பும் கூட ஏழாண்டுகள் வரை சிறைத் தண்டனைக்குத் தள்ளப்படுவர்.

தடை செய்யப்படும் அமைப்பின் கணக்குகள் முடக்கப்படுவதோடு அதன் உறுப்பினர்களோடு எந்தவகையான நிதி உறவு கொண்டிருப்பவரையும் தண்டிக்கலாம். சந்தேகத்துக்குரிய நபரின் இடத்தில் நுழைந்து புத்தகங்கள், பணம் முதலிய சொத்துக்களை சோதனையிட்டு கைப்பற்றுவதற்கு எந்த அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிக்கும் உரிமை உண்டு. வீடு, கட்டிடம், கூடாரம், வாகனம் முதலிய எதையும் சட்டவிரோத இடம் என்று அறிவித்து சோதனையிடவும் கைப்பற்றவும் அரசுக்கு உரிமை உண்டு. தடை செய்யப்பட்ட அமைப்பின் உறுப்பினர் எவரோடும் எந்தத் தொடர்பு வைத்திருந்தாலும், நன்கொடை தருவது, பெறுவது, உதவுவது ஆகியன எந்த நோக்கத்திற்கானாலும் தண்டிக்கப்படலாம்.

இப்படிச் சட்டவிரோத நடவடிக்கைகள் எனக் கூறி யாரையும் எந்தப் பழிபோட்டும் தண்டிக்கும் இச்சட்டம், இந்த நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும், சுயாதிகாரத்துக்கும் பாதிப்பு ஏற்படும் வகையில் இந்திய அரசு செயல்படுவதற்கு மட்டும் விதி விலக்கும் உரிமையும் அளிக்கிறது. சட்ட விரோத அமைப்பு, நடவடிக்கைகள் என்று மற்றவர்களைத் தண்டிக்கும் அதே சமயம் இந்திய அரசோ, அதனால் அங்கீகரிக்கப் பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட தடைகள் எதுவும் கிடையாது. அதாவது இந்திய அரசோ, அதன் பிரதிநிதிகளோ புலிகளுடனோ, இலங்கை அரசுடனோ பேரங்கள் நடத்தவும் ஒப்பந்தங்கள் போடவும் முடியும்.

www.padippakam.com

றோடு சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டத்தையும் பயன்படுத்தி பாசிசக் காட்டாட்சியை சட்டபூர்வமாகவும் பகிரங்கமாகவும் நடத்துவதற்காகவே இந்தத் தடைவிதிப்பு கொண்டு வரப்படுகிறது. லஞ்ச ஊழல், அதிகார முறைகேடுகள், அரசியல் - பொருளாதார நெருக்கடிகளால் அம்பலப்பட்டு மேலும் மேலும் தனிமைப்படும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் எதிர்த் தரப்பினர் மீது ஒடுக்கு முறையை ஏவிவிட யாரை வேண்டுமானாலும் புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் எனக் குற்றஞ்சாட்டி சிறையில் தள்ளவே செய்யும். புலிகளைப் பாசிஸ்டுகள் என்பதற்காக கடந்த ஆறாண்டுகளாக எதிர்த்து அம்பலப்படுத்திவரும் புரட்சியாளர்களைக் கூட புலிகளின் ஆதரவாளர்கள் எனக்கூறி 'தடா' 'தே.பா.ச'-வின் கீழ் கைது செய்ததைப் பார்த்திருக்கிறோம். இத்தகைய ஒடுக்குமுறைகள் இனிப் பன்மடங்கு கட்டவிழ்த்துவிடப்படும்.



தடை: புலிகள் அமைப்பை ஒடுக்குவதற்காக மட்டுமல்ல; அதைச் சாக்கு வைத்து புரட்சிகர - ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதற்காகவும்தான்.

ராஜீவ் கொலையைத் தொடர்ந்து, கொலையாளிகளைப் பிடிப்பது, அவர்களுக்கு ஆதரவானவர்களை ஒடுக்குவது என்கிற பெயரில் நடந்த அக்கிரமங்கள் எதையும் 'அகில இந்திய'க் கட்சிகள் எதிர்க்கவில்லை; மாறாக ஆதரித்தன. 'தேசியப்' பத்திரிகைகள் துணைநின்றன. அதேபோல புலிகள் அமைப்புக்குத் தடை விதிப்பதையும் அவர்கள் அனைவரும் வரவேற்று ஆதரிக்கின்றனர். இதில் ஒன்றும் வியப்பில்லை. தமிழகத்தில் கருணாநிதி தலைமையிலான கூட்டணிகள், "தடை விதிப்பு நடவடிக்கை எதிர்க் கட்சிகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும்" என்கிற அச்சத்தை மட்டுமே தெரிவித்துள்ளன. தடை விதிப்பு நடவடிக்கையே தவறானது என்று எதிர்க்குமளவு அக்கூட்டணியில் உடன்பாடு கிடையாது.

புலிகளுடன் கூடிக்குலாவிய வீரமணியும், புலிகளுடன் சந்தர்ப்பவாத உறவு கொண்டிருந்த கருணாநிதியும் மிகவும் எச்சரிக்கையாகவே கருத்துத் தெரிவித்துள்ளனர். அவசரப்பட்டு எடுத்த தேவையற்ற நடவடிக்கை; இன்னொரு நாட்டில் உள்ள அமைப்பைத் தடைசெய்வதால் பலன் ஒன்றும் இல்லை; இனி ஈழத் தமிழர் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு காணமுடியும்; வரதராஜப்பெருமாளுக்குத் தஞ்சம் அளித்துக் கொண்டே புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிப்பது ஓரவஞ்சனை; புலிகள் அமைப்பு உட்பட ஈழப் போராளிகளுக்கு ஆயுதங்களும் பயிற்சியும் வழங்கியது இந்திரா, ராஜீவ், எம்.ஜி.ஆர்-தானே என்கிற கருத்துக்களைக் கூறுகின்றனர்.

புலிகளுடன் கூட்டுச் சேர்ந்து துப்பாக்கிக் கலாச்சாரத்தையும் பிரிவினைவாதத்தையும் வளர்த்ததாக தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக பாசிச ராஜீவ் - ஜெயா கும்பல் குற்றஞ்சாட்டத் துவங்கியபோதே அதை மறுத்து தனது புலி எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பட்டியலிடத் துவங்கிவிட்டார் கருணாநிதி. அப்போதே, கருணாநிதியின் அரசியல் ஒட்டாண்டித்தனம், கோழைத்தனம் எல்லாம் வெளிப்பட்டுவிட்டது. ராஜீவ் கொலைக்குப் பிறகு முற்றிலும் தற்காப்பு அர

இளைய தலைமுறையினரிடையே வை.கோபால்சாமிக்குப் பெருகிவரும் ஆதரவைப் பார்த்த பிறகும்கூட கருணாநிதி மத்திய ஆட்சியாளரிடம் தனது விசுவாசத்தை நிரூபித்து தன்னையும் தனது சொத்தையும் காத்துக்கொள்ளும் அரசியலை மாற்றிக் கொள்ளவில்லை. இதுவரை புலிகளால் ஆதாயம் அடைந்து வந்த வீரமணியும் அதே நோக்கத்துக்காக பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலிடம் சரணடைந்து பச்சைத் துரோகமிழைத்தார்.

சட்டவிரோத நடவடிக்கைகள் (தடுப்புச்) சட்டம் 1967-ல்தான் வந்தது. ஆனால் 1962-ல் பிரிவினைவாதத் தடைச் சட்டம் வருவதாகச் சொன்னதும் திராவிட நாடு கோரிக்கையை தி.மு.க.-வும், தமிழ்நாடு கோரிக்கையை தி.க.-வும் குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள். அமைப்பைக் காத்துக் கொள்வதற்காக லட்சியத்தைக் கைவிட்டதாகவும், அதுதான் பெரிய 'ராஜ தந்திரம்' என்றும், லட்சியத்தைக் கைவிட்ட பின்னரும் தேர்தல் வெற்றியைச் சாதித்ததை அமெரிக்க அரசியல்வாதிகளே வியந்து பாராட்டியதாகவும் பீற்றிக்கொண்டனர். இதே திராவிட இயக்கப் பாரம்பரியத்தைத்தான் இந்த விவகாரத்திலும் அக்கட்சிகள் வெளிப்படுத்தியுள்ளன.

"புலிகளுக்குத் தடை விதித்தால் புரட்சி வெடிக்கும்" என்று பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாசு முழங்கினார். ஆனால் தடை அறிவிப்பு அதிகாரபூர்வமாக வந்ததும் கருணாநிதி, வீரமணியைப் போலவே பா.ம.க-வின் சட்டமன்ற பிரதிநிதி பண்ருட்டி ராமச்சந்திரன் எச்சரிக்கையோடு கருத்துத் தெரிவித்தார். அடுத்துச் சில நாட்களில், "புலிகளை ஆதரிப்போம்; விளைவுகளைச் சந்திப்போம்; ஏழாண்டு என்ன, எழுபதாண்டு சிறை என்றாலும் அஞ்சிடோம்; நான் போனால் என் மகன், ஏன் பேரன் [illegible] போராடுவோம்" என்று ஆவேசமாகப் பேசினார். (எந்த வைரக் கழுத்துப் பட்டையுடன் வாழ்த்தோடு மண முடித்து வைத்தாரே அந்த மகனா என்பது தெரியவில்லை!) புலிகள் தடையை எதிர்த்து ஜூன் மாதம் மத்திய அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி காட்டுவதாகத் தீர்மானம் போட்டார்.

கருணாநிதி, ஜெயலலிதாவுக்கு மாற்றுத் தலைமையாக வளரும் நோக்கத்துடன், திராவிட இயக்கப் பாரம்பரிய உரிமையுடன் அவ்வப்போது ராமதாசு அடிக்கும் வீராவேச முழக்கங்களில் ஒன்றுதான் இது. ஒருபுறம் ராமதாசின் இத்தகைய ஆவேச முழக்கங்கள் இருப்பினும் பண்ருட்டியின் சட்டமன்ற சமரசங்களோடு இணைத்துப் பார்க்கையில் இது தெளிவாகிவிடும். இட ஒதுக்கீடு, சாதி நலன்களுக்காக போர்க்குணமிக்க போராட்டங்களை நடத்திய ராமதாசின் அரசியல் அறைகூவல்கள் எல்லாம் பிசுபிசுத்துப் போவதை நாம் அறிவோம்; ஆகையால் புலிகள் அமைப்புக்குத் தடையை எதிர்த்து நடத்தும் போராட்டமும் ஒரு அடையாளத்துக்கானதாகவேதான் இருக்கும். நூற்றுக்கணக்கில் உள்ள தமிழ் இனவாதக் குழுக்கள் ஒன்று, ராஜீவ் கொலையைத் தொடர்ந்து வநத நாட்களில் முடங்கிக் கொண்டதைபோல இருந்துவிடுவார்கள் அல்லது ராமதாசுக்கு வால் பிடித்துப் போவார்கள் இன்னும் ஒரு சில "தீவிரவாத" குழுக்கள் தனிநபர் பயங்கரவாதச் செயல்கள் மூலம் புரட்சிகர - ஜனநாயக சக்திகள் மீது (ஒன்றிரண்டு) தாக்குதல் வருவதற்கு முகாந்திரம் தேடித் தருவார்கள்.

புலிகளைப் பொருத்தவரை எம்.ஜி.ஆர், கருணாநிதி போன்ற ஓட்டுப் பொறுக்கிக் கட்சித் தலைமையையும் (ஜெயலலிதாவையும்கூட ஓரளவு), நெடுமாறன், வீரமணி, மணியரசன் போன்ற பிழைப்புவாதிகளையும் நம்பியே தமிழக மக்களின் ஆதரவைப் பெறமுயன்று வந்திருக்கின்றனர். அது அவர்களது பாசிச, தேசிய இன வெறிக் கொள்கைக்கு ஏற்புடையதுதான்.

www.padippakam.com

### கும்பகோணம் குண்டு வெடிப்பு:

# புரட்சியாளர்களை ஒடுக்க பாசிஸ்டுகளுக்கு முகாந்திரம்

கும்பகோணம் அருகே சீனிவாசநல்லூரில் உள்ள தொலைக் காட்சி அஞ்சல் நிலையத்தில் கடந்த மாதம் 23-ந் தேதி நடந்த குண்டு வெடிப்பு நிகழ்ச்சியை மீண்டும் புரட்சியாளர்கள் மீது தாக்குதல் தொடுப்பதற்கு மற்றொரு முகாந்திரமாக பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் பயன்படுத்துகிறது.

அஞ்சல் நிலைய இயந்திர அறையின் சன்னலில் இருந்த குளிர்சாதனப் பெட்டியின் மீது நாட்டு வெடி குண்டுவைத்து, கையால் இயக்கப்பட்டு வெடித்தது. குளிர் சாதனங்கள், மின் விளக்குகள், கண்ணாடிகள் உடைந்து சிதறியிருக்கின்றன. ராஜீவைக் குண்டோடு வெடித்துக் கொன்ற தாணுவின் வரைபடத்துடன், புலிகள் மீதான தடையை நீக்கவும், தமிழீழத்தை அங்கீகரிக்கவும் கோருவதோடு, தாணுவுக்கு வீர வணக்கம் செலுத்தும் சுவரொட்டி அந்த இடத்தில் கிடந்ததாம். இந்தச் சம்பவத்துக்கு உரிமை பாராட்டும் வகையில் ''தமிழர் விடுதலைப் படை'' என்றும் அதில் எழுதப்பட்டிருந்ததாம்.

இந்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்டிருக்கலாம் என்கிற பாணியில் மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் மீது அவதூறு பரப்பி வருகிறது, போலீசின் உளவுப் பிரிவு. தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறைவைக்கப்பட்டு ஏறத்தாழ எட்டு மாதங்களுக்குப் பிறகு அண்மையில் விடுதலைப் பெற்றுள்ள தஞ்சை ம.க.இ.க. தோழர்கள் காளியப்பன், அருள் மற்றும் சிலரை விசாரணைக்கு என்று கூறி இழுத்துச் சென்றுள்ளது. இக்குண்டு வெடிப்பிற்கு முதல் நாளன்று தஞ்சை பேருந்து நிலையத்தில் ம.க.இ.க.-வின் முக்கியப் புள்ளி ஒருவர் காணப்பட்டதாகவும், இன்னும் பல ம.க.இ.க. தோழர்களைத் தேடிவருவதாகவும் அவதூறு பரப்பி பீதியூட்டிவருகிறது

பொதுவில் புலிகள் பற்றி புரளி, பீதி கிளப்புவது மட்டுமன்றி குறிப்பாக வி.வி.மு, ம.க.இ.க ஆகிய புரட்சிகர அமைப்புகளைத் தொடர்புபடுத்தியும் அவதூறு பரப்பிவருவது தொடர்கிறது. கடந்த மே 10-ந் தேதியன்று சென்னை - காஞ்சிபுரம் ரயிலைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக எழும்பூர் ரயில் நிலைய அதிகாரிக்குவந்தமொட்டைக்கடிதத்தில்ம.க.இ.க-வின் பெயர் குறிப்பிட்டிருந்ததாம். மதுரை, கம்பம் அருகே சுருளி தீர்த்தத்தில் குண்டு வெடித்து ஒரு கள்ளச் சாராயம் காய்ச்சுபவர் மாண்ட சம்பவத்தில் வி.வி.மு.-க்கு சம்பந்தம் இருக்கலாம் எனப் பத்திரிகைகளும், போலீசும் அவதூறு பரப்பி வருகின்றன. சில வி.வி.மு. தோழர்களும் போலீசால் தொல்லைப் படுத்தப்படுகின்றனர்.

குண்டு வெடிப்பில் சேதமடைந்த டி.வி.அஞ்சல் நிலையம்



திருவையாறு குடமுருட்டி, அரியலூர் மருதையாற்றுப் பாலங்கள் தஞ்சை தியாகிகள் நினைவுத் தூண், திருச்சி நேரு சிலை ஆகியவை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவங்களிலும் இப்படித்தான் ம.க.இ.க. வி.வி.மு. தோழர்கள் மீது அவதூறு பரப்பி, கைது செய்து, பொய்வழக்குகளும் கூட போடப்பட்டன. ஆனால் குற்றச்சாட்டுகள் பொய்யென நிரூபிக்கப்பட்டன. இச் சம்பவங்களோடும் இம்மாதிரியான சாகசங்களோடும், ''தமிழர் விடுதலைப் படை'' ''தமிழீழ விடுதலைப் புலிகள்'' ஆகிய அராஜக, பாசிச அமைப்புகளோடு ம.க.இ.க, வி.வி.மு ஆகிய புரட்சிகர அமைப்புகளுக்கு எவ்விதத் தொடர்பும் கிடையாது என்று அறிந்தும் இப்படிப்பட்ட தாக்குதல்கள் உள்நோக்கத்தோடு நடத்தப்படுகின்றன. ஆனால் புரட்சிகர அமைப்புகளைப் பயங்கரவாத அமைப்புகளாக சித்தரித்து மீண்டும் மீண்டும் ஒடுக்க முயலும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் இந்த சதிகளை முறியடித்து அதற்கு எதிரான போராட்டத்தின் முன்னணிப் படையாக இந்த அமைப்புகள் முன்னேறுவதை தடுத்திட முடியாது:

ஈழ விடுதலைக்கு உறுதியான, தெளிவான குரல்கொடுத்து வருபவர்கள் என்பது இன்றைய நெருக்கடியான நிலையிலும் மீண்டும் நிரூபணம் ஆகிறது.

புலிகள் அமைப்புக்கு எதிராக விதிக்கப்பட்டிருக்கும் தடைக்கு எதிராகவும் அதை நீக்கக் கோரியும் புரட்சிகர ஜனநாயக சக்திகள் கடுமையாகப் போராட வேண்டும். இத்தடை புலிகள் அமைப்பை ஒடுக்குவதற்காகக் கொண்டு வந்தது மட்டுமல்ல; அதைச் சாக்கு வைத்து புரட்சிகர ஜனநாயக சக்திகளை ஒடுக்குவதற்காகவும்தான் கொண்டு வரப்பட்டுள்ளது. ஜெயலலிதா வாழப்பாடி கும்பல் தொடர்ந்து எதிர்த் தரப்பு சக்திகள் அனைத்தையும் எச்சரிப்பதும் மிரட்டுவதும் இதையே காட்டுகின்றன.

ஆனால் நமது நிலைப்பாடு மற்ற பிற புரட்சிகர, ஜனநாயக சக்திகளிடமிருந்து மாறுபட்டது என்பதை இப்போதே நாம் தெளிவுபடுத்தியாக வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சட்டபூர்வமாகவும், அரச பயங்கரவாதத்தை ஏவியும் ஒடுக்குவதை எதிர்த்திடும் அதே சமயம், அந்த அமைப்பின் பாசிச நடவடிக்கைகளை அரசியல் சித்தாந்தபூர்வமாக எதிர்த்து அம்பலப்படுத்த வேண்டியது புரட்சிகர, ஜனநா கருதுகிறோம்.

ஈழத்தில் இந்திய, இலங்கை ஆகிய இரு ஆதிக்க சக்திகளையும் எதிர்த்து இன விடுதலைக்குப் போராடும் வேறு பிற போராளிக் குழுக்களுக்கு புலிகள் அமைப்பு தடை விதித்து அதன் உறுப்பினர்களையும், இன்னும் ரஜினி திரணகம, மாணவர்கள் விஜயகரன், விமலேசுவரன், எழுத்தாளர் கேசவன் மற்றும் யாழ் புத்தக நிலைய உரிமையாளர் மணி போன்றவர்களையும் வேட்டையாடி வருகின்றது. கடந்த ஓராண்டில் ஆயிரம் பேருக்குமேல் பிடித்து, சிறையிலடைத்து, சித்திரவதை செய்து கொண்டிருக்கிறது. இவர்கள் ஈ.பி.ஆர்.எல்.எஃப், டெலோ, பிளாட், ஈ.என்.டி.எல்.எஃப் போன்ற தமிழின துரோகிகள் அல்ல. இவர்கள் எப்போதும் இந்திய, இலங்கை அரசுகளை ஆதரித்தவர்களோ, இன விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்தவர்களோ அல்ல.

இன விடுதலைப் போராளிகள் என்கிற முறையில் இந்தியாவில் தஞ்சம் புகவும், ஆதரவு திரட்டவும் புலிகள் அமைப்புக்கு ஜனநாயக உரிமை கோரும் அதே சமயம் ஈழத்தில் [illegible]ளி அமைப்புகளும், ஜனநாயகவாதிகளும் வாழும் மாகும். இங்கே பிரிவினைவாதிகள், பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி யாரையும், எந்த அமைப்பையும் அரசு பயங்கரவாதம் ஒடுக்குவது எப்படி நடக்கிறதோ அதே போன்றுதான் ஈழத்திலும் சமூகவிரோதிகள், இன துரோகிகள் என்று யாரையும் முத்திரை குத்தி ஒழித்துக் கட்டும் வேலையைப் புலிகள் செய்கிறார்கள். ஆகவே ஈழத்தைப் பொருத்தவரை இன ஒடுக்குறைக்கு எதிரான விடுதலையுடன், புலிகளின் பாசிசத்துக்கு எதிரான ஜனநாயகப் போராட்டமும் இணைந்திருக்கிறது.

இலங்கை, இந்தியா ஆகிய இரு பாசிச ஒடுக்கு முறைகளுக்கு எதிராகப் போரிட்டுக் கொண்டிருக்கும் புலிகள் அமைப்பை இப்போது அரசியல், சித்தாந்தபூர்வமாக எதிர்ப்பதுகூட அவர்களைப் பலவீனப்படுத்திவிடும், எதிரிகளுக்கு சாதகமாகிவிடும் என்றும், அதுவும் இந்தத் தருணத்தில் செய்வது வறட்டுத்தனமானது என்றும் நம்மைப் பிற புரட்சிகர அமைப்புகளும் தமிழினவாதக் குழுக்களும் சாடுகின்றன. இவ்வளவு இக்கட்டான நிலையிலும் உண்மையான பிற போராளிக் குழுக்களையும், ஜனநாயகவாதிகளையும் தடை செய்து வேட்டையாடும் புலிகளின் செயல்தான் இன

படிப்பகம்

www.padippakam.com

எதிரிகளுக்குச் சாதகமாக்கிவிடும் என்பதும். இப்படிச் செய்வது வறட்டுத்தனமானது என்றும் நாம் கருதுகிறோம். ஈழ மக்களின் தியாகமும் போராட்டமும் இன விடுதலை, சுதந்திரத்துக்கானவையே தவிர இன்னொரு தமிழனின் பாசிச அடிமை வாழ்வுக்கானவை அல்ல என்று நாம் கருதுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்குத் தடை விதித்த அடுத்த சில நாட்களிலேயே, மக்கள் யுத்தக் குழு மற்றும் அதன் ஏழு மக்கள்திரள் அமைப்புகளுக்கும் தடை விதித்துவிட்டது, ஆந்திர மாநில அரசு. இரயில்களைக் கவிழ்ப்பது உட்பட பல பயங்கரவாத வன்முறைகளில் ஈடுபட்டிருப்பதாகவும், புலிகள் அமைப்புடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் இதற்குக் காரணம் கூறப்படுகிறது. ஆந்திரப் பிரதேச குடியுரிமை அமைப்பின் பிரமுகர், உதயம் பத்திரிகை நிருபர் உட்பட பலரையும், குறிப்பாக புரட்சியாளர்களையும் போலீசுடன் மோதல் என்கிற பெயரில் படுகொலை செய்வது; புரட்சிப் பாடகர் சஞ்சீவி, டாக்டர் பாலகோபால் போன்றவர்கள் மீது கொலை வெறித் தாக்குதல் நடத்துவது என்று தொடரும் அரசு பயங்கரவாதத்தின் தொடர்ச்சிதான் இந்தத் தடையாகும். தடை செய்யப்படவேண்டிய ஆர்.எஸ்.எஸ்., பஜ்ராங்தள், விசுவ இந்து பரிசத் போன்ற பாசிச அமைப்புகளின் மதவெறி படுகொலை, கலவரங்களுக்குத் துணை நிற்கும் இந்த அரசு, மக்கள் நலனுக்கான இயக்கங்கள் தவிர்க்கமுடியாத புரட்சிகர வன்முறைகளில் ஈடுபடுவதைப் பெரிதுபடுத்தி, பீதியூட்டித் தடை விதித்துள்ளது. காஷ்மீரிலும் பஞ்சாபிலும் தலா ஐந்து குழுக்களும், அசாமில் உல்பாவும் கூடத்தான் தடை செய்யப்பட்டவை. மக்கள் ஆதரவு பெற்றிருக்கும் வரை இம்மாதிரியான தடைகள் அரசு பயங்கரவாதத்தை தங்கு தடையின்றி நடத்த மட்டுமே பயன்படும்; அந்த அமைப்புகளை ஒழித்துவிட முடியாது.

புலிகள் அமைப்புக்கும், மக்கள் யுத்தக் குழு மற்றும் அதன் மக்கள் திரள் அமைப்புகளுக்கும் விதிக்கப்பட்டிருக்கும் தடைகள் மீதான நமது அணுகுமுறை வேறுவேறானவை. மக்கள் யுத்தக் குழுவும் அதன் மக்கள் திரள் அமைப்புகளும் பாசிசத் தன்மை உடையவை அல்ல. மார்க்சிய - லெனினியப் பாட்டாளி வர்க்கப் புரட்சிகரத் தன்மை உடையவை. மக்கள் யுத்தக் குழு ஒரு சில தனிநபர் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டாலும் அவை அரசு பயங்கரவாதத்தின் எதிர்விளைவுகள்; அடிப்படை மக்களுடைய தேவைகளுக்கானவை. அதுமட்டுமல்ல மக்கள் யுத்தக் குழு மீதான இன்றைய தடை ஒரு முன்னோட்டம்தான். அடுத்து, பீகார், மகாராட்டிரம், தமிழ்நாடு என்று புரட்சிகர ஜனநாயக அமைப்புகளுக்கு எதிராக விரிவுபடுத்தப்படக்கூடியது. எதிர்வரும் நர்டுதழுவிய பாசிசப் பிரகடனத்தை முன்னறிவிப்பது. எனவே இத்தடைகளை எதிர்த்து முறியடிக்க வேண்டியது அனைத்து புரட்சிகர ஜனநாயக சக்திகளின் கடமையாகும்.

● ஆர்.கே.

# டி.சி.சி. ஆலை கதவடைப்பு
# தொழிலாளர்கள் அவலம்!

ராணிப்பேட்டையிலுள்ள டி.சி.சி. (TCC - Tamilnadu Chromates and Chemicals Ltd) கம்பெனி, 1975-ல் தமிழக அரசின் டிட்கோ - TIDCO நிறுவனத்தால் தாயகம் திரும்பிய இலங்கை தமிழர்கள் சுமார் 550 பேரைக் கொண்டு தொடங்கப்பட்டது. இந்நிறு[illegible]னம் கடந்த 23.04.92 அன்று கதவ[illegible]பு செய்யப்பட்[illegible]ள்ளது. [illegible]ால் மற்றும் சோப்பு தயாரிப்பிற்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் தயாரிக்கப்பட்டது. இரசாயனப் பொருளின் நச்சுத் தன்மையால் பாதுகாப்பற்ற முறையில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சுவாசக் குழாயில் ஓட்டை விழுந்து உடல்நிலை பாதிக்கப்பட்ட நிலையிலும் 90-91-ம் வருடம் 23 லட்சம் ரூபாய் லாபம் ஈட்டிக் கொடுத்தார்கள்.

1989-ல் இந்நிறுவனம் நலிவுற்ற தொழிற்சாலை என திரைப்படத்துறை இயக்குனர் ஸ்ரீதரிடம் விடப்பட்டது. 1991-ல் ஸ்ரீதரின் நிர்வாகம் திறனற்றது எனக்கூறி அம்பானியின் ரிலையன்ஸ் குருப் துணைத் தலைவரின் மகன் அசோக் பாலசுப்ரமணியன், தொழிலாளர்கள் எதிர்ப்புகளினூடேயே நிர்வாகத்தைக் கைப்பற்றினான். இப்புதிய நிர்வாகம் தொழிலாளர்கள் மீது தொடுத்த தாக்குதல் இவை:

● தொழிலாளர்களை மாதத்தில் பாதி நாட்களே உற்பத்தியில் ஈடுபடுத்துவது; இதனால் அவர்களுக்கு ஊக்கப்படி கிடைக்காமல் செய்வது: மீதி நாட்களில் தொழிலாளர்களை ஆத்திரமூட்டும் வகையில் கழிவுநீர் - கக்கூசு குட்டையை சுத்தம் செய்ய விடுவது நிர்வாகத்தின் தொடர்ச்சியான நடைமுறை. மேற்கண்ட வேலையை அனைவரும் மறுக்கவே 8 நாள் சம்பளப் பிடித்தம் செய்யப்பட்டது. இறுதியில் பிரச்சினை கலெக்டர் வரை சென்று அவருடைய உத்தரவின் பேரில் திரும்பப் பெறப்பட்டது.

● இரசாயன நச்சுப் புகையினால் பாதிக்கப்பட்ட 56 தொழிலாளர்களை மருத்துவச் சான்றிதழ் பெற்று வரச் சொல்லி கட்டாயப்படுத்தியது. அனைவரும் இதை மறுத்துவிட்டனர். மீறி சென்றவர்களை வேலை செய்ய தகுதி இல்லையென கூறி வீட்டிற்கு அனுப்பிவிட்டது.




● திடீரென 163 பேர் அதிகமாக இருப்பதாகக் கூறி தொழிலாளர்களை தனித்தனியாக அழைத்து மிரட்டி பணியவைத்தது. தான் குறிப்பிட்டபடி ரூ.40 ஆயிரத்தையும் கொடுக்காமல் ரூ.8000 முதல் 20,000 வரை பலவாறாக தந்து மீதியை பிறகு தருவதாக ஏய்த்து இதுவரை [illegible] பேரை விருப்பு ஓய்வு திட்டத்தின் கீழ் வெளியேற்றியுள்ளார்கள்.

● 800 பேர் தற்காலிக தொழிலாளர்கள் உட்பட வேலைசெய்த இடத்தில் இப்போது 420 தொழிலாளர்களே வேலை செய்கின்றனர் மேலும் மேலும் ஆட்குறைப்பு செய்து வேலைப்பளுவை இரட்டிப்பாக்கப்பட்டு வருகிறது: கடந்த 3 மாதங்களில் விசாரணையோ முன்னறிவிப்போ இன்றி வேலைக்கு வராதவர்கள் எனக்கூறி 10 பேரை வேலைநீக்கம் செய்துள்ளது.

● 240 டன் உற்பத்தி செய்தாலே லாபம் வரக்கூடிய நிலையில் தொழிலாளர்கள் தங்களுடைய முன்முயற்சியால் இயந்திரங்களை சரிசெய்து 400 டன் உற்பத்தி செய்யும் அளவுக்கு திறன் இருந்தும் தொழிற்சாலையை தொடர்ந்து இயக்க மறுத்துவருகிறது.

ஆலையில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவர் இறந்தால் அன்று விடுப்பு தருவது வழக்கம். 21.5.92 அன்று ஒரு தொழிலாளியின் இறுதிச் சடங்கிற்கு சென்ற தொழிலாளர்கள் அனைவருக்கும் 5 நாள் சம்பளப்பிடித்தம் செய்வதாக அறிவித்தது. இதைக் கண்டித்து 22-ந் தேதி தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். மேலும் 24.5.92 முதல் சில கோரிக்கைகளை முன்வைத்து வேலைநிறுத்த அறிவிப்பு விடுத்தனர். இந்நிலையில் தொழிலாளர்கள் இரவுப் பணியில் உள்ளே இருக்கும் போதே 23.4.92 முதல் ஆலை மூடப்பட்டதாக நிர்வாகம் அறிவித்துள்ளது.

சட்டத்தின் மூலம் மிரட்டி பணியாத தொழிலாளர்களை தற்போது பட்டினிப் போட்டு பணியவைக்க முடிவு செய்துள்ளது நிர்வாகம். ஆனால் தொழிலாளர்கள் சங்க பேதமின்றி ஒற்றுமையுடன் இருக்கிறார்கள். தொழிலாளர்கள் தங்களுடைய கோரிக்கைகளை விட்டுக் கொடுத்தும்கூட நிர்வாகம் ஆலையைத் திறக்க மறுத்து வருகிறது.

தொழிலாளர்கள் ஒற்றுமையுடன் இருப்பது மட்டுமே உரிமைகளை காத்திடாது. புதிய பொருளாதாரக் கொள்கை, புதிய தொழில் கொள்கை போன்ற தொழிலாளர் விரோத தாக்குதலிலிருந்து தொழிலாளர்களின் உரிமைகளை காத்திடும் அரசியலாண்மை ஓட்டுக்கட்சி தொழிற்சங்கங்களுக்குக் கிடையாது. புரட்சிகர தொழிற்சங்கத்திடமே உள்ளது. எனவே தொழிலாளர்கள் புரட்சிகர தொழிற்சங்கத்தை உருவாக்கினால் மட்டுமே தங்களுக்கு விடிவு என்பதை உணரவேண்டும்.

— தகவல்: ம.க.இ.க, ராணிப்பேட்டை.

படிப்பகம்

www.padippakam.com

## ரூ.2500 கோடி பங்குச் சந்தை மோசடி

# புதிய பொருளாதாரக் கொள்கையின் ‘சாதனை’!

**பொருளாதார சூரப்புலி மன்மோகன் சிங்கின் தீர்க்கமான நடவடிக்கைகளால் பங்குச் சந்தையில் போட்டியும், முதலீடும், விலை உயர்வும் நடந்துள்ளதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் தம்பட்டம் அடித்தன. இவை அனைத்தும் அப்பட்டமான பித்தலாட்டம் என்பதை ஹர்ஷத் மேத்தாவின் பங்குச் சந்தை மோசடி நிரூபித்துவிட்டது.**

நாட்டில் இதுவரை நடந்துள்ள மோசடி - தில்லுமுல்லு - ஊழல்களை எல்லாம் விஞ்சிவிடும் அளவுக்கு, 20-ம் நூற்றாண்டில் இதுவரை காணாத மாபெரும் மோசடியைத் திறமையாகச் செய்து பம்பாயின் ஹர்ஷத் மேத்தா எனும் பங்குச் சந்தை தரகர் சாதனையைப் படைத்துள்ளார்: கடந்த ஏப்ரல் மாத இறுதியில் நடந்த 2500 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட பங்குச் சந்தை கொள்ளையும் அரசுத் துறை வங்கிகளே இதற்கு உடந்தையாக இருந்ததும் நாட்டின் மாபெரும் ஊழல் பெருச்சாளிகளையே வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

யார் இந்த ஹர்ஷதத் மேத்தா? 12 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.2000 க்கும் குறைவான சம்பளம் பெற்ற ஒரு சாதாரண எழுத்தர். இன்று பம்பாயின் விலையுயர்ந்த பகுதியில் ரூ.10 கோடி மதிப்புடைய அரண்மனை போன்ற வீட்டில் வாழும் ஒரு கோடீசுவரர். பம்பாயின் பங்குச் சந்தையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு புரோக்கரான இவரது சொத்து மதிப்பு இந்திய அரசாங்கத்தையே விலை பேசும் அளவுக்கு இருக்கும் என்று கருதப்படுகிறது.

குறுகிய காலத்திலேயே ஒரு எழுத்தர் எப்படி குபேரராக முடிந்தது? 1980-ல் தனது வேல்லையை உதறி எறிந்துவிட்டு பம்பாய் பங்குச் சந்தை தரகர்களிடம் பணிபுரிந்த மேத்தா, தொழில் நெளிவு சுழிவுகளைக் (தில்லு முல்லுகளை) கற்றுக் கொண்டு ''குரோமோர் ரிசர்ச் அண்டு அசட்ஸ் மேனேஜ்மெண்ட் லிமிடெட்'' என்ற பங்குச் சந்தை தரகு நிறுவனத்தை உருவாக்கினார். குறிப்பிட்ட சில நிறுவனங்களின் பங்குகளை கோடிக் கணக்கில் முதலீடு செய்து வாங்குவது, அதன் மூலம் அந்நிறுவனத்தின் பங்குகளுக்கு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி பங்குகளின் விலையை உயர்த்துவது, பின்னர் அப்பங்குகளை விற்று கொள்ளை லாபம் ஈட்டுவதென்பது மேத்தாவின் தொழில் உத்தி. பங்குச் சந்தை சூதாட்டத்தில் இது வழமையான உத்திதான் என்றாலும், கொட்டை போட்ட பெரும் தரகர்களைக் காட்டிலும் ஹர்ஷத் மேத்தாவினால் குறுகிய காலத்தில் எப்படி குபேரராக முடிந்தது? அவரது பகற் கொள்ளைக்கு அரசு வங்கிகள் எப்படி உடந்தையாக செயல்பட்டன?

ஒவ்வொரு அரசுடமை வங்கியும் வாடிக்கையாளர்கள் முதலீடு செய்யும் தொகையில் ஒரு குறிப்பிட் சதவீத ரொக்கத்தை அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்யவேண்டும் என்று இவ்வங்கிகளைக் கட்டுப்படுத்தும் ரிசர்வ் வங்கி ஆணையிட்டுள்ளது. உதாரணமாக ஒரு வங்கிக்கு ஒரு மாதத்தில் 100 கோடி ரூபாய் அளவுக்கு முதலீடு கிடைத்தால் அதில் 30 கோடி ரூபாய் அரசாங்கப் பத்திரங்களில் முதலீடு செய்ய வேண்டும். ஒரு வேளை முதலீடு குறைந்துவிட்டால் இந்தப் பத்திரங்களை விற்று ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம். எந்த நேரத்திலும் வங்கியில் பணம் இல்லாமல் போய் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை இழந்துவிடக் கூடாது என்பதற்காக இந்த ஏற்பாடு.

இத்தகைய அரசாங்கப் பத்திரங்களை வாங்கவும் விற்கவும் தரகர்கள், (புரோக்கர்கள்) உண்டு பத்திரங்களை விற்கும் வங்கி, அதை வாங்கும் தரகர்களிடம் இவ்வளவு பத்திரங்களை விற்றதற்கு அத்தாட்சியாக ஒரு ரசீது (Bank Receipt) கொடுக்கும். இதற்கான தொகையை 20, 30 நாட்கள் அவகாசத்தில் தரகர்கள் அந்த வங்கிக்கு செலுத்த சலுகை உண்டு. தரகர்களுக்கு கமிஷனும் உண்டு. பத்திரங்களை வாங்கிய தரகர் அதை இன்னொரு வங்கிக்கு விற்று விடுவார். எந்த வங்கி இப்பத்திரங்களை வாங்கியுள்ளது என்று விற்ற வங்கிக்குத் தெரியாது. தன்னிடமுள்ள அத்தாட்சி ரசீதை பத்திரங்களை வாங்கும் வங்கியிடம் கொடுத்து தரகர் அத் தொகைக்கான அத்தாட்சி ரசீதை பெற்றுக் கொள்வார். பத்திரங்களை வாங்கிய வங்கி இந்த அத்தாட்சி ரசீதை ரிசர்வ் வங்கிக்கு அனுப்பிவிடும். சாதாரணமாகப் பார்த்தால், இது வங்கிகளுக்குடையிலான ஒரு வியாபாரமாகத்தான் தெரியும். ஆனால் இடைப்பட்ட ஒருமாத காலத்திற்குள் தரகர் பல தில்லு முல்லுகளைச் செய்து கோடிக்கணக்கில் கொள்ளையடித்து விடுகிறார். ஹர்ஷத் மேத்தாவின் சூதாட்ட சூட்சுமம் இதில்தான் அடங்கியிருக்கிறது.

**''வங்கி என் கையில்: பங்குச் சந்தை என் பையில்!'' — ஹர்ஷத் மேத்தா**



உதாரணமாக, 1-ந் தேதியன்று ''ஸ்டேட் வங்கி'' ரூ.100 கோடி மதிப்புடைய பத்திரங்களை விற்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கு தரகர் ஹர்ஷத் மேத்தாவின் உதவியைக் கோருகிறது மேத்தா ரூ.100 கோடி மதிப்புக்கு அத்தாட்சி ரசீதை வாங்கிக் கொள்கிறார். அதே நாளில் ''பாங்க் ஆப் இந்தியா'' ரூ.100 கோடிக்கு பத்திரங்களை வாங்க வேண்டி தரகர் மேத்தாவை அழைக்கிறது. மேத்தா பத்திரங்களை விற்று அத் தொகைக்குண்டான அத்தாட்சி ரசீதை ''பாங்க ஆப் இந்தியா'விடம் பெற்றுக்கொள்கிறார். ஆனால் 2-ம் தேதியன்று இந்த அத்தாட்சி ரசீதை அவர் ''ஸ்டேட் வங்கி''யிடம் ஒப்படைப்பதில்லை. அவருக்குத்தான் ஒருமாதகால அவகாசம் இருக்கிறதே! எனவே இந்த அத்தாட்சி ரசீதை ''இந்தியன் வங்கி''யில் ஈட்டுப் பத்திரமாக (Collateral) கொடுத்து அதன் பேரில் 90 கோடி ரூபாய் கடன் வாங்குகிறார். அத்தொகையை பங்குச் சந்தையில் முதலீடு செய்து சூதாடுகிறார். அதன் மூலம் ஒரே வாரத்தில் 150 கோடி ரூபாய் லாபமாக ஈட்டுகிறார். அதன் பிறகு ''இந்தியன் வங்கி''யில் கடனைத் திருப்பிச் செலுத்தி அத்தாட்சி ரசீதைப் பெற்று அதை ''ஸ்டேட் வங்கி''யில் 20-ம் தேதியன்று கட்டி விடுகிறார்.

கடந்த ஓராண்டில் மட்டும் இப்படி 6000 கோடி ரூபாய்க்கும் மேலான அரசு வங்கிகளின் நிதி, பங்குச் சந்தையின் சூதாட்டத்திற்கு மேத்தாவினால் பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் மேத்தா அடித்த கொள்ளை எவ்வளவு என்று பங்குச் சந்தை சூதாட்டக்காரர்களாலேயே மதிப்பிட முடியவில்லை. ஹர்ஷத் மேத்தா என்ற தனிநபர், வங்கி அதிகாரிகளைக் கையில் போட்டுக் கொண்டு இப் பகற் கொள்ளையைச் செய்ததாகக் கருதுவது பாமரத்தனமானது. உண்மையில், வங்கி அதிகாரிகளும், ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகளும், பெரும் தரகு முதலாளிகளும் மேத்தாவை பினாமியாகக் கொண்டு இம் மோசடியை நடத்தியுள்ளனர்.

இல்லையென்றால், பாமர மக்களுக்கு நியாயமாகக் கடன் தருவதற்கு ஆயிரமாயிரம் விதிமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிக்கும் வங்கிகள், மேத்தாவுக்கு மட்டும் கோடிக்கணக்கில் நிதியுதவி செய்யக் காரணம் என்ன? 18 மாதங்களுக்கு முன்பு ''ஸ்டேட் வங்கி'' இம் மோசடிப் பேர்வழிக்கு ரூ.624 கோடிக்கு கடனுதவி செய்திருக்கிறது. ''ஸ்டேட் வங்கி'' ''ரிசர்வ் வங்கி''க்குக் காட்ட வேண்டிய


படிப்பகம்

www.padippakam.com

கணக்கில் இவ்வளவு பெரிய தொகை குறைந்த போதுதான் மெதுவாக இந்த மோசடி கசியத் தொடங்கியது. இந்தப் பணத்தைத் திருப்பிச் செலுத்த மேத்தா நிர்பந்திக்கப்பட்டபோது, வங்கிகளுக்கிடையே குறைந்த கால இடைவெளியில் செய்து கொள்ளப்படும் பரிவர்த்தனை முறையை அவர் பயன்படுத்திக் கொண்டார். அரசுடமை வங்கிகள் அவருக்கு உதவ முன்வந்த போதிலும், பங்குச் சந்தை தரகர்களுக்கு நேரடியாகப் பணம் கொடுக்க விதிமுறைகள் குறுக்கிட்டதால், தேசிய வீட்டு வசதி வங்கியின் தலைவர் பெர்வானியை இடைத்தரகராகக் கொண்டு அவர் மூலம் பல்வேறு அரசு வங்கிகளின் பரஸ்பர நிதிகளிலிருந்து ரூ.306 கோடி பெற்றுக் கொண்டார். மோசடியான அரசு பத்திரங்களை வங்கிகளுக்கு விற்று ரூ.40 கோடி திரட்டினார். மீதியை, தான் முதலீடு செய்திருந்த பங்குகளை விற்று ''ஸ்டேட் வங்கி''யிடம் பெற்ற ரகசியக் கடனை அடைத்துவிட்டார்.

அரசுடமை வங்கியான ''யுனைடெட் கமர்ஷியல் வங்கி'' மேத்தாவிற்கு ரூ.50 கோடி கடன் கொடுத்திருந்தது. அதை அவர் திருப்பிச் செலுத்த முடியவில்லை என்று கடனையே தள்ளுபடி செய்துவிட்டது. சில ஆயிரம் ரூபாய் கடனுக்காக விவசாயிகளின் வீட்டையே கைப்பற்றும் அரசு, பொதுப் பணத்தை ஏப்பமிட்ட மேத்தாவின் 50 கோடி ரூபாய் கடனையே தள்ளுபடி செய்திருக்கிறது. அந்த அளவுக்கு அவர் ஆட்சியாளர்களுக்கு வேண்டப்பட்ட முக்கிய புள்ளி. இப்படி பல மேத்தாக்களின் பகற் கொள்ளைக்காக, அரசுடமை வங்கிகளில் பெறப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாததால், அவற்றை வசூலிப்பதில் பல சிக்கல்கள் இருப்பதால் ஏறத்தாழ ரூ.5000 கோடியை தள்ளுபடி (வஜா) செய்துவிடுமாறு (Right off) சில ஆண்டுகளுக்கு முன்னர் அரசிடம் வங்கிகள் கோரின. 1986-லிருந்து 1991 க்குள் 28 அரசுடமை வங்கிகளில் நடந்த 10,000 க்கும் மேற்பட்ட மோசடிகளால் ரூ.330 கோடிக்கும் மேலான தொகை மேத்தா போன்ற தில்லு முல்லு பேர்வழிகளால் சுருட்டப்பட்டுள்ளது. இப்படி வங்கித் துறை முழுவதுமே ஊழல் புதை சேற்றில் மூழ்கி, மோசடிப் பேர்வழிகளின் கொள்ளைக்கான கருவூலமாகிவிட்டது. இன்னும் சொல்லப் போனால், அரசுடமை வங்கிகளைக் கட்டுப்படுத்தும் ''ரிசர்வ் வங்கி''யும் நிதியமைச்சகமும் இம் மோசடிகளைக் கண்டுகொள்ளாமல் உடந்தையாக இருந்துள்ளன.

பொருளாதார குரப்புலி மன்மோகன் சிங்கின் மாயாஜாலத்தினால் அவரது தீர்க்கமான பொருளாதார நடவடிக்கைகளால் நாடு நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுகிறது என்றும் அதன் விளைவாக இந்த ஆண்டு பட்ஜெட் போட்டதும் பங்குச் சந்தையில் போட்டியும் முதலீடும் பங்குகள் விலை உயர்வும் நடந்துள்ளதாக முதலாளித்துவ பத்திரிகைகள் தம்பட்டம் அடித்தன. இவை அனைத்தும் அப்பட்டமான பித்தலாட்டம் என்பதை ஹர்ஷத் மேத்தாவின் பங்குச்




சந்தை மோசடி நிரூபித்துவிட்டது. மேத்தா போன்ற மோசடிப் பேர்வழிகளின் சூதாட்டத்தால்தான் பங்குகளின் விலை திடீரென உயர்ந்தது. இப்போது மேத்தா திடீரென பங்குகளை விற்கத் தொடங்கியதும் பங்குகளின் மதிப்பு அதள பாதாளத்தில் வீழ்ந்துவிட்டது. மேத்தாவின் நிதி மோசடி அம்பலமானதும் ஏப்ரல் மாதத் துவக்கத்தில் 4388 ஆக இருந்த பம்பாய் பங்குச் சந்தை குறியீட்டு எண் மே மாத மத்தியில் 3086 ஆக வீழ்ந்துவிட்டது. இதே போல இதர பெரு நகரங்களிலும் வீழ்ச்சியடைந்துவிட்ட பங்குச் சந்தை இன்னமும் எழுந்து நிற்க முடியவில்லை. அதிவிரைவாக லாபம் ஈட்டும் பேராசையில் பங்குச் சந்தையில் தமது அற்ப சேமிப்புகளை எல்லாம் முதலீடு செய்த நடுத்தர வர்க்கத்தினரும், மேட்டுக்குடி தொழிலாளர் வர்க்கத்தினரும் இப்போது ஏற்பட்டுள்ள வீழ்ச்சியினால் தலையில் துண்டைப் போட்டுக் கொள்ளவேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

இந்த ஊழல் அம்பலமானதும், எதிர்க்கட்சிகளின் வாயடைக்க உடனடியாக சி.பி.ஐ. விசாரணை மேற்கொள்ளப்படும் என்று நாடாளுமன்றத்தில் நிதி மந்திரி அறிவித்தார். மேத்தாவின் கூட்டாளிகளான ''ஸ்டேட் வங்கி''யின் தலைவர் கொய்போரியா, தேசிய வீட்டு வசதி வங்கித் தலைவர் பெர்வானி, ''யுனைடெட் கமர்ஷியல் வங்கி''யின் இயக்குனர் மார்க்கபந்து ஆகியோர் ஏதாவது உளறிக் கொட்டிவிடுவார்களோ என்றஞ்சி அவர்களை நீண்டகால விடுப்பில் ''ரிசர்வ் வங்கி'' அனுப்பி வைத்துள்ளது. போபர்ஸ் ஊழலை மூடி மறைக்க நடந்த சதிகளைப் போல, மேத்தாவின் கொள்ளையையும் மூடி மறைக்க இப்போதே சதிகள் ஆரம்பமாகிவிட்டன. இதற்கிடையே கடந்த மே 21 அன்று தேசிய வீட்டு வசதி வங்கித் தலைவர் பெர்வானி ஊழலில் சிக்கிக் கொண்ட பீதியால் மாரடைப்பு ஏற்பட்டு மாண்டு போய்விட்டார். இம்மூன்று அரசுடமை வங்கிகள் தவிர, 4 வெளிநாட்டு வங்கிகளும், இரு தனியார் வங்கிகளும் டெல்லி, கல்கத்தாவின் பங்குச் சந்தை தரகர்கள் சிலரும், பெரும் தரகு முதலாளிகளும் இம் மோசடியில் ஈடுபட்டுள்ளதாக செய்திகள் கசிந்துள்ளன. இம் மோசடியின் பின்னணியில் மத்திய - மாநில அமைச்சர்களும், உயரதிகாரிகளும் உள்ளதாக உறுதிப் படுத்தப்படாத செய்திகள் வருகின்றன.

இவற்றையெல்லாம் வெளிவராமல் மூடிமறைத்தோ அல்லது மேத்தாவையும் மூன்று வங்கிகளின் தலைவர்களையும் பலிகடாவாக்கியோ வீழ்ச்சியடைந்துவிட்ட பங்குச் சந்தையை தூக்கி நிறுத்திவிடலாமென ஆட்சியாளர்கள் தரித்தனமாக முயற்சிக்கிறார்கள். ஆனால் பங்குச் சந்தை என்பதே முதலாளித்துவத்தின் பிரிக்க முடியாத மோசடி சூதாட்டம். ஆட்சியாளர்கள் எவ்வளவுதான் முயன்றாலும் நாய்வாலை நிமிர்த்திவிட முடியாது.

நேரு காலத்தில் முந்திரா ஊழல், இந்திரா காலத்தில் நகர்வாலா ஊழல், ராஜீவ் காலத்தில் போபர்ஸ் ஊழல், இப்போது ராவ் காலத்தில் பங்கு மார்க்கெட் ஊழல் என்று காங்கிரசு கயவாளிகளின் ஆட்சியில் ஊழலும் கொள்ளையும் புதிய பரிமாணத்தை எட்டியிருக்கிறது. போபர்ஸ் கொள்ளைக்காரன் ராஜீவுக்கு பாரத ரத்னா விருது கொடுத்தாகிவிட்டது. இனி ஹர்ஷத் மேத்தாவுக்கு தரவேண்டியதுதான் பாக்கி!

1986 - லிருந்து 1991-க்குள் 26 அரசுடமை வங்கிகளில் நடந்த 10,000 க்கும் மேற்பட்ட மோசடிகளால் ரூ.330 கோடிக்கும் மேலான தொகை மேத்தா போன்ற தில்லுமுல்லு பேர் வழிகளால் சுருட்டப்பட்டுள்ளது. கடந்த ஓராண்டில் மட்டும் ரூ.6000 கோடிக்கும் மேல் பங்குச் சந்தை சூதாட்டத்திற்கு மேத்தாவினால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

www.padippakam.com




● *தங்கம் விலை குறைந்துவிட்டது? இந்தியா மேலைநாடுகளுடன் போட்டிபோடும் அளவுக்கு முன்னேறிவிடும்? மன்மோகன்சிங் 'பட்ஜெட்' தயாரிப்பில் நிபுணர்? - இப்படிச் சில பத்திரிகைகள் எழுதிப் புல்லரித்துப் போகின்றன. நடுத்தர அறிவு ஜீவிகள் பேசி பேசி தன் அறிவு விலாசத்தை வெளிப்படுத்துகின்றனர். உண்மையில் தங்கம் விலை வீழ்ச்சியின் காரணம், அதன் பின்னணி எதிர் விளைவு ஆகியவற்றிற்கு விளக்கம் தாருங்கள்.*

*— சி.முத்துப்பாண்டியன், காரைக்குடி.*

★ மத்திய அரசின் 'பட்ஜெட்'டைத் தொடர்ந்து தங்கத்தின் விலை கணிசமான அளவு குறைந்திருக்கிறது. இரண்டு தவணைகளில் ரூபாயின் மதிப்பைக் குறைத்ததோடு, வெளிநாடுகளில் இருந்து கொண்டு வரும் தொகையில் 60% நேரடியாக சந்தை மதிப்புக்கு நாணயமாற்று செய்துகொள்ளலாம் என்கிற முடிவால் மேலும் ரூபாயின் மதிப்பு வீழ்ந்தது. இப்படி ரூபாயின் மதிப்பின் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக இரண்டு அறிவிப்புகளை மன்மோகன்சிங் செய்தார். வெளிநாடுகளில் இருந்து வருவோர் தலா 5 கிலோ தங்கத்தைத் தடையின்றி எடுத்து வரலாம். தங்கம் வைத்திருக்கும் தனியாள் அதை அரசு வைப்பில் போடலாம் - கள்ளத் தங்கமாக இருப்பினும் அதற்குக் கணக்கு கேட்கப் போவதில்லை. உண்மையில் கள்ளக் கடத்தலை சட்டபூர்வமாக அனுமதிப்பதும், கள்ளத் தங்கத்தை வெள்ளையாக மாற்றுவதும்தான் இந்த திடீர் அறிவிப்பும், பத்திரிகை பரபரப்பும். உலகச் சந்தையிலேயே தங்கத்தின் விலை வீழ்ந்ததால் இங்கேயும் கணிசமான அளவு தங்கம் விலை குறைந்தது. ஆனால் இப்போது மீண்டும் உயரத் துவங்கிவிட்டது. வெளி நாட்டில் இருந்து தங்கம் எடுத்துவரலாம் என்றபோதும் அதை அங்கு வாங்குவதற்கு இந்தியர்களுக்குப் போதிய அந்நியச் செலாவணி அதாவது வெளிநாட்டு நாணயம் வேண்டாமா? ஆனால் அதற்குரிய கட்டுப்பாடு தளர்த்தப்படவில்லை என்பதால் "ஹவ்லா" எனப்படும் கள்ளப்பணச் சந்தைதான் மேலும் சூடுபிடித்துக்கொண்டது. அதாவது இங்குள்ள ஒரு தரகனிடம் ரூபாயாகச் செலுத்திவிட்டு, சந்தை மதிப்பில் அதற்குரிய தொகையை அந்நிய நாணயத்தில் அங்குள்ள தரகனிடம் இருந்து பெற்றுக்கொள்வது. இதனால் ரூபாயின் மதிப்பு மேலும் வீழ்வதுதான் காணும் பலன்.

மன்மோகன்சிங் "பட்ஜெட்" தயாரிப்பில் நிபுணர்தான்! பல ஆண்டுகளாக இதை அவர் செய்து வந்திருக்கிறார். ஆனால் யார் யாருடைய நலனுக்கான "பட்ஜெட்" தயாரிக்கிறார் என்பதுதான் முக்கியம். நிலப்பிரபுக்கள், தரகு அதிகார முதலாளிகள், ஏகாதிபத்தியங்களின் நலனுக்கு ஏற்ற வகையில் செய்துவந்தார். இப்போது வந்துள்ள 'பட்ஜெட்' முழுமையானதல்ல; உலக வங்கி, ஐ.எம்.எஃப் ஆகியவற்றின் நேரடி மேற்பார்வையில், அவர்களது கட்டளைகளை ஏற்று தயாரிக்கப்படும் பொருளாதார—நிதித்திட்டத்தின் ஒரு பகுதிதான். மன்மோகன்சிங் மூலமாக அமுலாக்கப்படும் இத்திட்டங்களால் இந்தியா முன்னேறிவிடாது என்பதற்கு ஏற்கனவே உலக வங்கி, ஐ.எம்.எஃப்-பின் பிடியில் சிக்கி குலைந்துபோன மெக்சிகோ, பெரு போ[illegible]மான உலகநாடுகள் சான்றுகளாக உள்ளன. அதுமட்டுமல்ல, மன்மோகன்சிங் - நரசிம்மராவ் கும்பலால் ஏந்திப்பிடிக்கப்படும் இந்த போட்டி —சுதந்திர சந்தைப் பொருளாதாரம் அதன் தாயகமான மேலைநாடுகளிலேயே மீளமுடியாத நெருக்கடி, பின்னேற்றத்தில் சிக்கிக் கொண்டுள்ளது.

● *புத்தமதத்தில் மஹாயாணம் - ஹீனயாணம் என்ற பிரிவுகள் தோன்றியது; சிலை வழிபாட்டை வெறுத்த வரை சிலையாக்கி வணங்கச் செய்தது - பார்ப்பன வருகைக்குப் பின்னர்; தொல்காப்பியத்தில் கடவுள் வாழ்த்து இல்லை; கடவுள் வாழ்த்து எழுதுவது அறிமுகமானதும் பார்ப்பனர் வருகைக்குப் பின்னர்; திராவிட இயக்கங்களில் பார்ப்பனர்களின் வருகைக்குப்பின் கவர்ச்சி அரசியல் தோன்றி வேரூன்றி பின் திராவிடக் கொள்கைகள் கொச்சைப்படுத்தப்படுகின்றன; இவை போலத்தான் தீவிரவாத இயக்கங்களிலும் பார்ப்பனர்களின் ஆதிக்கம் தலை தூக்குகிறது. புதிய ஜனநாயகமும் பார்ப்பனத் தலைமையைக் கொண்டது (தாயகம், உண்மை வாயிலாக அறிகிறோம்) இவர்கள் தீவிரவாதக் கொள்கைகளையும் கொச்சைப்படுத்தத் தயங்கமாட்டார்கள் அல்லது தங்களுக்கே உரிய நரித்தனத்தைக் காட்டி தீவிரவாதக் கருத்தைச் சீரழிப்பார்கள் என்கிறார் எனது நண்பர். இதற்குப் பதிலளிக்கத் தாங்கள் கடமைப்பட்டுள்ளீர்கள் என நினைக்கிறேன்.*

*— வி.சின்னதுரை, பெண்ணாடம்.*

★ நிச்சயமாக, இதற்கு நாங்கள் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளோம். ஏனென்றால் பார்ப்பன, பிற சாதி - மத அமைப்புகளால் மட்டுமல்ல: திராவிடக் கட்சிகளாலும் அவற்றின் வழித்தோன்றிய 'பார்ப்பனரல்லாதோரின்' இனவாதக் குழுக்களாலும் புரட்சி பேசும் முற்போக்கு இளைஞர் அணி, மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம் போன்ற சக்திகளாலும் கூட இப்படிப்பட்ட பகுத்தறிவற்றவர்கள் உருவாக்கப்படுகிறார்கள். எங்களது அரசியல் - சித்தாந்த நிலைப்பாடுகளை மறுக்கவோ, எங்களது விமர்சனங்களுக்கு முகங்கொடுக்கவோ துணியாதவர்கள் தமது கையாலாகாத்தனத்தை மூடி மறைப்பதற்காக இப்படி அவதூறு செய்து வருகிறார்கள். எங்களை நியாயப்படுத்திக் கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. எங்களது அரசியல் பணிகளே தகுந்த பதிலாக இருக்கும். எனினும் இவர்களால் பகுத்தறிவற்றவர்களாக மாற்றப்படும் இளைஞர்களை பகுத்தறிவுப் புரட்சிப் பாதைக்குத் திருப்பவேண்டியுள்ளது. எனவே நிச்சயம் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

பிறப்பால் பார்ப்பனர்களாகவும் இருப்பால் சூத்திரர் - பஞ்சமர்களாக வாழும் ஒரு சில தோழர்கள் எங்கள் அமைப்பின் முக்கியப் பொறுப்புகளில் இருக்கிறார்கள் என்பது உண்மையே! இதை நாங்கள் பகிரங்கப்படுத்தவோ, மூடிமறைக்கவோ வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அவர்கள் மற்றபிற மேல் சாதிகளில் பிறந்த தோழர்களைப் போலவே தமது சாதி ஆதிக்கம், பார்ப்பன சனாதன - வருணாசிரம தர்மத்தை எதிர்த்துப் போராடி, உதறி எறிந்துவிட்டு வந்தவர்கள். அது இந்திய சமூகத்தின் அவக்கேடு, சாடி அழிக்கப்படவேண்டியது என்று வெறுத்து எதிர்த்து வருபவர்கள். இது ஒரு மார்க்சிய - லெனினிய அமைப்பு, இங்கே வன்னியர் - வடுகர், கள்ளர் - கவுண்டர், முக்குலத்தோர் - முதலியார், பார்ப்பனர் - பறையர் என்று கம்யூனிஸ்டுகளில் வகைப் பிரிவுகள் கிடையாது. சமுதாயத்தில் சாதியை ஒழிப்பதற்கு முன் புரட்சிகர அமைப்புகளில் சாதியை ஒழித்திட வேண்டும் என்பதுதான் எமது கொள்கை. பார்ப்பனர்களை எதிர்ப்பது, ஆனால் அவர்கள் உருவாக்கிய பார்ப்பன சனாதன வருணாசிரம அடிப்படையிலான சாதிகளை அங்கீகரித்து, ஆதரித்து தம்மை சத்திரியர், வைசியர் என்ற பெருமை பாராட்டிக் கொள்வது என்கிற பகுத்தறிவுச் சவடால்காரர்களின் கொள்கையில் எங்களுக்கு உடன்பாடு கிடையாது. இப்படிச் செய்வதும் சூத்திரர், பஞ்சமர், சண்டாளர் ஆகிய வருணங்களின் வழிவந்த சாதிகளைச் சேர்ந்த மக்களை இழிவுபடுத்தும் பார்ப்பனத் தன்மை உடையதுதான் என்றே கருதுகிறோம். ஆகவே சாதியைப் பாராட்டுவதற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கிறோம். சாதிப் பெயரைச் சொல்ல மறுப்பதால் போலீசு நிலையங்களில் சித்திரவதைப்படும் புரட்சிக

படிப்பகம்

www.padippakam.com

ரத் தோழர்களைக் கொண்ட ஒரே அமைப்பு இதுதான்!

பார்ப்பனச் சாதிப் பிறப்புடைய தோழர்கள்தான் இந்த அமைப்பின் தலைமையில் இருப்பதாகவும் அவர்கள் முடிவுகள் எடுக்கிறார்கள் என்பதும் அப்பட்டமான பொய்யும் அவதூறுமாகும். அதே சமயம் அவர்கள் மற்றபிற தோழர்களைப் போலவே கடின உழைப்பும், அர்ப்பணிப்பும், சித்தாந்த - கொள்கை உறுதியும், தகுதியும், அனுபவமும், மக்களையும் புரட்சியையும் நேசிப்பதும் இருப்பின் ஜனநாயகபூர்வமான முறையில் தலைமைக்கு வரவும் தடை ஏதும் கிடையாது. ஏனென்றால் இந்த அமைப்புக்குள் சாதி அடிப்படையில் இட ஒதுக்கீடு எதுவும் கிடையாது. இன்ன சாதிப் பிறப்புடையவர்கள் தலைமைக்கு வரலாம் அல்லது வரக்கூடாது என்கிற விதி எதுவும் இந்த அமைப்பில் கிடையாது. எங்கள் மீது அவதூறு பொழியும் அந்த அமைப்புகளில் அப்படி ஒரு விதி இருக்கிறதா, இல்லை. அப்படி விதியின்றியே அதைச் செயல்படுத்துகிறார்களா என்பது தெரியாது.

மேலும் எமது அமைப்பின் அரசியல், சித்தாந்த கொள்கை மற்றும் அமைப்பு முடிவுகள் எதுவும் தனிநபரால் மட்டும் எடுக்கப்படுவதில்லை. ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. தகுதியற்றது என்று கருதினால் தலைமை முழுவதையுமே மாற்றிவிடும் அளவுக்கு ஜனநாயகத் தன்மையுடையதாக ஆரம்பம் முதல் இயங்கிவரும் ஒரே புரட்சிகர அமைப்பும் இதுதான்! ஆகவே இது பார்ப்பனத் தலைமையுடையது என்கிற அவதூறு இதில் இயங்கிவரும் தோழர்கள் அனைவரையும் இழிவுபடுத்தும் முயற்சிதான்!

**பிறப்பு என்பது ஒரு விபத்து போன்று தற்செயலாக நிகழ்வது; அதை வைத்துக் கொண்டு எவரது சமூக, அரசியல் தகுதியும் தீர்மானிக்கப்படக்கூடாது. அவ்வாறு தீர்மானிப்பதுதான் பார்ப்பன சனாதன சித்தாந்தம் ஆகும். மாறாக ஒருவரது குணநலன்கள் அவரது சமூக வாழ்வால் தீர்மானிக்கப்படுவதுதான் பகுத்தறிவு; அறிவியல்; மார்க்சிய - லெனினிய கண்ணோட்டம்.**

நூற்றுக்கும் மேற்பட்ட திராவிட (பூர்வகுடி) இனவாத மற்றும் தமிழினவாதக் குழுக்கள் கட்சிகள் இங்கே உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பார்ப்பனர்களைத் தமிழினத்தவர்களாகக் கருத முடியுமா, இல்லையா என்று தீர்மானிக்கவே இல்லை. தீர்மானித்தவைகளிலும் மூன்று போக்குகள் உள்ளன. மணியரசன் குழு போன்றவை பார்ப்பனர்களையும் தமிழினத்தவர்களாகக் கருதுகின்றன. வேறு சில குழுக்களும் இவ்வாறு கருதினாலும், பார்ப்பனர்களை தலைமைக்கு அனுமதிக்கக் கூடாது என்கின்றன. இன்னும் சில குழுக்கள் பார்ப்பனர்கள் தமிழினத்தவர்களே கிடையாது என்கின்றன; பார்ப்பனர்கள் அனைவரையும் தமிழ்நாட்டில் இருந்து விரட்டிவிட வேண்டும் என்கின்றன.

பார்ப்பன சனாதன வருணா சிரம தர்மத்தை முற்றாகத் துடைத்தெறியாமல் இந்த நாட்டின் ஜனநாயகப் புரட்சியோ, அதன் ஒரு அங்கமாகிய இன விடுதலையோ பூர்த்தியாகாது என்று நாம் கருதுகிறோம். ஆகவே, பார்ப்பன சனாதன வருணாசிரம தர்மத்தை எப்படியாவது தக்கவைத்துக் கொண்டு ஆதிக்கம் வகிக்க வேண்டும் என்று வலிந்து நிற்பவர்கள் ஜனநாயகப் புரட்சிக்கும் அதன் ஒரு அங்கமாகிய இனவிடுதலைக்கும் எதிரிகள்தாம். அப்படிப்பட்ட எதிரிகளாக பார்ப்பனர்கள் அனைவரையுமே கருத முடியாது. பார்ப்பன மற்றும் பார்ப்பனர் அல்லாத பிற மேல் சாதிகளையும் சேர்ந்த நிலப்பிரபுக்களையும் தரகு அதிகார முதலாளிகளையும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளையுமே கருதமுடி

அவ்வாறின்றி பார்ப்பன சாதி - வருணா சிரமப் பிறப்புடைய அனைவருமே எதிரிகள், ''உள்ளிருந்து அடுத்துக் கெடுக்கும் நரித்தனம்'' அவர்களுடைய பிறவிக் குணம். அதற்கு விதிவிலக்குக் கூட கிடையாது என்பதுதான் பல தமிழினவாத, திராவிட (பூர்வகுடி) இனவாதக் கட்சிகள், குழுக்களின் நிலைப்பாடு. இந்தக் கேள்வியும் அந்த அடிப்படையிலேயே எழுப்பப்படுகிறது. இது முற்றிலும் தவறானது, பகுத்தறிவுக்கே எதிரானது, மார்க்சிய - லெனினிய சித்தாந்தத்துக்கு மாறானது; (பூர்வகுடி) இனவாத சித்தாந்தம் (RACIALISM) என்றே நாம் கருதுகிறோம்.

''பிறவிக்குணம்'' என்று எதுவுமே கிடையாது; ஒருவரது குணநலன்கள் அவரது சமூக வாழ்வால்தான் உருவாகிறது, தீர்மானிக்கப்படுகிறது; பிறவியினால் அல்ல. பிறப்பு என்பது ஒரு விபத்தைப் போன்று தற்செயலாக நிகழ்வது; அதை வைத்துக் கொண்டு எவரது சமூக, அரசியல் தகுதியும் தீர்மானிக்கப்படக்கூடாது. இதுதான் பகுத்தறிவு, அறிவியல் மார்க்சிய - லெனினியக் கண்ணோட்டம்.

குறிப்பிட்ட வருண, சாதிப் பிறப்புத்தான் மனிதர்களது குணநலன்களையும், சமூக, அரசியல் தகுதியையும் தீர்மானிப்பதற்கு அடிப்படையாக வைக்கவேண்டும் என்பது உண்மையிலேயே பார்ப்பன சனாதன சித்தாந்தம் ஆகும். இதுவேதான் நாஜி சித்தாந்தத்தின் மூலகர்த்தா நீட்சே உருவாக்கிய தத்துவம். இதன் அடிப்படையில்தான் ஆரிய இனமே உலகை ஆளும் அறிவும், திறமையும், தகுதியும் உடையது என்ற இட்லரின் கோட்பாடு வகுக்கப்பட்டு ஆரிய இனமல்லாதவரை அடிமைப்படுத்தவும், வேட்டையாடவும் கிளம்பினர். நீட்சே - இட்லரின் சித்தாந்தத்தைப் போன்றதுதான் திராவிட (பூர்வகுடி) இனவாதமும் ஆகும். ஆகவே இதை நாம் ஏற்கவில்லை.

அதுமட்டுமல்ல, பார்ப்பனர்களின் ''அடுத்துக் கெடுக்கும் நரித்தனம்'' பற்றித் தமிழர்களை எச்சரித்துவரும் பல்வேறு கட்சிகளும், குழுக்களும் கூட தமது வசதிக்கேற்ப பார்ப்பனர்களை சேர்த்துக் கொள்கின்றனர். மணியம்மையை பொருந்தாத் திருமணம் செய்துகொண்டு ''சொத்துக்களுக்கு வாரிசாக்குவது என்கிற யோசனையைப் பெரியாருக்குக் கொடுத்த ராஜாஜி அவரது திராவிட இயக்கத்தைவரைவிட நம்பகமானவராகக் கருதப்பட்டார். வி.பி.ராமன், அண்ணாத்துரைக்கும், குகன் கருணாநிதிக்கும் ஆலோசகர்களாக வைத்துக் கொள்ளப்பட்டனர். சொத்துக்களைப் பாதுகாப்பதற்கு வீரமணியும், குடும்பத்தின் பத்திரிகை சங்கிலித் தொடரை நடத்துவதற்கு கருணாநிதியும் பார்ப்பனர்களிடம் பொறுப்பளித்துள்ளனர். தாமே பெரியாரின் உண்மையான வாரிசு, பார்ப்பனர்களைச் சேர்க்காத ஒரே கட்சி தம்முடையதே எனக்கூறும் ராமதாசின் பாட்டாளி மக்கள் கட்சி கோவை மாவட்டத்துக்கும், ''தினப்புரட்சி'' நாளேட்டிற்கும் பொறுப்பளித்துள்ளவர்களில் முக்கிய புள்ளி பிறப்பால் ஒரு பார்ப்பனர். இப்படி இரட்டைவேடம் போடும் தன்மை எங்களிடம் கிடையாது.

எல்லாவற்றுக்கும் மேலானது, அரசியல் சித்தாந்தம், கொள்கை நடைமுறை ஆகியவற்றில் பார்ப்பனீயத்துடன் எந்த வகையிலாவது சமரசம் செய்து கொள்கிறோமா, எதிர்த்துப் போராடாமல் இருக்கிறோமா என்பதுதான் முக்கியமானது. எங்களது தோழர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள 'தடா', தே.பா.ச. மற்றும் அரச துரோக வழக்குகள் அனைத்தும் ''இவர்கள் பார்ப்பன எதிர்ப்பாளர்கள்'' என்கிற குற்றச்சாட்டு அடிப்படையிலானவைதான். புலிகளை ஆதரிக்காதவர்கள் என்று அறிந்தும் எங்கள் மீது அடக்குமுறை ஏவிவிடப்படுவதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்றாக இது இருக்கிறது. ஆனால் எங்களைப்போல ''பார்ப்பன - பாசிச எதிர்ப்பு'' என்கிற முழக்கத்தை முன்வைக்காது மழுப்பும் குழுக்களும், கட்சிகளும் இதைப் பார்ப்பனத் தலைமை என அவதூறு செய்கின்றனர். தங்களை புலி, சிங்கம், யானையைப் போல புறநானூற்று வீரர்கள் என்று பீற்றிக் கொண்டவர்கள் எல்லாம் ராஜீவ் கொல்லப்பட்ட 1991 மே.21-ந் தேதி நள்ளிரவுக்குப் பிறகு எங்கே போனார்கள். ராஜீவைக் கொன்ற தாணு போதை மருந்து, வரைமுறையற்ற பாலுறவுக்கு அடிமையானவள், அவளும் சிவராசன், சுபா, போன்றவர்களும் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் என்று எழுதியும் பேசியும் ''நரித்தனமாக'' நடந்து கொள்வதுதான் இப்போதைய அரசியல் திறமை என நியாயப்படுத்துகிறார்கள். எங்களது தமிழின உணர்வைச் சந்தேகிப்பதற்கு இப்படிப்பட்டவர்

www.padippakam.com

# பாசிச ஜெயலலிதா அரசின் கொடுமை காரணமின்றி ஈழத் தமிழருக்குச் சிறை

மதுராந்தகத்தில் ஈழத் தமிழ் அகதிகள் சிறப்பு முகாம் என்கிற பெயரில் ''ஒரு தனிச் சிறை'' உள்ளது. எவ்விதக் காரணமும் இல்லாமல்அப்பாவிஈழத்தமிழர்கள்பலர்இந்தச் சிறையில் அடைக்கப் பட்டுள்ளனர். அவர்கள்தங்களுக்குஎதிராகஇழைக்கப்படும்அநீதியை வெளி உலகுக்கு அறிவிக்கக் கோரி ''புதிய ஜனநாயகம்'' பத்திரிக்கைக்கு எழுதியுள்ளகடிதத்தைஇங்கேபிரசுரிக்கிறோம்.

அன்புள்ளஐயா,

பொருள்: பதிவு செய்து கொண்டுள்ள அப்பாவிஈழத்தமிழர்களுக்குஇந்தமுகாமில் உள்ளஈழஅகதிகளாகியநாங்கள்கடந்தஏழு மாதங்களுக்கு மேலாக பல இன்னல்களை அனுபவித்துவருகிறோம்.

இலங்கையில், இன வன்முறையினால் நாங்கள்தாளமுடியாதபிரச்சினைகளைஅனுபவித்தோம்.எங்கள்உயிரைக்காத்துக்கொள்வதற்காகநாங்கள்படகிலும்,விமானத்திலும் இந்தியா வந்தோம். அங்கே இன வன்முறைக்கு எங்கள் உற்றார் உறவினரை இழந்தோம். இங்காவது அமைதியாக வாழலாம் என்று அகதிகளாக வந்தோம். முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வரையிலும் அந்த நம்பிகைஇருந்தது.அந்நிகழ்ச்சிக்குப்பிறகுஈழத் தமிழர்களுக்குக் கெட்ட காலம் துவங்கியது. ஈழத் தமிழ் அகதிகள் தமது குடியிருப்புகளுக்கு அருகிலுள்ள போலீசு நிலையங்களில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்று தமிழக அரசு அறிவித்தது: நாங்கள் அவ்வாறே பொறுப்புடன்பதிவுசெய்துகொண்டோம்.

பதிவு செய்து கொள்ளப் போலீசு நிலையத்திற்குப் போனபோதுதான் எங்களில் பலருக்கு மிகவும் கொடுமை இழைக்கப்பட்டது 1991 ஜூலை 16-ந் தேதி போனவர்களை அடுத்தடுத்த நாள் வரும்படி இழுத்தடித்தார்கள். கடைசியாக 19-ந் தேதி பதிவு செய்யப்பட்டது. அதன் பிறகு, எங்களைப் பற்றி விசாரணை நடத்தி ஒரு வாரத்துக்குள் விடுவதாக உறுதி கூறி மதுராங்கத்துக்கு அனுப்பினர். வாரம் மாதங்களாகின ஏழு மாதங்களாகியும் எவ்வித விசாரணையும் இல்லாமல் போனது. போலீசின் வாக்குறுதியால் நாங்கள் ஏமாற்றப்பட்டோம். இந்த முகாமுக்குக் கொண்டுவரப்பட்ட இன்னொரு வகையினரும் இங்குள்ளனர். இவர்கள் மீனம்பாக்கம் விமானநிலையத்தில்இருந்துகொண்டுவரப்பட்டார்கள்;பதிவுசெய்யவில்லைஎன்றகாரணத்திற்காகவும் அல்ல. இவர்கள் ஒரு ஏஜெண்டின்உதவியுடன்மேலைநாடுகளுக்குப் போவதற்காக மீனம்பாக்கம் விமான நிலையம்போனவர்கள். இவர்களதுபயண-கடவுச்சீட்டுகளில் ஏதோ சில குறைபாடுகள் இருப்பதாகக்கூறிவிமானநிலையஅதிகாரிகளால் போலீசிடம் ஒப்படைக்கப் பட்டவர்கள்.

போலீசார் எங்களை நீதி விசாரணைக்காக வழக்கு மன்றங்களுக்கு அனுப்பாது இந்த முகாமுக்கு அனுப்பியதால் துரதிருஷ்டம் நேர்ந்தது. இம்முகாமில் உள்ள பெரும்பான்மையினரானநாங்கள்விமானநிலையத்தில் இருந்து கொண்டுவரப்பட்டு இம்முகாமில் சிறை வைக்கப்பட்டுள்ளோம்; ஆயுதமேந்திய போலீசார் எப்போதும் காவலிருக்கின்றனர்.

இன்னமும்நாங்கள்பதிவுசெய்துகொள்

## ஜெர்மனியில்...

# தொடரும் நாஜிகளின் தாக்குதல்

31.01.1992 வெள்ளிக்கிழமை காலை 4.30 மணியளவில் ஹெசன் (Hessen) மாநிலத்திலுள்ள லம்பர்த்தைம் (Lampertheim) என்ற நகரத்தில் அகதிகள் வாழும் கட்டிடம் ஒன்று நாஸிகளினால் தீவைத்துக் கொளுத்தப்பட்ட போது இலங்கை அகதிக் குடும்பத்தைச் சேர்ந்த நிலீமா (25 வயது, 4 மாதக் கர்ப்பிணிப் பெண்) மொகைதீன் (30 வயது), மூபக் (13 மாதக் குழந்தை) (தெகிவளையைச் சேர்ந்தவர்கள்) ஆகியோர் தீக்கிரையாயினர்.

இக்கட்டிடத்தில் லெபனான், துருக்கி, சிரியா, நைஜீரியா, இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த இருபது அகதிகள் வசித்தனர்.

பலகையிலான படிகளில் வைக்கப்பட்ட தீ இருபது நிமிடங்களுக்குள் மேற்பகுதிகள் முழுவதற்கும் பரவியது. வெளியேறும் படிகளில் முற்றாக தீப்பிடித்திருந்தமையாலும், பால்க்கணி இல்லாமையினாலும் நிலீமா குடும்பத்தினர் தப்பித்துக் கொள்ள முடியவில்லை. இக்கட்டிடத்தில் வசித்த மிகுதிப் பதினேழு பேரும் பால்க்கணி, கூரை ஆகிய வழிகளாலும் மரங்களில் தாவியும் உயிர் தப்பிக் கொண்டனர். இச்சம்பவத்தில் காயமுற்ற நைஜீரியர் ஒருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

உயிர் தப்பியவர்களின் தகவலின்படி நிலீமா குடும்பத்தினர் உதவிகேட்டுக் கதறி

பாற்ற முடியாமல் வெளியே தப்பிவந்து பொலிஸாரிடம் அவர்களைக் காப்பாற்றும்படி கதறிக் கேட்டதாகவும் அதற்கு தீ எரிந்து கொண்டிருக்கிறது; ஒன்றும் செய்ய முடியாது என்று பொலிஸார் அவர்களைக் காப்பாற்ற எந்த முயற்சியும் எடுக்கவேயில்லை என்றனர்.

இம்மூவரின் உடல்கள் அடையாளங் கண்டுகொள்ளச் சிரமமான வகையில், கருகிய நிலையில் மதியம் 12 மணியளவில் கண்டெடுக்கப்பட்டது.

பொலிஸாரின் தகவல்களின் படியும், பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் இத்தீப்பிடித்ததற்கான காரணம் என்னவென்று சரியாகத் தெரியாது என வழமை போலவே உண்மையை மூடி மறைக்கின்றன.

இப்படிகளில் தீப்பிடிக்க வேறு எந்தக் காரணங்களும் இருக்க முடியாது. ஏற்கனவே இங்கிருந்த குப்பைத் தொட்டிகள் சென்ற ஆண்டு செப்டெம்பர் மாதம் நாஸிகளால் கொளுத்தப்பட்டன. அண்மையில் ஜெர்மனியில் பரவலாக நடைபெற்ற அகதிகளுக்கெதிரான நாஸிகளின் தாக்குதல் முறைகளும் இங்கே கையாளப்பட்டுள்ள முறையும் ஒரேமாதிரியாக இருப்பதனால் இச்சம்பவம் நாஸிகளினாலேயே செய்யப்பட்டது என்று திட்டவட்டமாகக் கருதப்படுகிறது.

பின்பு ஒவ்வொரு இரவும் வெளிவாசற் கதவைப்பூட்டி பாதுகாப்பை உறுதி செய்து கொண்டு படுக்கைக்குச் செல்வது மொகைதீனின் வழக்கம். நாஸித் தாக்குதல்கள் அடங்கியிருப்பதுபோல் தென்பட்டதால் இவ்வழமையை மொகைதீன் அக்கறையின்றி விட்டுவிட்டார்.

தப்பியவர்களின் ஒருவரான நைஜீரியப் பெண்மணி ஒருவரின் தகவல்:

''அதிகாலை நாலரை மணி. நானும் எனது சகோதரனும் தூங்கிக் கொண்டிருந்தோம். திடீரென புகைவருவதாய் உணர்ந்தேன். படியால் ஓடித் தப்பலாம் என ஓடினேன். படி முழுவதும் தீ. கீழ்மாடியில் நிலீமா, மொகைதீன் கதறல் சத்தம் கேட்டது. அவர்கள் உதவி உதவி எனக் கத்தினர். அவர்கள் வீட்டிற்குப் பால்க்கணி இல்லை. படிகளினால் ஏறிவந்தால் எங்கள் வீட்டுக் கூரையினால் தப்பி ஓடலாம். ஆனால் படிகளிலும் தீ. அவர்களால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. நான் திரும்பி ஓடிவந்து ஓட்டைப் பிய்த்து வெளியேறினேன். அவர்களின் உதவி உதவி என்ற கதறல் சத்தம் இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அவர்களின் சாவும் இச்சம்பவமும் கொடூரமானது. ஆனால் இதிலும் கொடுமையான விசயம் என்னவென்றால், நிலீமா குடும்பத்தினர் உள்ளே உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கையில் பொலிஸாரிடம் நானும் இன்னும் பலரும் கதறிக் கேட்டும் அவர்களைக் காப்பாற்ற சரியான முயற்சிகள் எடுக்கப்படவில்லை. பொலிஸார் முயற்சி எடுத்திருந்தால் அவர்களைக் காப்பாற்றியிருக்கலாம்''.

www.padippakam.com



# முடிவு எப்போது?

(புலிகளின் பாசிச நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி ஈழப் போராளிகள் வெளியிட்டுள்ள பிரசுரம்),

டிசம்பர் மாதத்தின் இறுதி வாரம்.

வழமை போல தனது புத்தகக்கடையில் வீட்டுக்குத் தேவையான மரக்கறிச் சாமான்களை வாங்கிவந்து வைத்துவிட்டு வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்தார் அவர். சில நிமிடங்களில் ஆயுதமேந்திய சில புலி வீரர்கள் சைக்கிளில் வந்து குதித்தனர். யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியிலிருந்த அந்தப் பழைய கடைத் தொகுதியிலிருந்த இந்தப் பிரபலமான - ஆனால் முக்கி முனகி இயங்கிக் கொண்டிருந்த - புத்தகக் கடைக்குள் அவர்கள் நுழைந்தனர்.

புத்தகங்களை விற்பது ஒரு பணம் தரும் வியாபாரமாக இருந்த முன்னைநாள் யாழ்ப்பாணம் அல்ல இது இன்று. புத்தகங்களைப் படிக்க நேரமில்லாமல் தமது அன்றாட ஜீவனோபாயத்திற்காக அழவேண்டியது ஒருபுறம். இந்தக் குறிப்பிட்ட கடையின் புத்தகங்களைப் படிப்பது தேசத் துரோகமாகக் கருதப்படுமோ என்ற அச்சம் மறுபுறமுமாக புத்தகங்கள் விலைபோகாத ஒரு புத்தகக்கடையாக அது மாறி விட்டது.

அந்தப் புத்தகக் கடைதான் ''யாழ் புக் கவுஸ்''.

நுழைந்தவர்கள் புத்தகங்கள் படிப்பதற்கே என்பதை அறியாதவர்கள் என்பதால் விடயம் வேறு என்பது வியாபாரத்திற்காக உட்கார்ந்திருந்த அவருக்குத் தெரிந்திருந்தது.

சீன உளவாளி என்றும் இன்னோரன்ன வேறு அடைமொழிகளாலும் அழைக்கப்பட்ட முன்னைநாள் கொம்யூனிஸ்ட் கட்சியின், உறுதி குலையாத ஒரு கொம்யூனிஸ்ட் அவர். தேசத்தினதும், மக்களினதும் விடுதலையில் ஆர்வமும், அக்கறையும் கொண்டிருந்தபோதும் நடைமுறையிலுள்ள 'அரசியற் பாதையில் நம்பிக்கை அற்றிருந்த' காரணத்தால் 'துரோகிகளில் ஒருவராக இருக்கக் கூடுமோ' என வழமைபோல அநியாயமாகச் சந்தேகிக்கப்பட்டவர் அவர்.

அவர் வேறு யாருமல்ல.

அறுபதுகளில் தீவிர கொம்யூனிஸ்ட்டும், போராளி பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும், எழுபதுகளிலும், எண்பதுகளிலும் பலராலும் மதிக்கப்பட்ட அறிவாளிகளில் ஒருவருமான மணியண்ணை தான் அவர்.

மாற்றுக் கருத்தாளரையும் மதிக்கத் தெரிந்த பண்பாளரான அவர் ஒரு குழந்தைக்குத் தந்தை. ஒன்றரை வயதான பெண் குழந்தைக்குத் தகப்பனான அவர் தனது குடும்பத்தின் நிலை பற்றி எடுத்துக் கூறியது எப்போதும் போலவே புலிகளுக்குக் கேட்கவில்லை.

அறுபதுகளில் அரசியற் காரணங்களுக்காக பல்கலைக்கழகப் படிப்பை உதறிவிட்டு முழுநேர கொம்யூனிஸ்ட்டுக் கட்சி (மா-லெ) உறுப்பினராகிய மணியண்ணை தொழிலாள விவசாயிகளின் விடுதலைக்காக தன்னை அர்ப்பணிக்க எந்நேரமும் தயாராக இருந்த ஒரு தேசபக்தன்.

''விசாரணை''க்காக புலிகளால் அழைத்துச் செல்லப்பட்ட மணியண்ணை எதிர்பார்த்தது போலவே இன்று வரை விடுவிக்கப்படவில்லை. இலங்கையின் இனவெறி அரசு, இந்திய மேலாதிக்கம் என்பவற்றை உறுதியாக எதிர்த்த அவர் மக்களின் சனநாயகம், விடுதலை என்பவற்றின் அவசியம் தேசவிடுதலைக்கு ஒரு தவிர்க்க முடியாத முன்நிபந்தனை என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தவர் என்பது மட்டுமே அவரது ''துரோகம்''

அண்மைக்கால கைதுகளான கேசவன் முதல் செல்வி, தில்லைநாதன் வரையான கைதுகளில் இவர் பதின்மூன்றாவது நபர்.

கடத்தப்பட்டதிற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. அப்படித் தெரிவிப்பது அவசியம் என்ற அம்சம் புலிகளின் அகராதியில் ஒருபோதும் இல்லை.

மனிதர்களது சிந்தனைகளை நசுக்கி தாம் நினைப்பதைப் பேசுவதே தேசபக்தி என்று சாதிக்கும் ''விடுதலை''ப் புலிகளது போராட்டம் தேடித் தந்திருப்பது அராஜகத்திற்கும், அடக்குமுறைக்கும், மனிதப் படுகொலைகளுக்குமான சுதந்திரத்தையே.

தேசத்தின் வாயை மூடிவிட நினைக்கும் புலிகளுக்கு ஒரு வார்த்தை: இதை மூடுவதற்கு உள்ள ஒரே வழி முழுத் தேசத்தின் மக்களையுமே கொன்று விடுவதுதான்! அதைச் செய்யுங்கள். பின்னர் மனிதர்கள் இல்லாத தேசத்தில் புலிகள் மட்டுமே உறுமும் விடுதலை வாங்கித் தந்த பெருமை உங்களுக்குச் சேரும்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழ் பேசும் மக்களே...

கேசவன்... செல்வி... தில்லை... வரிசையில் இன்று புதிதாக மணியண்ணை. இன்னும் எத்தனை பேரோ? இந்த மனிதப் படுகொலைகளுக்கு முடிவுகட்டுவது எல்லோரும் அழிந்த பின்பா?

— நண்பர்கள் (ஈழம்)

ளாதவர்கள் என்ற கருத்தே பரப்பப்படுகிறது. ஆனால் அது அப்பட்டமான பொய். நாங்கள் சட்டப்படி நடக்கும் குடிமக்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் ஒவ்வொருவரும் தனித்தனியே போலீசு நிலையங்களில் பதிவு செய்து கொண்டுள்ளோம்.

இம்முகாமில் சிறைவைக்கப்பட்ட எங்களின் உண்மை நிலை குறித்து பத்திரிக்கைகள் எழுதுமானால் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்போம். இதனால் பதிவு செய்து கொண்டவர்கள் தாம் என்பதைப் பொதுமக்களுக்கும் மேலதிகாரிகளுக்கும் தயவு செய்து தெளிவுபடுத்துங்கள்.

உங்களில் யாராவது போய் சம்பந்தப்பட்ட போலீசு நிலையத்தில் சோதித்தறிந்து கொள்ளலாம். மேலும் விவரம் அறிய விரும்பினால் பேட்டி காண இந்த முகாமுக்கு வரலாம். நாங்கள் நேர்மையானவர்கள், உண்மையான அப்பாவிகள். நீங்கள் பேட்டி காண வந்தால் நாங்கள் அப்பாவிகள் தாம் என்பதை உணர்வீர்கள். தயவு செய்து பேட்டி காண வாருங்கள். நன்றி!

தங்கள் உண்மையுள்ள
**தமிழ் அகதிகள்,**
சிறப்புமுகாம், மதுராந்தகம்

ராஜீவ் கொலைக்காக ஈழத் தமிழ் அகதிகள் அனைவரையும் பழிவாங்கும் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் வெறி இவர்கள் விவகாரத்தில் அப்பட்டமாகவே தெரிகிறது. இந்தக் கடிதத்துடன் 32 பேர்கள் அடங்கிய ஒரு விவரப் பட்டியலும் இணைக்கப் பட்டிருந்தது. அவர்கள் எந்தச் சமயத்தில், எந்த விதத்தில், இங்கு வந்து சேர்ந்தார்கள்; எப்போது, எந்தப் போலீசு நிலையங்களில் பதிவு செய்து கொண்டார்கள்; சென்னை விமான நிலையத்தில் வைத்து எப்படிக் கைது செய்யப்பட்டார்கள் என்கிற விவரங்கள் அப்பட்டியலில் உள்ளது.

இப்படி எவ்விதக் குற்றமும் செய்திடாதவர்களையும் இந்த அரசு விதித்துள்ள எல்லா சட்ட விதிகள் கட்டுப்பாடுகளுக்கும் பணிந்து நடப்பவர்களையும் முகாமில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் ஏராளம், எண்ணிக்கை தெரியாது. எவ்வளவு அடக்குமுறைகள் பாய்ந்தாலும் இந்த ஈழத் தமிழர்களுக்காக - அவர்களின் விடுதலை உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டியது ஜனநாயகவாதிகள் அனைவரது கடமையாகும். ●

படிப்பகம்

www.padippakam.com



# கறுப்பின மக்களின் பேரெழுச்சி

''உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு; நவீன நாகரீகத்தின் தொட்டில்; செல்வச் செழிப்பில் மிதக்கும் குபேரபுரி. மனித உரிமைகளை மதித்து நடப்பதோடு, அதை உலகுக்கே உபதேசிக்கும் முன்னேறிய ஜனநாயக நாடு'' அமெரிக்காவைப் பற்றி கற்பிக்கப்படும் இவையாவும் கட்டுக் கதைகள் என்பதை சமீபத்திய வெள்ளை நிறவெறியர்களின் தீர்ப்பும், அதைத் தொடர்ந்து நடந்த கறுப்பின மக்களின் எழுச்சியும் மீண்டும் நிரூபித்துள்ளது.

அமெரிக்காவின் இரண்டாவது பெரிய நகரம் லாஸ் ஏஞ்செல்ஸ். கடந்த ஆண்டு மார்ச் 3-ம் நாளன்று இரவில் ரோட்னிகிங் என்ற 26 வயதான கறுப்பினத் தொழிலாளி அதிவேகமாகக் காரில் சென்ற குற்றத்திற்காக போலீசார் வழிமறித்து மடக்கிப் பிடித்து அவரை அடித்து நொறுக்கினார்கள். தொடர்ச்சியாக துப்பாக்கிக் கட்டையால் தாக்கியும் குத்தியும், மயங்கி விழுந்தபோதிலும் தொடர்ந்து உதைத்தும் ரத்த வெள்ளத்தில் மிதக்கவிட்டார்கள். கிங்கைத் தாக்கிய 4 போலீசாரும் வெள்ளையர்கள். ஏறத்தாழ ஒன்றரை நிமிடத்திற்குள் 56 உதைகள் கிங் மீது விழுந்தது. அவரது கபாலம் 12 இடங்களில் விரிசல் கண்டது. கண் புருவ எலும்பும் முகவாய் எலும்பும் முறிந்ததோடு மூன்று பற்கள் உடைந்து, முகத்தின் இடதுபுறம் ஏறத்தாழ செயலிழந்தது. அறுவை சிகிச்சைக்குப் பின்னர் கிங் ஓரளவு தேறினார்.

இக் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை தற்செயலாக சாலையின் எதிர்ப்புறமிருந்த ஒருவர் தனது வீடியோவில் படமெடுத்தார். இந்த வீடியோ வெளியானதும் உலகமே அதிர்ச்சியடைந்தது. அந்த நான்கு வெள்ளை போலீசு மிருகங்களும் 'ஜனநாயக' அமெரிக்காவில் தண்டிக்கப்படுவது நிச்சயம் என்றே பலரும் நம்பினர். ஆனால் கடந்த ஏப்ரல் 29-ம் தேதியன்று நடுவர் மன்றம் அவர்களைக் குற்றவாளிகள் அல்ல என்று தீர்ப்பளித்தது. இதிலே கொடுமை என்னவென்றால் தீர்ப்பளித்த 12 ஜூரிகளும் (நடுவர்) வெள்ளையர்கள். இதற்காகவே லாஸ் ஏஞ்செல்ஸில் வழக்கை நடத்தாமல் வெள்ளையர்களே ஜூரிகளாக உள்ள சிமி பள்ளத்தாக்கில் விசாரணை நடத்தப்பட்டது. ரோட்னி கிங்கை கைது செய்ய முயற்சித்தபோது அவர் எதிர்த்து தாக்கியதால், போலீசார் தவிர்க்கவியலாமல் தாக்கவேண்டியிருந்தது என்று வெள்ளை ஜூரிகள் நியாயம் கற்பித்தனர்.

அமெரிக்க போலீசின் மிருகத்தனமான தாக்குதலை தொலைக்காட்சி ஒளிபரப்புகளில் பார்த்தவர்களுக்கே இந்த நிறவெறித்தனமான தீர்ப்பு ஆத்திரம் கொள்ளச் செய்ததென்றால், நேரடியாக நிறவெறிக் கொடுமைகளை அனுபவித்துவரும் கறுப்பின மக்களின் கொந்தளிப்பையும் குமுறலையும் பற்றி கேட்கவா வேண்டும். ஏப்ரல் 29-ம் தேதியன்று மதியம் தீர்ப்பு வெளியானதும் லாஸ் ஏஞ்செல்ஸ் நகரமே கொதித்தெழுந்தது. கறுப்பின மக்கள் வீதிகளில் திரண்டு அமெரிக்காவின் போலி ஜனநாயகத்துக்கு எதிரான கலகத்தில் இறங்கினர். அரசு வாகனங்களும் கட்டிடங்களும் தாக்கப்பட்டன. லாஸ் ஏஞ்செல்ஸ் நகரமே தீப்பற்றி எரிந்தது. கடைகள் சூறையாடப்பட்டன. போலீசின் தாக்குதலும் எதிர்த் தாக்குதலும் மூன்று நாட்களுக்கு மேல் நீடித்தது. 51 பேர் மாண்டார்கள். ஏறத்தாழ 2000 பேர் படுகாயமடைந்தனர். சுமார் 1500 கோடி ரூபாய் மதிப்புடைய சொத்துக்கள் நாசமாயின. லாஸ் ஏஞ்செல்சில் பற்றிய கலகத் தீ சான்பிரான்சிஸ்கோ, சியாட்டில், பிலடெல்பியா, லாஸ் வேகஸ், டல்லாஸ், அட்லாண்டா, பிட்ஸ்பர்க், நியூயார்க் என பல நகரங்களுக்கும் பற்றிப் பரவி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. ஊரடங்கு உத்திரவும் அவசர நிலைப் பிரகடனமும் புஷ் அரசு அறிவித்த போதிலும் ராணுவத்தை ஏவியும்கூட கொந்தளிப்பைத் தணிக்க முடியவில்லை. இந்த வழக்கை மைய அரசின் நீதிமன்றத்தில் விசாரிக்க ஏற்பாடு செய்வதாக அதிபர் புஷ் அறிவித்த பின்னரே கலகம் தணிந்தது.

பிற ஆசிய நாடுகளிலிருந்து அமெரிக்காவில் குடியேறிய மக்களைவிட மிகக் கேவலமாகவே கறுப்பர்கள் நடத்தப்படுகிறார்கள். ஐம்பது ஆண்டுகளுக்குமுன் குடியேறிய ஆசியர்களுக்கு உள்ள உரிமையும் சலுகையும் கூட கறுப்பர்களுக்கு இல்லை. ''வெள்ளையர்கள் எங்களை தரக்குறைவாக நடத்துகிறார்கள். ஆனால் அமெரிக்க கறுப்பர்களை ஒப்பிடும்போது எங்கள் நிலைமை மேலானதுதான்'' என்கிறார் ஒரு பாகிஸ்






● லாஸ் ஏஞ்செல்ஸ்: கலகத்தில் இறங்கிய கறுப்பின மக்கள் மீது போலீசு அடக்குமுறை

● ரோட்னிகிங்

● நிறவெறிக் காட்டுமிராண்டிகளுக்கு எதிராக கறுப்பின மக்களின் போர்க்கோலம்



www.padippakam.com

# நாகரீகக் கோமான்களின் காட்டுமிராண்டித்தனம்

உலக மக்களால் வெறுத்தொ
துக்கப்பட்ட, கறுப்பின மக்கள்
தான அடக்கு முறைக்குப் பேர்
பான நாடு தென்னாப்பிரிக்கா.
ஆனால் தென்னாப்பிரிக்க நிறவெறிக்
காட்டுமிராண்டித் தனத்துக்கு முன்
னாடியாகத் திகழ்வது அமெரிக்கா
தான்!

● நாகரீக நாடான அமெரிக்காவில்
அடிமைகளாக்கப்பட்ட கறுப்பின மக்
கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு உரி
மைக்காக கிளர்ந்தெழுந்து போராடி
னார்கள். அது 1861-லிருந்து 1865
வரை மாபெரும் உள்நாட்டுப் போராக
வெடித்தது. அடிமை முறையை
1865-ல் சட்டப்படி ஒழிக்க வழி
வகை செய்த குடியரசுத் தலைவர்
ஆபிரகாம் லிங்கன் சுட்டுக் கொல்லப்
பட்டார். ஏட்டளவில் அடிமை முறை
ஒழிந்தது. நடைமுறையில் தீண்
டாமை நீடித்தது.

● பள்ளி - கல்லூரிகளில் கறுப்பர்க
ளுக்கு இடம் கிடையாது. ஒருவேளை
அனுமதிக்கப்பட்டாலும் அவர்களுக்
குத் தனி இடம். 1954-ல் பள்ளிகளில்
நிற வேறுபாடின்றி குழந்தைகளை
சேர்க்க வேண்டுமென உச்ச நீதிமன்
றம் உத்திரவிட்டது. ஆனாலும் 1960
வரை போலீஸ் பாதுகாப்புடன்தான்
கறுப்பின சிறுவர்கள் பள்ளிக்குச்
செல்ல வேண்டியிருந்தது. 1957-ல்
ஆர்க்கன்சாஸ் பகுதியிலுள்ள லிட்
டில் ராக் எனும் பள்ளியில் 9 கறுப்
பின சிறுவர்களைச் சேர்க்க மத்திய
அரசின் ராணுவம் பாதுகாப்புக்காக
வரவேண்டியிருந்தது.

● பேருந்துகளில் முன் இருக்கைகள்
வெள்ளையர்களுக்கும் பின் இருக்
கைகள் கறுப்பர்களுக்கும் என நிற
வெறி நீடித்தது. 1955 இறுதியில்
இதை எதிர்த்து கறுப்பின மக்கள்
ஓராண்டுக்கும் மேலாகப் போராடி
வெற்றி பெற்றனர்.

● 1964 வரை பொது இடங்களில்,
ஓட்டல்களில் ஒன்றாக உட்கார்ந்து
சாப்பிட கறுப்பர்களுக்கு அனுமதி
இல்லை. இதை எதிர்த்து இளைஞர்
கள் ஓட்டல்களின் எதிரே தொடர்ச்சி
யாக தர்ணா போராட்டம் நடத்தினர்.
அதன் பிறகே சமவுரிமைக்கான சட்
டம் நிறைவேற்றப்பட்டது.

● மிசிசிபி பகுதியில் வெள்ளை நிறவெறி
யர்கள் நடத்திய அட்டூழியங்கள் ரத்தத்தை
உறைய வைக்கக் கூடியவை. கறுப்பர்க
ளுக்கு தனி சேரி, தனி சர்ச், தனி இடுகாடு
என தீண்டாமை தொடர்ந்து நீடித்தது. "கூ
கிளாக்ஸ் கிளான்" எனப்படும் வெள்ளை நிற
வெறி பயங்கரவாதிகள், கறுப்பர்கள் மீது
திடீரென கொலை வெறித் தாக்குதல்
நடத்தி, வீடுகளையும் உடமைகளையும்
நாசமாக்குவதை தமது தொழிலாகக்
கொண்டிருந்தனர். இப்பகுதியிலுள்ள
கறுப்பர்களை வாக்காளர்களாக பதிவு
செய்ய மறுத்து, வாக்குரிமையை
வெள்ளை நிறவெறியர்கள் தொடர்ந்து
நிராகரித்து வந்தனர். "கூகிளாக்ஸ்கிளான்"
கும்பலின் தாக்குதல்கள் இன்றும்கூட நீடிக்
கிறது.

● கல்வி, வீட்டு வசதி, வேலை
வாய்ப்பு முதலான அனைத்திலும் பின்
னுக்குத் தள்ளப்பட்டுக் கிடந்த கறுப்
பின மக்கள் 1965-லிருந்து 66 வரை
சமவுரிமை கோரி போராடினர். ஒவ்
வொரு சிறுபான்மை வகுப்பினருக்
கும் அவர்களுடைய மக்கள் தொகை
விகிதத்துக்கேற்ப வேலை தரப்பட
வேண்டுமென 1978-ல்தான் சட்டம்
நிறைவேறியது.

● அமெரிக்காவைப் பொறுத்தவரை
கறுப்பின மக்கள் நாலாந்தர குடிமக்
கள்தான்! வெள்ளைநிற ஆண்கள்
முதலிடம்; வெள்ளைப் பெண்கள்
இரண்டாம் தரத்தினர். பிற நாடுகளி
லிருந்து குடியேறியவர்கள் மூன்றாம்
தரத்தினர். கறுப்பின மக்களுக்கு
கடைசி இடம் என்று சில அமெரிக்க
பத்திரிகைகளே அம்பலப்படுத்துகின்
றன.

● அமெரிக்க குழந்தைகள் அதிகம்
விரும்பும் விளையாட்டுப் பொம்மை
"பார்பி". அதிலும் வெள்ளை பார்பி,
கறுப்பு பார்பி உண்டு. நிறவெறி எந்த
அளவுக்குப் புரையோடிப் போயுள்
ளது என்பதற்கு ஓர் உதாரணம் இது.

தொடர்ந்து சாதாரண ஜனநாயக
உரிமைகள்கூட மறுக்கப்பட்டுள்ள
கறுப்பின மக்களில் 65% பேர்
வறுமை - வேலையின்மையால் அவ
திப்படுகின்றனர். ஏற்கனவே குமுறிக்
கொண்டிருக்கும் கறுப்பின மக்களை
ரோட்னி கிங் மீதான போலீஸின்
கொலை வெறித் தாக்குதலும் நிறவெ
றித்தனமான தீர்ப்பும் மேலும் ஆத்திர
மடையச் செய்து, கலகத்தில் இறங்
குவதற்கு தூண்டுகோலாக அமைந்து
விட்டது. தொடர்ச்சியாக மூன்று
நாட்கள் பற்றி எரிந்த லாஸ் ஏஞ்
செல்ஸ் நகரில் இப்போது அமைதி
திரும்பியிருக்கலாம். ஆனால் கறுப்
பின மக்களின் ஜனநாயகத்துக்கான
போராட்டத் தீ இன்னமும் நீறுபூத்த
நெருப்பாகத்தான் உள்ளது.

ன்காரர். இதன் காரணமாகவே கறுப்பின
மக்கள் ஆசியர்களை வெறுத்தொதுக்குகின்
றனர். சில மாதங்களுக்கு முன்பு கறுப்பின
சிறுமி ஒருத்தியை தனது கடையில் திருடிய
தாகக் குற்றஞ்சாட்டி கொரிய நாட்டு மளி
கைக் கடைக்காரி சுட்டுக் கொன்றாள்.
ஆனால் கொரிய கடைக்காரி தண்டிக்கப்பட
வில்லை, விடுவிக்கப்பட்டாள். இப்போது
லாஸ் ஏஞ்செல்சில் கலகம் மூண்டதும்
பலா கொரிய வர்த்தகர்கள் மீதும் கறுப்
பின மக்களின் கோபம் திரும்பியது. அவர்க
ளது கடைகள் சூறையாடப்பட்டு தீயிடப்பட்
டன.

பல்லாண்டுகாலமாக நிறவெறிக்
கொடுமைக்கு ஆளாகி நிற்கும் கறுப்பின மக்
கள், கல்வியும் வேலை வாய்ப்பும் மறுக்கப்
பட்டு மிக மோசமான வறுமையில் சிக்கித்
தவிக்கிறார்கள். அதிலும் முன்னாள் அதிபர்
ரீகன் கொண்டு வந்த புதிய பொருளாதாரக்
கொள்கை கடந்த பத்தாண்டுகளுக்குள் வறு
மையையும் வேலையின்மையையும் தீவிர
மாக்கிவிட்டது. அதைத் தொடர்ந்து ஆட்
டங்களை முற்றாகப் புறக்கணித்துவிட்ட
தால், குடியிருக்க வீடுகூட இல்லாமல் அட்
டைப் பெட்டிக்குள்ளும், உடைந்த கார்க
ளுக்குள்ளும் இரவுப் பொழுதைக் கழிக்கும்
நிலைக்கு அமெரிக்க ஏழைகள் தள்ளப்பட்
டுள்ளனர். இதுவும் போதாதென்று தற்
போது அமெரிக்காவில் நிலவும் மோசமான
பொருளாதார மந்தநிலை காரணமாக
ஆலை மூடலும், ஆட்குறைப்பும், வேலை
நீக்கமும் அதிகரித்து நடுத்தர வர்க்கத்தினரே
பிச்சை எடுக்கும் நிலைக்கு ஆளாகியுள்ளது.
கடந்த 5 ஆண்டுகளில் வறுமை 1/3 பங்கு
அதிகரித்துவிட்டது; நடுத்தர வர்க்கத்தினர்
61-லிருந்து 32% ஆகச் சுருங்கிவிட்டனர்
என்று அமெரிக்க பொருளாதார நிபுணர்
களே ஒப்புக் கொள்கின்றனர்.
ஒருபுறம் கோடீசுவரர்கள், மறுபுறம் கோடிக்
கணக்கான ஏழைகள் என அமெரிக்கா இரு
வேறு சமூகங்களாக ஏற்கனவே பிளவுபட்
டுப் போய்விட்டது. ஏற்கனவே நிலவும் வறு
மையும் வேலையின்மையும் சேர்ந்து கறுப்
பின மக்களை கலகப்பாதைக்கு இழுத்துக்
கொண்டிருந்த நிலையில் ரோட்னி கிங் விவ
காரம் தீப்பொறியாக விழுந்தது. கலகத் தீ
பற்றி எரிந்தது.

தனது சொந்த நாட்டிலேயே ஜனநாய
கத்தைப் பின்பற்றாத அமெரிக்கா, உலகின்
ஜனநாயகக் காவலனாக வேஷங்கட்டி ஆட
என்ன யோக்கியதை இருக்கிறது? சொந்த
நாட்டிலேயே மனித உரிமைகளை மதித்து
நடக்காத அமெரிக்கா, உலகெங்கும் மனித
உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக கூப்பாடு
போட்டு பொருளாதாரத் தடைகளை விதிக்க
என்ன அருகதை இருக்கிறது? அமெரிக்கா
வின் ஜனநாயக - மனித உரிமைக்கான கூச்
சல்கள் எல்லாம் அதன் உலக மேலாதிக்கத்
துக்கும் உள்நாட்டில் அடக்குமுறையை
மறைப்பதற்காகவும் தான். அதன் ஆதிக்கக்
கனவுகளுக்கு கறுப்பின மக்கள் ஒரு பேரிடி
யைக் கொடுத்துள்ளார்கள். உலகெங்கு
முள்ள ஒடுக்கப்பட்ட நாடுகளும் மக்களும்
கறுப்பின மக்களின் போராட்டத்தை ஆத
ரித்து அதை அமெரிக்க மேலாதிக்க எதிர்ப்
புப் போரா...

படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

மத்தியப் பிரதேசத்திலுள்ள ரேவா நகரைச் சேர்ந்த 63 வயதான் ஆர்.எஸ்.எஸ். தொண்டர் ஒருவர் சாலை ஓரத்தில் சைக்கிள் ரிப்பேர் கடை வைத்து பிழைத்து வந்தார். நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் அவரது கடையையும் இந்துவெறி பாரதீய ஜனதா அரசு கடந்த ஆண்டில் இடித்துத் தள்ளியது. பாதிக்கப்பட்ட சிறு கடைக்காரர்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து தருவதாக வாக்களித்த அரசு இன்றுவரை நிறைவேற்றவில்லை. பிழைக்க வழியின்றித் தவித்த அம்முதியவர் தலைநகர் போபாலிலுள்ள பாரதீய ஜனதா கட்சி அலுவலகத்தின் அருகே உண்ணாவிரதப் போராட்டம் நடத்திப் பார்த்தார். பின்னர் டெல்லி 'போட்கிளப்' மைதானத்தில் குடும்பத்தோடு கடந்த மார்ச் மாதத்தில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினார். பாரதீய ஜனதா தலைவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்களே தவிர இன்றுவரை எந்தப் பலனும் இல்லை. இந்து ராச்சியத்தில் ஆர்.எஸ்.எஸ். தொண்டருக்கே இந்த கதி என்றால், மற்றவர்களின் நிலைமை பற்றி சொல்லவா வேண்டும்.

ஜெர்மனியில் 18 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொழிலாளர்கள் போர்க்கோலம் பூண்டுள்ளனர். கடந்த ஏப்ரல் இறுதியிலிருந்து 11 நாட்களுக்கு அரசுத்துறை ஊழியர்கள் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தால் ஜெர்மனியே நிலைகுலைந்து போனது. இப்போராட்டத்தின் வெற்றியைக் கண்டு ஜெர்மனியின் தனியார் துறை தொழிலாளர்களும், இதர ஐரோப்பிய நாடுகளின் தொழிலாளர்களும் போராட்டத்தில் இறங்கத் தீர்மானித்துள்ளனர். கம்யூனிசம் தோற்றுவிட்டது; முதலாளித்துவம்தான் ஒரே தீர்வு என்று முழங்கிய ஏகாதிபத்தியவாதிகள் இப்போது மூண்டெழும் போராட்டங்களைக் கண்டு விழி பிதுங்கி நிற்கின்றனர்.

காஷ்மீரத்தை இந்தியாவும் பாகிஸ்தானும் பங்குபோட்டுக் கொண்டதை நியாயப்படுத்தும் ஐ.நா.மன்றத்தின் நிலைப்பாட்டை எதிர்த்தும் சுயநிர்ணய உரிமையைக் கோரிக்கையையும் வலியுறுத்தி, கடந்த ஏப்ரல் 24-ம் தேதியன்று பாகிஸ்தானுக்கு வருகை தந்த ஐ.நா.பொதுச் செயலர் புட்ரோஸ் காலிக்கு எதிராக ஜம்மு-காஷ்மீர் விடுதலை முன்னணியினர் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். கா.வி. முன்னணியின் தலைவர் அமானுல்லாகான் தலைமையில் திரண்ட காஷ்மீர் இன மக்கள் விமான நிலையத்தில் புட்ரோஸ் காலியின் காரைச் சூழ்ந்து கொண்டு "வெட்கம்! வெட்கம்!!" என்று எள்ளி நகையாடியும், "அமெரிக்க ஏஜெண்டே வெளியேறு!" என்று முழக்கமிட்டும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். ஆனால் இந்த சுதந்திரம் கூட இந்தியாவில் இல்லை. பஞ்சாப் விவகாரத்தில் ஐ.நா. மன்றத்தைத் தலையிடக் கோரி டெல்லி வந்த ஐ.நா. பொதுச் செயலரிடம் மனு கொடுக்கச் சென்ற சீக்கிய தலைவர்களை இந்திய அரசு கைது செய்து சிறையிலடைத்துள்ளது.



காஷ்மீர் மாநிலத்தில் இந்துக்கள் அதிகமாக வாழும் ஜம்மு பிராந்தியத்தில் 1985 ஆம் ஆண்டுக்குப் பிறகு இதுவரை எந்தவொரு படித்த இளைஞருக்கும் வேலை கிடைக்கவில்லை. புதிய திட்டங்கள் மூலம் 5000 பேருக்கு வேலை வாய்ப்பளிப்பதாக கூறிய அரசு, ஐந்தாண்டுகளுக்கு மேலாகியும் அதை நிறைவேற்றவில்லை. இதனால் வெறுப்படைந்த வேலையில்லாப் பட்டதாரிகள் 500 பேர் திரண்டு தலைமைச் செயலகத்தின் முன்பு தீக்குளிக்க முற்பட்டனர். பூஞ்ச் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் திரண்ட பட்டதாரிகள் அரசு அலுவலகங்களுக்குள் புகுந்து இருநாட்களுக்கு அதன் செயல்பாட்டை முடக்கினர். காஷ்மீரில் தொடரும் சுயநிர்ணய உரிமைப்போரை ஒடுக்க முஸ்லிம்களுக்கு எதிராக இந்துக்களை நிறுத்தி, இந்துக்களுக்குப் பல சலுகைகளை அறிவித்து கலவரத்தீயை மூட்டி குளிர்காய நினைத்தது இந்திய அரசு. அதன் காகித அறிவிப்புகளைக் கண்டு எரிச்சலடைந்த இந்து இளைஞர்கள் இப்போது போராடக் கிளம்பிவிட்டதைக் கண்டு அலறுகிறது இந்திய அரசு.

குவைத் நாட்டில் பணிப் பெண்களாக வேலை செய்யும் ஏழை ஆசிய நாட்டுப் பெண்கள் தமது எஜமானர்களிடம் அனுபவிக்கும் சித்திரவதைகளும் பாலியல் வன்முறைகளும் அண்மைக்காலமாக தீவிரமாகிவிட்டன. பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த ரோசி என்ற பணிப்பெண் தனது நாட்டிற்குச் செல்ல விடுப்பு கேட்டதற்காக கத்தியால் கீறி சித்திரவதை செய்யப்பட்டார். டினா என்கிற பெண் தனது எஜமானர்களால் கும்பலாக கற்பழிக்கப்பட்டு, புகார் செய்ய முயன்றதற்காக மிருகத்தனமாக சித்திரவதை செய்யப்பட்டார். கர்ப்பிணிப் பெண்ணைக்கூட சவுக்கால் அடித்து உதைப்பது, சூடு வைப்பது என்று குவைத்திய எஜமானர்கள் தங்களைக் கேவலமாக நடத்துகின்றனர் என்று அங்கிருந்து தப்பி வந்த வங்கதேச, பிலிப்பைன்ஸ், இலங்கைப் பெண்கள் வேதனையுடன் பேட்டியளித்துள்ளனர். குவைத்தின் 'விடுதலை' ஆசிய நாட்டுப் பணியாட்கள் மீதான அடக்குமுறையைத் தவிர வேறொன்றையும் சாதிக்கவில்லை.

அண்மையில் கிம்பகதூர் தாபா என்ற சிவசேனா உள்ளூர் தலைவர் பம்பாய் மாஃபியா குண்டர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். பம்பாயின் வடகிழக்குப் பகுதியிலுள்ள ஆயிரக்கணக்கான சேரி வாழ் மக்களிடம் மாமூல் வாங்கிக் கொண்டு ஆட்டிப்படைத்து வந்த குண்டர்படைத் தலைவர் இவர். தமது ஆதிக்கத்துக்குப் போட்டியாக இவரது குண்டர்படை செயல்படுவதால் ஆத்திரமடைந்த ஒரு மாஃபியா கும்பல் இவரைத் தீர்த்துக் கட்டி பழிவாங்கியது. இதே போல கடந்த மாதத்தில் வித்தல் சவான் எனும் சிவசேனா எம்.எல்.ஏ, போட்டி மாஃபியா கும்பலால் சுட்டுக் கொல்லப்பட்டார். இக் கொலைகள் யாவும் சிவசேனாவுக்கும், மாஃபியா கும்பலுக்குமான கள்ளக்கூட்டை மீண்டும் நிரூபித்துள்ளது. அரசியலை கிரிமினல் மயமாக்கிவரும் சிவசேனா, அதற்குப் பொருத்தமான விலையைத்தான் கொடுத்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

ரஷியாவிலுள்ள லெனின் கிராடு நகரத்துக்கு செயின்ட் பீட்டர்ஸ்பர்க் என்று பெயர் மாற்றம் செய்த முதலாளித்துவ கும்பல் கடந்த மாதத்தில் அங்கே கம்யூனிச எதிர்ப்பு சுவரொட்டிகளை ஒட்டத் தொடங்கினர். இதைக் கண்டு ஆத்திரமடைந்த கம்யூனிச ஆதரவாளர்களும், உழைக்கும் மக்களும் அச்சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்து முதலாளித்துவவாதிகளுடன் நேரடி மோதலில் இறங்கினர். பின்னர், போலீசு வந்து தடியடி நடத்தி மக்கள் கூட்டத்தைக் கலைத்தது. அதைத் தொடர்ந்து லெனின் பிறந்த நாளையும், மார்க்ஸ் பிறந்த நாளையும் ரஷிய உழைக்கும் மக்கள் எழுச்சியுடன் கொண்டாடினர். மே முதல் வாரத்தில் பாசிசத்தின் மீதான வெற்றியின் நினைவு நாள் கூட்டம் நடந்தபோது அதில் பங்கேற்க வந்த முதலாளித்துவ அதிபர் எல்ட்சினை உழைக்கும் மக்கள் சூழ்ந்துகொண்டு கேலி செய்து விரட்டியடித்ததோடு, பாசிச எதிர்ப்புப் போராளி தோழர் ஸ்டாலின் புகழ் ஓங்குக! முதலாளித்துவம் ஒழிக! என்றும் முழங்கியுள்ளனர். கம்யூனிசம் தோற்றுவிட்டது என்று ஏகாதிபத்தியவாதிகள் பரிகசிக்கப்போக, இப்போது ரஷ்யாவில்புதிய வேகத்தோடு உழைக்கும் மக்கள், கம்யூனிச ஆரதவுப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக நடத்தி வருகின்றனர்.

“ஒழுங்காக உங்கள் நாட்டிற்குத் திரும்பிவிடுங்கள். இல்லையேல் எந்த நிவாரண உதவியுமின்றி உங்களைப் பட்டினி போடுவோம் என்று இந்திய அதிகாரிகள் எங்களை மிரட்டினார்கள். எப்படியும் பட்டினி கிடந்து சாகத்தான் போகிறோம். அதில் எங்கள் மண்ணில் சாவதே மேலானது என்று நாங்கள் திரும்பியுள்ளோம்” என் கண்ணீருடன் அவர்கள் பேட்டியளித்தனர். அவர்கள் தமிழகத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்ட ஈழ அகதிகள். இத்தகவலை இலங்கையிலுள்ள மனித உரிமைக் குழுக்களும், சமூக சேவை அமைப்புகளும் ஐ.நா. மன்றத்துக்கு அனுப்பிய புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளன. ஈழ அகதிகள் கட்டாயமாக வெளியேற்றப்படவில்லை என தமிழக கோயபல்சுகள் ஓயாமல் கத்துவதற்கான காரணம் இப்போது புரிகிறதல்லவா?

ஆந்திராவின் கல்வி மந்திரியான ரங்காராவுக்கு அளிக்கப்படும் பாதுகாப்புச் செலவு மட்டும் மாதத்துக்கு 5 லட்ச ரூபாய் ஆகிறது. கறுப்புப் பூனைகளின் பாதுகாப்புடன் அவர் நகர்வலம் செல்லும் இரண்டு குண்டு துளைக்காத கார்களின் விலையோ 12 லட்ச ரூபாய். இதுதவிர அவர் பயன்படுத்தும் “சேடக்” ஹெலிகாப்டருக்கான செலவு தனியானது. ரங்காராவ் வேறு யாருமல்ல. பிரதமர் நரசிம்மராவின் சீமந்த புத்திரன்தான்! இது ஒருபுறமிருக்க ஐதாராபாத்திலும் வங்காரா கிராமத்திலும் வசிக்கும் நரசிம்மராவ் குடும்பத்தாருக்கு அளிக்கப்படும் பாதுகாப்புச் செலவு மட்டும் கடந்த 10 மாதங்களில் ரூ.130 லட்சமாகியுள்ளது. கஜானாவைக் காலி செய்து பூனைகளின் பாதுகாப்பில் வாழும் இந்தப் பெருச்சாளிகள்,



மகாராஷ்டிரா, குஜராத் மாநிலங்களில் நிலவும் வறட்சி மற்றும் தண்ணீர் பஞ்சத்தை சாதகமாக்கிக் கொண்டு வர்த்தகர்கள் மக்களைக் கொள்ளையடித்து வருகின்றனர். பீடு மாவட்டத்தில் தண்ணீரை திரவத் தங்கம் என்று அழைக்குமளவுக்கு விலை மதிப்பற்ற அரிய பொருளாகிவிட்டது. வறட்சிப் பகுதியில் 200 லிட்டர் கொள்ளளவுடைய ஒரு பீப்பாய் தண்ணீரின் விலை ரூ.15 ஆகும். ஒரு நாளைக்கு லாபமாக ரூ.2000 சம்பாதிப்பதாக வர்த்தகர்கள் பெருமையுடன் கூறுகின்றனர். பல காங்கிரசு எம்.எல்.ஏ-க்கள் தமது பினாமிகள் மூலம் தண்ணீர் வியாபாரத்தில் முனைப்பாக இறங்கிவிட்டார்களாம். காங்கிரசு கயவாளிகள் மக்கள் மீது கொண்டுள்ள கரிசனையின் லட்சணம் இதுதான்!

ஆடு மாடுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதைப் போல பிஞ்சுக் குழந்தைகளை ஏற்றுமதி செய்யும் வியாபாரம் இலங்கையில் இப்போது கொடிகட்டிப் பறக்கிறது. கடந்த பத்தாண்டுகளில் 11,862 குழந்தைகள் இவ்வாறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளனர். மேலை நாட்டுத் தம்பதிகளால் தத்து எடுத்துக் கொள்ளப்படும் இக்குழந்தைகள் ஏறத்தாழ 5000 டாலருக்கு இலங்கை தாய்மார்களால் விற்கப்பட்டுள்ளன. பத்துமாதம் சுமந்து பெற்ற குழந்தையை விற்குமளவுக்கு இலங்கைத் தாய்மார்களைப் பிடித்துள்ள வறுமையின் அவலத்தையும், மேலை நாடுகளில் பெருகிவரும் இனவெறியின் காரணமாக இக்குழந்தைகளின் எதிர்காலத்தையும் எண்ணும்போது மிகவும் வேதனைக்குரியதாக இருக்கிறது.



ராஜீவ் நினைவு நாளை ஒட்டி இளைஞர் காங்கிரஸ் சார்பில் டெல்லியிலிருந்து திருப்பெரும்புதூருக்கு யாத்திரை நடத்தப்பட்டது. ராஜீவ் படங்களைக் கட்டிக்கொண்டு 48 கார்களில் ஊர்வலமாக வந்த இந்த யாத்திரையில், ஒரு மாருதி ஜிப்சி காரினுள் மது பானங்களும் எடுத்துச் செல்லப்பட்டன. இத்தகவலை போட்டோ ஆதாரங்களுடன் கேரள காங்கிரசுக்காரர்களே வெளியிட்டு அம்பலப்படுத்தியுள்ளனர். குடி, கூத்து இல்லாமல் கூட்டமோ ஊர்வலமோ நடத்தினால் எந்த காங்கிரசுக்காரனும் வரமாட்டான் என்று பாவம், இவர்களுக்குத் தெரியாது போலிருக்கிறது!

அசாமில் “உல்பா” போராளிகளை சரணடையுமாறு கெடு விதித்தும்கூட எதிர்பார்த்த அளவுக்கு யாரும் சரணடையவில்லை. ஏமாற்றமடைந்த அரசும் ராணுவமும் அப்பாவி மாணவர் - இளைஞர்களைப் பிடித்துச் சென்று சித்திரவதை செய்து அவர்களை “உல்பா” போராளிகள் என்று கணக்கு காட்டி சரணடைவு நாடகத்தை தீவிரமாக நடத்திவருகிறது. போராளிகளைத் தேடுவது என்ற பெயரில் ராணுவக்கும்பல் நடத்திவரும் அட்டூழியங்களும் பாலியல் வன்முறைகளும் எல்லை மீறிவிட்டன. இவற்றைப் பற்றி எழுதும் பத்திரிகையாளர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். எல்லாவிதமான உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில், ராணுவ அட்டூழியங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கௌகாத்தி பல்கலைக் கழக மாணவர்கள் பொது இடத்தில் மொட்டை அடித்துக் கொண்டனர். பாசிச முசோலினியை நினைவுபடுத்தும் வகையில் மொட்டையடித்து மாணவர்கள்

படிப்பகம்

www.padippakam.com

## உலக வங்கி - ஐ.எம்.எப். உத்திரவு நாசமாக்கப்படும் விவசாயம்

# சுதந்திர வர்த்தகத் திட்டம் நாட்டைச் சூறையாடுவதற்கே!

*சர்வதேச வர்த்தகம் பற்றிய டங்கல் திட்டத்தை முன்வைத்து, சுயசார்பை நாசமாக்கி, நமது நாட்டு விவசாயத்தின் மீது ஏகாதிபத்தியங்கள் தங்குதடையின்றி ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பதைப் பற்றி சென்ற இதழ்களில் பார்த்தோம். அதன் தொடர்ச்சியாக, விவசாயத்தில் சுதந்திர வர்த்தக திட்டத்தை வைத்து அமெரிக்கா நிர்பந்தித்து வருவதையும் அதனால் ஏற்படப்போகும் கோரமான விளைவுகளையும் பார்ப்போம்.*

விவசாயத்தில் சுதந்திர வர்த்தகம் என்ற திட்டத்தை டங்கல் முன்மொழிதல்கள் மூலம் அமெரிக்கா முன்வைக்கிறது. இது தொடர்பாக புதிதாக சில விதிகளை நிறைவேற்ற வேண்டும் என்று 'காட்' பேச்சு வார்த்தைகளில் நிர்ப்பந்தித்து வருகின்றது.

### "தாராள இறக்குமதிக்கு தடைகளை நீக்கு!"

முதலாவதாக, உணவு தானிய இறக்குமதிகளுக்கு இருக்கின்ற அளவு ரீதியான கட்டுப்பாடுகளை இந்தியா போன்ற வளரும் நாடுகள் ஒழித்துக் கட்ட வேண்டுமென்று நிர்ப்பந்திக்கின்றது. அமெரிக்காவுடன் ஐரோப்பிய பொது சமூக நாடுகளும் கார்ன்ஸ் (Cairns) எனப்படுகின்ற தானிய ஏற்றுமதி நாடுகளும (இதற்கு தலைமை ஆஸ்திரேலியா) சேர்ந்து நிர்ப்பந்தம் செய்கின்றன. அளவு ரீதியான கட்டுப்பாட்டிற்குப் பதிலாக, இறக்குமதிக்கு நிலைத்த வரிகளை வேண்டுமானால் ஏற்படுத்தலாம் என்றும், அடுத்தடுத்த ஆண்டுகளில் இந்த வரியும் கூட படிப்படியாகவும் மிக வேகமாகவும் குறைத்து, பின் இல்லாமலேயே செய்துவிட வேண்டும் என்றும் ஆணையிடுகின்றன. இக்கொள்கையின் விளைவாக, அன்னிய நாட்டு விவசாயப் பொருட்களும் மீன்வளத்துறை பொருட்களும் நமது நாட்டிற்குள் தாராளமாக இறக்குமதி செய்யப்படும். இப்படி இறக்குமதி செய்யப்படுகின்ற உணவு (தானிய) வகைகள் குறைந்த விலையில் (இங்கே ஆகும் உற்பத்திச் செலவை விட குறைந்த விலையில்) விற்கப்படும். நமது இந்திய விவசாயிகள் போட்டியில் தங்களைத் தற்காத்துக் கொள்ள, உற்பத்திச் செலவைக் குறைக்க வேண்டும்; இதற்காக, நமது மண்ணிற்கு மேலும் மேலும் பாதகத்தை உருவாக்குகின்ற நவீன விவசாய முறைகளை கையாள வேண்டி வரும்.

உற்பத்தி விலைக்கும் குறைவாக விற்க நிர்ப்பந்திக்கப் படுவதால், நஷ்டத்துடன் விவசாயத்தைத் தொடர்ந்து நடத்த முடியாமல் நிலங்களை விட்டு விவசாயிகள் வெளியேற வேண்டி வரும். வெளியேறுபவர்கள் ஓடவேண்டும்; அல்லது தங்கள் குடும்பம் பிழைக்க தேவையான அளவு விவசாயம் செய்ய மழை தரும் காடுகளை அழிப்பார்கள். ஏற்கனவே மக்கள் பிதுங்கி வழியும் நகரங்களில் போண்டியான விவசாயிகளின் தொகையும் கூடுவதால், நோய்களும் சீரழிவுகளும் பெருகி ஆயிரக்கணக்கில் மக்கள் மடிவர்.

விவசாயிகள் போண்டியாவதால், நிலங்கள் தரிசாக கிடக்கும். இதைப் பயன்படுத்திக் கொண்டு பெரும் பெரும் தரகு முதலாளிகளும் பிற நாட்டு பகாசுர கம்பெனி முதலாளிகளும் இந்த நிலங்களை அடிமாட்டு விலைக்கு வாங்கியோ, குத்தகைக்கு எடுத்தோ, அவைகளை ஒன்றிணைத்து




டங்கல் திட்டப்படி, ஒரு ஏகாதிபத்திய நிறுவனம் கண்டு பிடித்துள்ள புதிய ரக வாழைப் பழத்துக்கு அதைச் சாப்பிடும் ஒவ்வொருவரும் அந் நிறுவனத்துக்கு சன்மானம் (ராயல்டி) தரவேண்டும்.

பெரும் பெரும் பண்ணைகளாக மாற்றுவர். அப்பண்ணைகளில் முழுக்க முழுக்க ஏற்றுமதிக்கென்றே பொருட்களை உற்பத்தி செய்வர். ஒன்று, ஆடு மாடுகளை, குறிப்பாக மாடுகளை வளர்த்து இறைச்சியை ஏற்றுமதி செய்வர். அல்லது பூக்கள் மற்றும் அலங்கார மரக்கன்று நாற்றுகளை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வார்கள். இவைகளுக்கு உலக வங்கி ஊக்கமும் நிதி உதவியும் தந்து தூண்டிவிடும். இப்படி உற்பத்தி செய்யப்படுபவை ரசாயனப் பொருட்களை அதிகரித்த அளவில் பயன்படுத்தும் பயிர் முறைகளாகும். இதனால் நமது வளமான விவசாய நிலங்கள் விரைவில் பாழ்பட்டுப் போகும்.

மேற்சொன்ன காரணங்களின் விளைவாக, நமது நாட்டில் உணவு உற்பத்தித் திறன் வெகுவாக குறைந்துவிடும். இதனால், மேலும் மேலும் அதிகரித்த அளவில் உணவுப் பொருள் இறக்குமதிகளைச் சார்ந்திருக்க வேண்டி வரும். இந்த இறக்குமதிக்குத் தேவையான அன்னிய செலாவணியை ஈட்ட நாம் பணப்பயிர்களை அதிகரித்த அளவில் பயிரிட்டு ஏற்றுமதி செய்ய வேண்டும். அல்லது நமது இயற்கை வளங்களை அதிகமாக சுரண்ட வேண்டும்; எடுத்துக்காட்டாக, மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

### "பட்டினி கிடந்தாலும் அரிசியை ஏற்றுமதி செய்"

இரண்டவதாக, நமது நாட்டில் உணவுப் பொருட்கள் மிகவும் பற்றாக்குறையாக இருக்கும் நெருக்கடியான காலகட்டத்திலும் கூட உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்ய எவ்வித தடையும் இருக்கக் கூடாது என்று அமெரிக்காவும் டங்கல் முன்மொழிதல்களும் நிர்ப்பந்திக்கின்றன. 'காட்' பேச்சு வார்த்தையில் இதை நமது நாடு ஏற்றுக் கொண்டால், உணவுப் பொருள் பற்றாக்குறையாலும் அதனால் ஏற்படும் விலையேற்றத்தாலும் பட்டினி கிடந்து நமது மக்கள் மாண்டு கொண்டிருந்தாலும் கூட ஏற்றுமதிக்கு வரம்பிடும் அதிகாரத்தை நமது அரசாங்கம் இழந்துவிடும்; அல்லது பணப்பயிர் உற்பத்தியைக் குறைத்து, உணவுப் பொருள் உற்பத்தியை அதிகரிக்கும் அதிகா

www.padippakam.com

ரத்தையும் நமது நாடு இழக்கும். இதனால் நமது நாடு தனது சொந்த இயற்கை வளங்களைப் பயன்படுத்தும் இறையாண்மையைக் கூட இழக்கும்; எடுத்துக்காட்டாக, சில மாதங்களுக்கு முன் நமது நாடு ஏழு லட்சம் டன் அரிசியையும் எட்டு இலட்சம் டன் கோதுமையையும் ஏற்றுமதி செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது; அரிசி விலை இன்று இவ்வளவு ஏறியிருப்பதற்கு அடிப்படைக் காரணம் இதுதான்! மேலும் இந்த நிபந்தனையில் சுற்றுப்புற சூழலும் பெரிதும் பாதிக்கப்படும். எடுத்துக்காட்டாக, மரங்கள் ஏற்றுமதிக்காக தடையின்றி வெட்டி சாய்க்கப்படும். இது நிச்சயம் சுற்றுபுற சூழலைப் பாதிக்கும்.

### சுற்றுச் சூழலுக்கு சுருக்குக் கயிறு

மூன்றாவதாக, நம் போன்ற வளரும், ஏழை நாடுகளில் இருக்கின்ற சுகாதாரம் மற்றும் சுற்றுப்புற சூழல் மீதான பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை தளர்த்தச் சொல்லி நிர்ப்பந்திக்கின்றன. இவைகள் தொடர்பான விதிமுறைகளையும் சட்டங்களையும் நமது நாட்டு பாராளுமன்றங்களோ மற்ற அமைப்புகளோ தீர்மானிக்கக் கூடாதாம்! மாறாக, சர்வதேச ஏஜன்சிகளிடமிருந்து வரவழைக்கப்பட்ட "வல்லுனர் குழு" ஒன்றுதான் ஆராய்ந்து சொல்ல வேண்டுமாம்! இந்த வல்லுனர்களை ஏகாதிபத்திய பகாசுர கம்பெனிகள் சுலபமாக விலைக்கு வாங்கிவிட முடியும். அப்புறம் அந்தக் கம்பெனிகள் தங்களுக்குச் சாதகமாக முன்வைக்கின்ற சுகாதார, சுற்றுப்புற சூழல் விதிகளையே இந்த வல்லுனர்கள் வழிகாட்டியாக எடுத்துக் கொண்டு தீர்மானிப்பார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் மற்றும் சொல்லப்படுகின்ற ஜனநாயக அமைப்புகள் எதுவும் இதில் தலையிடாத அளவிற்கு ஒதுக்கப்பட்டு, ஏகாதிபத்திய நலன்களுக்கான விதிமுறைகளே முழுக்க முழுக்க பின்பற்றப்படும்; ஏற்கனவே இது நடைமுறைக்கும் வந்துள்ளது. மக்களுக்கும் சுற்றுப்புற சூழலுக்கும் நாசத்தை விளைவிக்கின்ற உரங்கள், பூச்சி மருந்துகள், பிற பொருட்களை (ஏகாதிபத்திய நாடுகளில் விற்க தடை செய்யப்பட்டவைகள் உட்பட) தாராளமாக நம் போன்ற ஏழை நாடுகளுக்கு தள்ளிவிட தகுந்த மாதிரியான விதிமுறைகள் உருவாக்கப்படும். ஏற்கனவே தடை செய்யப்பட்ட உரங்கள், பூச்சி மருந்துகளும் இந்தியாவில் தாராளமாக விற்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

### மானியங்கள் வெட்டு விவசாயத்திற்கு வேட்டு

நான்காவது நிபந்தனை (டங்கல் முன்மொழிதலின்படி) என்னவென்றால், விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும் அளிக்கப்படுகின்ற சலுகைகள், மானியங்கள் ஆகியவைகளை ரத்து செய்துவிட வேண்டும் என்பதாகும். ஆதரவு விலை நிர்ணயித்தல், உற்பத்திக்கு மானியம் அளித்தல், விவசாய உள்ளீடு பொருட்களுக்கு மானியம் அளித்தல், பற்றாக்குறையை ஈடுகட்டுதல் போன்றவைகளில் சலுகைகள் முதலில் குறைக்கச் சொல்வது; பின்னர் படிப்படியாக முழுவதையும் ரத்து செய்யச் சொல்வதாகும். இதன் விளைவாக, உற்பத்திச் செலவு அதிகமாகி சிறு விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாமல் பாதிக்கப்படுவதோடு, விலைகளும் ஏறும். இதைக் காரணம் காட்டி உணவுப் பொருள் இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்படும். மேலும், இவ்வாறு மானியங்கள், சலுகைகளை வெட்டுவதால், காட்டு வளத்தைப் பாதுகாப்பது, மண் வளத்தைப் பராமரிப்பது, நீண்ட காலத்திற்கு பயன்தரும் திட்டங்கள் ஆகியவைகளுக்கு தரப்படும் உதவிகள் நின்றுபோகும். இதேபோல சுற்றுப்புற சூழலுக்கும் பொருத்தமான உற்பத்தி முறைகளும் கூட கைவிடப்பட நேரிடும்.

விவசாய குடும்பங்கள் நிலத்தை விட்டு வெளியேறுவதால் இன்னொரு பக்கம் பசுமையான நிலப்பரப்பும் விவசாய நிலங்களும் சூப்பர் மார்கெட்டுகளுக்கும் நகர்புற வீட்டு வசதித் திட்டங்களுக்கும் தொழிற்சாலை நோக்கங்களுக்கும் அதிகரித்த அளவில் பயன்படுவதில் போய் முடியும்; ஏற்கனவே இப்படி நடப்பதும் உலக




டங்கல் திட்டப்படி, புதிய ரக பசுமாட்டை ஒரு ஏகாதிபத்திய நிறுவனம் உரிமைப் பதிவு செய்து கொண்டால், அத்தகைய பசுக்குள் ஈனுகின்ற கன்றுகள் விவசாயிக்குச் சொந்தமாகாது; அந் நிறுவனத்துக்கு சன்மானம் கொடுத்துத்தான் கன்றுகளைப் பெற முடியும்.

வங்கி இதற்கு ஆதரவு தருவதும் நிதி தருவதும் நடக்கிறது.

### கொள்முதல் விலை குறைப்பு சுயசார்பு பறிப்பு

விவசாயத்தில் சுதந்திர வர்த்தகம் என்ற உலக வங்கி, அமெரிக்காவின் திட்டத்தினுடைய மிக பாதகமான அம்சம் என்னவென்றால், உலக அளவில் விவசாய விளை பொருள் சரக்குகளின் விலையை கீழிறக்குவதாகும். இது இயற்கை வளங்கள் மீது குறைந்தது நான்கு முனைகளில் நிர்ப்பந்தம் தொடுக்கின்றது. விலை குறைவதால் ஏற்படும் இழப்பை ஈடுகட்ட விவசாயிகள் உற்பத்தியின் அளவைப் பெருக்க முனைவர். ரசாயன உரங்கள், பூச்சி மருந்துகளை அதிகரித்த அளவில் பயன்படுத்துவது அல்லது அதிகரித்த அளவிலும் தொடர்ச்சியாகவும் நிலங்களைப் பயன்படுத்துவதன் மூலமாகவும்தான் இதைப் பெற முடியும். இரண்டாவதாக, லாபம் குறைவதால், நிலத்தை இழந்து விவசாயிகள் தவிப்பர்; தங்களது குடும்பங்களைக் காப்பாற்ற மலையோர நிலங்கள், மழை தரும் காடுகள், புறம்போக்கு நிலங்கள் ஆகியவையினை விவசாயத்திற்கு கொண்டு வருவர்; மூன்றாவதாக, உலக அளவில் விதைகள் குறைவதால், அன்னிய செலாவணி ஈட்ட அதிகமான பொருட்கள் ஏற்றுமதி செய்ய வேண்டும். ஏற்றுமதிக்கான பொருட்களை தயாரிக்கின்ற நிலங்களை அதிகரிப்பதன் மூலமாகவோ அல்லது ரசாயன மற்றும் சக்தியை அதிக அளவில் பயன்படுத்துகின்ற முறைகளில் பயன்படுத்தி விளைச்சலைப் பெருக்குவதன் மூலமாகத்தான் இதைச் சாத்தியமாக்க முடியும்.

விவசாய விளைபொருட்களின் விலைகள் குறைவாக இருப்பதால் ஏழை நாடுகள் இறக்குமதி செய்ய ஆர்வம் காட்டும். இதனால் உணவு தானிய உற்பத்தியில் சுயசார்பு போகும். மேலும், அதிகரிக்கும் இறக்குமதிக்கு அன்னிய செலாவணி கூடுதலாக தேவைப்படும். அதிகரிக்கும் அன்னிய செலாவணியை ஈடுகட்ட எல்லா இயற்கை வள்ங்களையும் அதிகரித்த அளவில் சுரண்டுவது நடக்கும்.

### கடனாளி ராவ் அரசுக்கு அமெரிக்காவின் கட்டளை

மேலே நாம் விவரித்தவை அமெரிக்காவும் பிற வல்லரசு நாடுகளும் நம் போன்ற ஏழை நாட்டு விவசாயிகளையும் நமது விவசாய செல்வங்களையும் ஒட்டச் சுரண்ட, நமது நாட்டை மீண்டும் காலனியாக்க செய்யும் ஏற்பாடுகளாகும்; அமெரிக்க வல்லரசின் செல்வாக்கிலுள்ள உலக வங்கி என்னும் அகில உலக ஈட்டிக்காரன் தனது கடனாளி நரசிம்மராவ் அரசாங்கத்திற்கு சில பரிந்துரைகளை செய்துள்ளது; முழுக்க முழுக்க அமெரிக்கா மற்றும் பிற வல்லரசுகளின் மேற்கண்ட நோக்கங்களை அப்படியே ஈடேற்ற உலக வங்கி முன்வைத்துள்ள பரிந்துரைகள் பின்வருவனவாகும்.

1. விவசாயிகளின் மற்றும் பொது மக்களின் நலன்களைக் கொண்டும் நெருக்கடிக் காலத் தேவையை ஒட்டியும் கையிருப்பில் கணிசமான அளவு அரிசி, கோதுமை போன்ற உணவு தானியங்களை கையிருப்பில் வைக்கக் கூடாது.

www.padippakam.com

2. வேளாண்மைத் துறையில் இந்திய உணவுக் கார்ப்பரேஷனின் (எஃப்.சி.ஐ.) நடவடிக்கைளைக் குறைக்க வேண்டும்.

3. விவசாயிகளுக்கான ஆதரவு விலைக் கொள்கை மற்றும் விளைபொருள் கொள்முதல் கொள்கைகளை ஒன்றிணைக்காமல் தனித்தனியே பிரித்து வகுக்க வேண்டும்.

4. சர்வதேச வேளாண்மைப் பொருள் விலைகளுக்கு ஏற்ப, புதிய விளைபொருள் விலைக் கொள்கையை உருவாக்க வேண்டும்.

5. அரிசி, சர்க்கரை ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதற்கான லெவி முறையை ரத்து செய்ய வேண்டும்.

6. விவசாயப் பொருட்களைத் தடையின்றி தாராளமாக இறக்குமதி செய்வதற்கு வசதியாக இறக்குமதித் தடைகளை நீக்க வேண்டும்.

7. பருத்தி கொள்முதல் மற்றும் ஏற்றுமதியில் அரசு ஏகபோகம் கைவிடப்பட வேண்டும்.

8. எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் பிற நாடுகளுடன் போட்டியிட முடியாத நிலை உள்ளதால் எண்ணெய் வித்துக்கள் மீதான முதலீட்டை வேறு விளை பொருளுக்கு மத்திய அரசு திருப்பிவிட வேண்டும். எண்ணெய் வித்துகள் மற்றும் சமையல் எண்ணெய் இறக்குமதியில் மத்திய அரசு தாராளமயக் கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும். (அதாவது சமையல் எண்ணெயில் உற்பத்தியை உள்நாட்டில் குறைத்து, எப்போதும் இறக்குமதியை சார்ந்திருக்கும்படி செய்தல்.)

9. உரவிலையை உயர்த்துவதுடன் பாசன நீர், மின்சாரம் ஆகியவற்றுக்கான கட்டணத்தையும் அதிகரிக்க வேண்டும்.

10. 1992-ம் ஆண்டிற்கான மத்திய பட்ஜெட்டில் வேளாண்மைத் துறை மானியத்தைப் பெருமளவு குறைப்பதற்கு வழி செய்யப்பட வேண்டும்.

11. விவசாயக் கடன் திட்டங்களையும் அரசு பெருமளவு மாற்றியமைக்க வேண்டும்.

12. உணவுப் பொருட்களுக்கு வழங்கப்படும் அரசு மானியததின் அளவைக் குறைக்க வேண்டும்.

13. தற்போது நடைமுறையிலுள்ள விளை பொருள் விலை நிர்ணய முறை, எண்ணெய் வித்து மற்றும் கரும்பு சாகுபடியாளர்களுக்கு அதிக ஊக்கம் அளிக்கும் வகையிலும், அதே நேரத்தில் நெல், பருத்தி சாகுபடியாளர்களுக்கு குறைந்த அளவே பலனளிக்கும் வகையிலும் அமைந்துள்ளது. பாரபட்சமாக உள்ள இதை மாற்றி புதிய விலை நிர்ணயக் கொள்கையை வகுக்க வேண்டும். இந்தக் கொள்கை சர்வதேச சந்தையின் நிலவரத்தை ஒட்டி அமைய வேண்டும்.

14. டீ, காபி, ரப்பர் ஆகிய பொருட்களின் ஏற்றுமதி வர்த்தகத்தில் அரசு விதித்துள்ள தடைகள் அகற்றப்பட வேண்டும்.



அத்துடன் பருத்தி, அரிசி ஆகியவற்றுக்கான ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகள் படிப்படியாக குறைக்கப்பட வேண்டும்.

15. ரசாயன உரத் தொழிலை மாற்றி அமைக்க வேண்டும். உணவுப் பொருட்கள் விற்பனை மற்றும் விநியோகத்தில் கட்டுப்பாடுகளை அரசு தளர்த்த வேண்டும்.

இவைகளை நரசிம்மராவ் அரசு அப்படியே நிறைவேற்றும் என்பதற்கு அத்தாட்சி தான் ரேஷன் கடைகளில் அரிசியின் அளவைக் குறைத்ததும் விலையை ஏற்றியதும்; சர்க்கரை, கோதுமை ஆகியவற்றின் விலைகளை ஏற்றியதும்; உரத்திற்கு மானியத்தை வெட்டியதும் மின்சாரத்திற்கு கட்டணத்தை ஏற்றச் சொல்லி மத்திய அரசு மாநில அரசுகளை மிரட்டி வருவதும்.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவு தானியங்கள், பருத்தி, டீ, ரப்பர் போன்றவைகளில் தனியார் கமிஷன் மண்டி கொள்ளைக்காரர்கள், பதுக்கல் காரர்கள் மற்றும் அந்நிய கம்பெனிகளை ஏகபோகமாக வர்த்தகம் செய்து கொள்ளை லாபம் அடிக்க அனுமதிப்பது; சர்வதேச மார்க்கெட்டிற்கு ஏற்ப இங்கே சப்ளை ஏறி இறங்குமாதலால் உணவு தானியங்களின் விலை தாறுமாறாக ஏறும் இறங்கும். ஆனால் இது மொத்தத்தில் விலைகள் தொடர்ந்து ஏறி விவசாயிகளையும் பாதிக்கும். உற்பத்தி செய்கிற விவசாயியே உணவுத் தானியங்கள் கிடைக்காமல் அல்லல்படுவது, உணவு தானியங்களை அந்நியக் கம்பெனிகள் கட்டுப்படுத்துவதற்கு விவசாயிகள் பலிகடா ஆக்கப்படுவது என்பது கட்டாயம் நடக்கும்.

ரேஷன் கடைகளை ஒழிப்பதன் மூலம் தனியார் வியாபாரிகளுக்கு சந்தையை அதிகமாக்குவதும் அவர்களை சார்ந்து இருக்குமாறும் செய்வதும் இதன் நோக்கமாகும். இதனால், தனியார் வியாபாரிகள் பதுக்கியும் விலையை தங்கள் விருப்பம் போல ஏற்றியும் கொள்ளை அடிப்பார்கள். மேலும் உலக சந்தையோடு இணைப்பதால் ஏகாதிபத்திய நாடுகள் நமது நாட்டு உணவு தானிய வியாபாரத்தில் ஆதிக்கம் செலுத்தவும் கொள்ளை லாபம் அடிக்கவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இதன் பலனை இப்போதே நாம் அனுபவித்துக் கொண்டுள்ளோம்! சில மாதங்களுக்கு முன் நரசிம்மராவ் அரசு எட்டு இலட்சம் டன் கோதுமையும் ஏழு இலட்சம் டன் அரிசியையும் (பசுமதி ரகம் அல்லாத அரிசி வகைகள்) ஏற்றுமதி செய்ய அனுமதித்தது. இப்போது, 10 இலட்சம் டன் முதல் 20 இலட்சம் டன் வரையிலான கோதுமையை இறக்குமதி செய்ய ஏற்பாடுகளை முடுக்கி விட்டுள்ளது; விவசாயிகளிடம் அரசாங்கம் வாங்கும் கோதுமை விலை குவிண்டாலுக்கு 225 ரூபாயாகும்; ஆனால் இப்போது அமெரிக்க விவசாயிக்கு குவிண்டாலுக்கு ரூ.500 தந்து அமெரிக்க கோதுமையை இறக்குமதி செய்ய முயற்சித்து வருகிறது மத்திய அரசு. போக்குவரத்து செலவு மற்ற செலவுகள் சேர்த்து கடைகளில் கிலோ குறைந்தது இந்த கோதுமை ரூ.7.50 க்கு விற்கப்படும்.

அடுத்து ராசாயன உரங்கள்; சர்வதேச சந்தையோடு இணைக்கப்படுவதாலும் உரத்திற்கான மானியம் வெட்டப்படுவதாலும் 100 கிலோ உரத்தின் விலை குறைந்தது ரூ.600 ஆகிவிடும்; இது போல அரிசியின் விலையும் இப்போது இருப்பதைவிட இருமடங்காகிவிடும்!

இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், உருகுவே சுற்று பேச்சுவார்த்தையில் மருந்துப் பொருட்களும் வருகின்றன; இதனால் மருந்துகளின் விலை குறைந்தது 7 மடங்கிலிருந்து 10 மடங்கு வரை உயர இருக்கின்றன. சாதாரணமாக தலைவலி வந்தால், பெட்டிகடையில் 35 பைசா அனாசின் வாங்கி சமாளித்து வருகிறோம்; ஆனால், அந்த ஒரு அனாசின் மாத்திரையையே குறைந்தது ரூ.2.50 க்கு விற்கும் நிலை வரும்; விலை உயர்வு ஆபத்து மட்டுமன்றி, தரக்குறைவான மருந்துகள் விஷயத்தில் நுகர்வோர் உள்நாட்டு கோர்ட்டில்

படிப்பகம்

www.padippakam.com

நியாயம் கேட்டு வழக்கு தொடர முடியாது.

இதுமட்டுமன்றி சுற்றுப்புற சூழலில் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் கோர்ட்டிற்கு செல்ல முடியாது.

1947 ஆகஸ்டு 15க்கு முன் இந்தியா காலனிய ஆதிக்கத்தில் இருந்தபோது. ஆங்கிலேய நலன்களுக்கு ஏற்ப இந்திய விவசாயம் மாற்றியமைக்கப்பட்டது. 1947 ஆகஸ்டு 15 க்குப் பின் பல்வேறு ஏகாதிபத்தியங்களின் மறைமுக ஆதிக்கத்தின் கீழ் அரைக் காலனியாக மாறிய பின்பு அந்த ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு ஏற்ப இந்திய விவசாயமும் உற்பத்தியும் மாற்றப்பட்டன. 1968-ல் புகுத்தப்பட்ட பசுமைப் புரட்சி மற்றும் வெள்ளை புரட்சியும் ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்கேதான் புகுத்தப்பட்டன. இவைகளின் விளைவாக சமையல் எண்ணெயில் காலம் காலமாக சுயசார்பில் இருந்து வந்த நமது நாடு இன்று சமையல் எண்ணெயை இறக்குமதி செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்னமும் உணவுப் பொருள் உற்பத்தியில் தன்னிறவு அடையவில்லை. வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் விவசாயிகள் அதிகரித்து விட்டனர். இதோ, இன்று உலக வங்கி பரிந்துரைகளில் சிலவற்றை அமுல்படுத்தும்போதே நிலைமை மிக மோசமாகி விட்டது.

எனவே, உலக வங்கியின் பரிந்துரைகள் முழுவதுமாக நிறைவேற்றப் படும்பொழுது நமது வாழ்க்கை எந்த கதிக்கு ஆளாகும் என்பதை கற்பனை செய்து பார்க்கக் கூட முடியவில்லை!

## ஓட்டுக் கட்சிகள் மண் குதிரைகள்

நரசிம்மராவ் அரசு கொண்டு வந்துள்ள - கொண்டு வரப்போகின்ற பொருளாதாரச் சீர்திருத்தங்களை பாரதீய ஜனதா கட்சி, அ.தி.மு.க. ஆகியவை அப்பட்டமாக ஆதரிக்கின்றது. ஜனதா தளமும் தி.மு.க-வும் எதிர்ப்புத் தெரிவித்தாலும் ஜனதாதளம் ஆட்சியில் இருந்தபொழுது இதே பாதையில்தான் பொருளாதாரத்தை எடுத்துச் சென்றது; தி.மு.க. அதற்கு ஆதரவளித்தது. இப்போது இவைகள் எதிர்ப்பு தெரிவிப்பதெல்லாம் மக்களின் பொறுமலை பயன்படுத்தி ஓட்டுப் பொறுக்கத்தான். வலது. இடது போலிக் கம்யூனிஸ்டுகள் தெரிவிக்கும் எதிர்ப்பும் சம்பிரதாய பூர்வமான எதிர்ப்புதான்.

நரசிம்மராவ் அரசின் பொருளாதாரத் திட்டங்களால் தாக்கப்பட்டு மக்கள் கொதித்தெழுந்து போராடும்பொழுது, கடுமையான அடக்குமுறைச் சட்டங்கள், போலீசை வைத்து அடக்கும். இதையே வன்முறையை - பிரிவினைவாதிகளை ஒடுக்கி, தேசிய ஒற்றுமையை பாதுகாப்பதாகச் சொல்லி நியாயப்படுத்தும். காங்கிரசு கட்சி இதை இந்திரா காந்தி காலத்திலிருந்தே செய்து வருகிறது. காங்கிரசின் 'தேசிய ஒற்றுமையைப் பாதுகாப்போம்' என்ற முழக்கத்தை காங்கிரசுக்காரர்களைவிட வலது, இடது போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள்தான் தீவிரமாக பிரச்சாரம் செய்து வருகின்றன. எனவே, காங்கிரசின் அடக்குமுறை தந்திரத்தின் ஊதுகுழலாக இருக்கும் இக் கட்சிகள் காங்கிரசு அரசின் பொருளாதாரத் தாக்குதல்களை எதிர்ப்பது வெறும் சம்பிரதாயமாகவே இருக்கும் என்று கூறுகிறோம். பாட்டாளி மக்கள் கட்சி நரசிம்மராவ் அரசின் மக்கள் விரோத - தேச விரோத பொருளாதாரக் கொள்கைகளை எதிர்க்கிறது; விவசாயிகளையே தனது அடித்தளமாக கொண்டுள்ள இக்கட்சி நடைமுறையில் ஒன்றும் செய்யவில்லை. ஆக, எந்த ஓட்டுப் பொறுக்கிக் கட்சியும் விவசாயிகளாகிய நமக்கு ஆதரவாக வராது. அவைகளை நம்புவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்குச் சமமாகும்.

இந்த ஓட்டுக் கட்சிகள் வைத்துள்ள விவசாய சங்கங்களும் நமக்காக பாடுபடாது. நாராயணசாமி சங்கமும் தேர்தல் நலன்களுக்கு ஏற்பவே செயல்பட்டு வருகிறது. எனவே, அதுவும் ஒன்றும் செய்யாது.

**டங்கல் திட்டம் இந்தியாவில் நடைமுறைக்கு வந்துவிட்டால் மருந்து மாத்திரைகளின் விலை 10 மடங்கு உயர்ந்துவிடும். இன்று 35 பைசாவுக்கு விற்கும் சாதாரண தலைவலி மாத்திரை ரூ.2.50-க்கு மேல் விலை உயர்ந்துவிடும். இது மட்டுமின்றி, ஏகாதிபத்திய நிறுவனங்கள் தரக்குறைவான மருந்துகளை விற்றால் அதை எதிர்த்து உள்நாட்டு நுகர்வோர் கோர்ட்டில் நியாயம் கேட்டு வழக்கு தொடர முடியாது.**

வட மாநிலங்களில் உள்ள சரத்ஜோஷி, திகாய்த் போன்றோர் தலைமையிலான சங்கங்கள் ஒவ்வொரு முறையும் ஏதாவது ஒரு ஆளுங் கட்சியுடன் சந்தர்ப்பவாதக் கூட்டு சேர்ந்து விவசாயிகளின் நலன்களைப் புறக்கணித்து துரோகமிழைக்கின்றன. இனிமேலும் இத்தகைய சங்கங்களை நம்புவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதாகும்.

அப்படியானால் மாற்றுத் தீர்வுதான் என்ன? விவசாயிகள் தமது விளை பொருட்களுக்கு கூடுதல் விலை கேட்டும், கடன் தள்ளுபடி, மின் கட்டன தள்ளுபடி முதலான சலுகைகளுக்காக மட்டும் போராடினால் போதாது. விளை பொருட்களுக்குக் கூடுதல் விலை தருவதாக அரசு அறிவிக்கும் போதே விலைவாசிகள் உயர்ந்து விடுகிறது. கடுகளவு கடன் தள்ளுபடி செய்வதாகக் கூறும் அரசு, அதே நேரத்தில் உரவிலையை தாறுமாறாக உயர்த்துகிறது. எனவேதான் கோரிக்கைகளுக்காக மட்டுமின்றி அரசியல் அதிகாரத்துக்காகவும் விவசாயிகள் போராட வேண்டும்.

அரசியல் அதிகாரம் என்றால் தேர்தலில் நின்று வெற்றி பெற்று சட்டமன்றத்துக்குச் சென்று விவசாயிகளுக்காக சட்டம் இயற்றுவது அல்ல. அப்படி சட்டம் போட்டாலும் அது காகிதச் சட்டமாகவே இருக்கும். கடந்த 40 ஆண்டுகளாக பலமுறை நிலச் சீர்திருத்தச் சட்டம் போடப்பட்டும் கூட, அது இன்னமும் நடைமுறையில் நிறைவேற்றப் படாததற்கான காரணம் என்னவென்று யோசித்தாலே உண்மை புரியும். உண்மையில், போடப்படும் சட்டங்களை நிறைவேற்றும் அதிகாரம் எம்.எல்.ஏ; எம்.பி.-க்களிடம் இல்லை. அது தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்கள், லேவா தேவிக்காரர்களின் கூட்டாளிகளான அதிகாரிகளிடம்தான் இருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் உருவான இத்தகைய அதிகார வர்க்க அரசியலமைப்பு முறையின் மூலம் விவசாயிகள் எந்தப் பலனும் பெறமுடியாது என்பதே நாம் கண்ட அனுபவம்.

## உழுபவனுக்கே நிலம் உழைப்பவனுக்கே அதிகாரம்

எனவே இன்றைய கேடுகெட்ட அரசியலமைப்பு முறையைத் தூக்கி எறிந்து விட்டு, உழைக்கும் விவசாயிகள் அரசியல் அதிகாரத்தை தங்கள் கைகளில் எடுத்துக் கொள்ள வேண்டும். கிராமப்புற முழு அதிகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள் கமிட்டியிடம் இருக்க வேண்டும். இக் கமிட்டி உறுப்பினர்கள் யாராவது தவறு செய்தால் அவர்களைத் தண்டித்து பொறுப்பிலிருந்து நீக்கவும் அனைத்து விவசாயிகளுக்கும் அதிகாரம் இருக்க வேண்டும். இத்தகைய அதிகாரம் உழைக்கும் விவசாயிகளிடம் இருந்தால் மட்டுமே நாட்டைப் பாலைவனமாக்க முயலும் ஏகாதி பத்தியங்களின் ஆதிக்கத்தையும் சதிகளையும் முறியடிக்க முடியும். உழைக்கும் மக்களின் அரசியல் அதிகாரத்தை நிறுவி, உழுபவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்குவது, நிலப்பிரபுத்துவ - ஏகாதிபத்திய ஆதிக்கத்தை முறியடிப்பது, அதன் மூலம் வளமையான எதிர் காலத்தை உருவாக்குவது என்கிற புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதைதான் நம்முன் உள்ள ஒரே தீர்வாகும்.

இப் புரட்சிகர திட்டத்துடன் நக்சல்பாரி தலைமையிலான புரட்சிகர விவசாய சங்கங்கள் மட்டுமே விவசாயிகளின் உரிமைக்கும் அவர்களின் அரசியல் அதிகாரத்துக்கும் தொடர்ந்து போராடி வருகிறது. ஓட்டுச் சீட்டுப் பாதையை நிராகரித்து, புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் முன்னேறி வரும் நக்சல்பாரி இயக்கம் மட்டுமே விவசாயிகளின் விடுதலைக்காகப் பாடுபடும் ஒரே நம்பிக்கை நட்சத்திரம் ஆகும். இந்திய விவசாயத்தை ஏகாதிபத்தியங்கள் நாசமாக்கி நம்மைப் பட்டினிச் சாவுக்குத் தள்ளுமுன்னே விழித்தெழுங்கள்! ஏகாதிபத்தியங்களையும், அதன் பாதந்தாங்கும் மக்கள் விரோத காங்கிரசு கும்பலையும் வங்கக் கடலில் வீசியெறிய நக்சல்பாரி புரட்சிப் பாதையில் பெரும் படையாய் திரண்டெழுங்கள்!

☆ மாறன்

www.padippakam.com

அடக்குமுறைக்கு நடுவே அயராத பிரச்சார இயக்கம்

# மே நாள் பேரணி - பொதுக்கூட்டங்கள்

**உ**லகத் தொழிலாளர்களின் ஒரு பகுதியான இந்தியத் தொழிலாளர்களின் விடுதலை சாதிக்கப்பட வேண்டுமானால் அவர்கள்மீது கட்டப்பட்டுள்ள அடிமைத் தளைகள் தகர்க்கப்பட வேண்டும். அதற்கான அறைகூவலை வைத்து மே நாளை நினைவு கூ[illegible]னார்கள் புரட்சியாளர்கள். முதலாளித்துவ கட்சிகளும், போலி கம்யூனிஸ்டுகளும் மேதினத்தை சடங்குத்தனமாக்கவும், கோலாகல விழாவாகவும் கொண்டாடியதை அம்பலப்படுத்தினர். மேநாளை கொண்டாடும் உரிமை - அருகதை தொழிலாளர்ளின் விடுதலையை உள்ளடக்கிய புதிய ஜனநாயகப் புரட்சிப் பாதையில் நிற்கும் புரட்சிகர அமைப்புகளுக்கு மட்டுமே உண்டு என்பதையும் பறைசாற்றினர்.

**சென்னை:** சேத்துப்பட்டு - அம்பேத்கார் திடலில் மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் மேதின ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடந்தது. எழும்பூர் - ஆல்பர்ட் திரையரங்கு அருகிலிருந்து புறப்பட்ட ஊர்வலம் விண்ணதிரும் முழக்கங்களுடன் பொதுக்கூட்டத் திடலை வந்தடைந்தது. பொதுக்கூட்டத்திற்கு தோழர் சீராளன் தலைமை தாங்க தோழர் சீனிவாசன் எழுச்சிமிகு உரையாற்றினார். பகுதி மக்கள் திரளாகக்கூடி ஆதரவளித்ததோடு, சிறைத்தோழர்களின் விடுதலைக்காக வழக்கு நிதியும் அளித்து உதவினர்.

**திருச்சி:** மே நாளையொட்டி புத்தூர் - திரு.வி.க. நகரில் (வண்ணாரப்பேட்டையில்) புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி (R.S.Y.F) -யின் கிளை தொடக்கமும் சைக்கிள் பேரணியும் பொதுக்கூட்டமும் நடந்தது. தோழர் பி.பொம்மன் (விவசாயிகள் விடுதலை முன்னணி) அவர்கள் பு.மா.இ.மு. கொடியை ஏற்றி கிளையை தொடங்கி வைத்து அலுவலகத்தை திறந்து வைத்தார். இதையடுத்து ம.க.இ.க. மற்றும் பு.மா.இ.மு. தோழர்கள் நடத்திய சைக்கிள் பேரணி காலை 9 மணிக்கு தொடங்கி மாலை 4.30 மணிக்கு பொதுக்கூட்டத் திடலில் முடிவடைந்தது. புத்தூர், உறையூர், சிந்தாமணி, மேலப்புலிவார்டு சாலை, மார்க்கெட், பாலக்கரை, சங்கிலியாண்டபுரம், செந்தண்ணீர்புரம், கல்லுக்குழி, ஜங்சன், மிளகுபாறை, பீமநகர், தென்னூர் ஆகிய பகுதிகளில் நடந்த மிக நீண்ட சைக்கிள் பேரணி எழுச்சிமிகு பிரச்சாரத்தை ஏற்படுத்தி நல்ல வரவேற்பைப் பெற்றது. பிறகு நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் முகில் (பு.மா.இ.மு), ஜெகதீசன் (பு.மா.இ.மு), தமிழ்மணி (ம.க.இ.க) ஆகியோர் உரையாற்றினர். சுமார் 500 பேர் அளவில் மக்கள் கூடி ஆதரவளித்தனர்.

**கோவை:** ஒண்டிப்புதூர் - சுங்கம் திடலிலிருந்து ஊர்வலம் தொடங்கி பல முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று மீண்டும் சுங்கம் திடலில் முடிவடைந்தது. ம.க.இ.க-வின் பெயர்ப் பலகை சுங்கம் திடலில் வைக்கப்பட்டது; கொடிக்கம்பம் வைத்து கொடியும் ஏற்றப்பட்டது. ஊர்வலத்திற்கு போலீசு கடைசி நேரத்தில் அனுமதியளித்ததால் குறைந்த தோழர்களைக் கொண்டு நடத்தப்பட்டாலும் பகுதி மக்களிடையே பிரச்சாரம் சிறந்த வீச்சை ஏற்படுத்தியது.

**பள்ளிப்பாளையம்:** புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி சார்பாக மேதினத்தையொட்டி சைக்கிள் பேரணி நடத்த போலீசு அனுமதி மறுத்ததால் தெருமுனைக் கூட்டம் நடத்தப்பட்டது. ஆவாரங்காடு, பெரியார் நகர், அம்மன்கோவில் ஆகிய பகுதிகளில் தோழர் ராஜேந்திரன் தலைமையில் எட்டு இடங்களில் தெருமுனைப் பிரச்சாரம் நடத்தப்பட்டது. தோழர் பெ.ராஜாராம் உரையாற்றினார். ஒவ்வொரு இடங்களிலும் 50-க்கும் மேற்பட்ட மக்கள் கூடி நின்று கேட்டனர். மேலும் சுவரொட்டி, பிரசுரம் வாயிலாகவும் பவரலாக பிரச்சாரம் எடுத்துச் சென்றது பல அரசியல் கட்சி பிரமுகர்களையும் வியக்கவைத்தது.

**கரூர்:** நகரத்தில் பு.மா.இ முன்னணியின் சைக்கிள் ஊர்வலம் நடத்தப்பட்டது. ம.க.இ.க.-வின் இருண்டகாலம் பாடல் கேசட்டை ஒலிபரப்பிக் கொண்டு தெருவுக்கு தெரு கூட்டம் இருக்கும் இடமெல்லாம் முழக்கங்களுடன் மேதினத்தைப் பற்றி தோழர்கள் உரை நிகழ்த்தினர். ஊர்வலத்திற்கு பாதுகாப்புக்கென வந்த போலீசு "ஆங்காங்கே கூட்டம்போட்டு பேசுவது கூடாது. இது எங்களுக்கு எஸ்.ஐ. உத்தரவு" என்று கூறி மிரட்டிப் பார்த்தது. தோழர்கள் உறுதியுடன் தமது முறையிலேயே பிரச்சாரத்தை தொடர்ந்தனர். குறைந்த சக்தியாக இருந்தாலும் முன்முயற்சியோடு தோழர்கள் நடத்திய ஊர்வலமும் பிரச்சாரமும் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

**திருச்சி நகரைக் குலுக்கிய மே நாள் பேரணி**



## சுருளி தீர்த்தத்தில் குண்டு தினமலரின் அவதூறு

**உத்தமபாளையம்** தாலுகாவிலுள்ள சுருளிமலையில் உள்ள (சுற்றுலா மையம்) கடந்த சில வாரங்களுக்கு முன்பு குண்டு வெடித்து சாராயம் காய்ச்ச சென்றவர் ஒருவர் பலியானார். சம்பவம் நடந்த இடத்தில் ராஜீவைக் கொன்ற "தாணுவை வழிபடுவோம்", மலையாளிகளிடமிருந்து "கண்ணகி சிலையை மீட்போம்" என எழுதப்பட்ட கடிதம் இருந்ததாகவும் செய்தி வந்தது; அருகே உள்ள கம்பம் பகுதியின் விவசாயிகள் விடுதலை முன்னணியினருக்கும் இதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பது போலீசுக்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே உ.பாளைய வட்டாரச் செயலர் மோகனை அழைத்து விசாரித்தனர்; கையெழுத்தை சோதித்தனர். தோழர் சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை என்பதையும் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வாசகமும் எமது நிலைப்பாட்டிற்கு நேரெதிரானது என்பதையும் விளக்கிச் சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

உத்தமபாளையம் தாலுகா 'தினமலர்' நிருபர் ரவி என்பவர் இருவருடன் வந்து தோழர் மோகனை சந்தித்து, இவர்கள் 'இந்திய டுடே'யில் இருந்து வருவ்தாகவும் அறிமுகம் செய்துவைக்க வந்ததாகவும் கூறினார். அவர்கள் வி.வி.மு. பற்றியும் சுருளி மலை குண்டு வெடிப்பு பற்றியும் விசாரிக்கவே தோழர் பதிலளித்தார். ஆனால் பார்ப்பன வெறிபிடித்த "தினமலர்" நாளேட்டுக்கு இச்சம்பவம் பயங்கரவாத பீதியூட்டுவதற்கான செய்தியாகிவிட்டது. தோழர் மோகன் அளித்த பேட்டியை தமது ஆள்

படிப்பகம்

www.padippakam.com

காட்டி வேலைக்கேற்ப திரித்தும் மிகைப்படுத்தியும் எழுதி இச்சம்பவத்தில் இவ்வமைப்பினருக்கும் தொடர்பிருக்கலாம் என்ற தொனியில் அவதூறைப் பரப்பியது. கம்பம் பகுதி போலீசோ இதுதான் சாக்கு என, பொதுக்கட்டம் நடத்த அனுமதி மறுத்ததோடு தட்டியையும் திருடிச் சென்றது. வீட்டில் உட்கார்ந்து பாட்டு பாடக்கூட அனுமதி இல்லையெனவும் மீறினால் உள்ளே தள்ளுவேன் எனவும் மிரட்டி ஆட்டம் போடுகிறது. ஆனால் உத்தமபாளையத்தில் அனுமதி பெற்று 20.4.92 அன்று பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. தோழர் பி.கே.ராஜன் தலைமையில் தோழர்கள் மோகன், தேனி- செல்வராசு, கதிரவன் (ம.க.இ.க) ஆகியோர் உரையாற்றினர். புரட்சிகர கலை நிகழ்ச்சியும் நடந்தது. பெருவாரியான மக்கள் கூடினர். 10 மணிக்கு மேல் அனுமதி இல்லையெனக்கூறி போலீசு மின்சாரத்தைப் பறித்துக் கொண்ட பிறகும் ஒரு மணி நேரத்துக்கும் மேல் மக்கள் ஆதரவுடன் கூட்டம் நடத்தப்பட்டது.

## புதிய கலாச்சாரத்துடன் லெனின் பிறந்த நாள் விழா

**உசிலை** வட்டார வி.வி.மு. புதுமுறையில் தோழர் லெனின் பிறந்த நாள் பிரச்சாரத்தை எடுத்துச் சென்றது. ஏப்.22-ந் தேதி தோழர் ஒருவரது வீட்டுமுன் கொட்டகை போட்டு 17 கிலோ மாட்டு கறியுடன் சாப்பாடு தயாரிக்கப்பட்டு விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் பரிமாறப்பட்டது. பிறகு தோழர் குருசாமி தலைமையில் நடந்த கூட்டத்தில் 4 தோழர்கள் உரையாற்றினர். லெனின் வாழ்க்கை வரலாறு, புரட்சியின் கடமை, நாம் எந்த முறையில் வாழவேண்டும் ஆகிய தலைப்புகளில் பேசினர். பெண்களும் சிறார்களும் உற்சாகமாக பங்கேற்ற இந்த விழாவில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். மாட்டுக்கறி சாப்பிடுவது அதுவும் 'நல்ல நாளில் விசேட உணவாக்கி சாப்பிடுவது சனாதன - இந்து மத 'புனித'த்தையும் நிலப் பிரபுத்துவ கவுரத்தையும் உடைக்கும் என்பதால் இம்முறை கையாளப்பட்டது. பகுதிவாழ் விவசாயிகளிடம் இந்நிகழ்ச்சி சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது.

## அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

**சென்னை:** அண்ணாசாலை - அமெரிக்க தூதரகத்திற்கு எதிரே 12.5.92 அன்று மக்கள் கலை இலக்கியக் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது. கறுப்பினத்தவர்களுக்கு எதிரான அமெரிக்காவின் அடக்குமுறையை கண்டித்தும், ராக்கெட் தொழில் நுட்ப உதவியை ரஷ்யாவிடம் இருந்து பெறக்கூடாது என தடைவிதித்து ஆட்டம் போடும் அமெரிக்க ஆதிக்க வெறியை கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்ட தட்டிகளுடன் தோழர்கள் ஏறக்குறைய ஒரு மணிநேரமாக இட்ட முழக்கம் சிறந்த வரவேற்பை பெற்றது. இப்பிரச்சினை தொடர்பாக எந்த கட்சியினரும் அமைப்பினரும் நடவடிக்கைபூர்வமாக எதுவும் செய்யாதபோது ம.க.இ.க.-வின் இந்த ஆர்ப்பாட்டம் பலர் பேசக்கூடிய அளவிற்கு பிரச்சாரமானது.

மேலும் இதற்கு முதல்நாள் எழும்பூர் ரயில் நிலைய அதிகாரிக்கு ரயில் நிலையத்தில் வெடிகுண்டு வைக்கப்போவதாக வந்த மிரட்டல் கடிதத்தில் ம.க.இ.க. பெயர் இருந்ததாக நாளேடுகளில் வந்த செய்திக்கு மறுப்பறிக்கையும் இங்கு தோழர் சீனிவாசனால் வாசிக்கப்பட்டது. வெடிகுண்டு போன்ற பயங்கரவாத - சாகச செயல்களில் எமக்கு நம்பிக்கையில்லை என்றும் இச்செயல் ம.க.இ.க. மீது அவதூறைப் பரப்புவதற்காக போலீசால் செய்யப்பட்டது என்றும் மறுப்பு வெளியிடப்பட்டது.

## விலைவாசி - தடா எதிர்ப்பு பொதுக்கூட்டங்கள்

விலைவாசி உயர்வை கண்டித்தும், தடா - தே.பா.ச போன்ற அடக்குமுறை சட்டங்களை எதிர்த்தும் பொதுக்கூட்டங்கள் புரட்சிகர அமைப்புகளால் பரவலாக நடத்தப்பட்டது. **திருச்சியி**ல் ஏப்ரல் 8-ல் அரியமங்கலத்திலும், ஏப்.20-ல் உறையூரிலும் ம.க.இ.க.-வின் பொதுக்கூட்டங்களும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. **தஞ்சை**யில் 18.4.92 அன்று கீழவாசலில் ம.க.இ.க-வின் பொதுக்கூட்டம் நடந்தது. மேற்கண்ட கூட்டங்களில் 500 பேர், 1000 பேர் அளவில் மக்கள் கூடி ஆதரவளித்தனர். **ஊற்றங்கரை**யில் பு.மா.இ.மு.-வின் பொதுக்கட்டத்திற்கு 11.4.92 அன்று போலீசு அனுமதி மறுத்ததால் தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது. போலீசின் அராஜகமும் அம்பலப்படுத்தப்பட்டது. ●

# மாயனூர் 'டான்செம்' தொழிற்சாலை: கதவடைப்புக்கு எதிரான போராட்டம்

**க**டந்த 11.5.92 அன்று 'டான்செம்' தொழிலாளர்கள் - மாயனூர் பைப்ஸ், ஆலங்குளம் சீட், அரியலூர் சிமெண்ட், விருத்தாசலம் பீங்கான் தொழிற்சாலைகளைச் சேர்ந்த தொழிலாளர்கள் - ஆலைகள் தனியாருக்கு தாரைவார்ப்பதைக் கண்டித்து சென்னை குறளகம் முன்பு உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

மாயனூரில் உள்ள தமிழ்நாடு ஆஸ்பெஸ்டாஸ் (பைப்ஸ்) தொழிற்சாலையின் அவல நிலையும் அதிகாரிகளின் முறைகேடுகளையும் பற்றி ஏற்கனவே புதிய ஜனநாயகம் இதழ்களில் எழுதியுள்ளோம். பல மாதங்களாக உற்பத்தி பிரிவு இயங்காமல் பராமரிப்பு போன்ற சிறுசிறு வேலைகளே இங்கு நடந்து வருகிறது. மாயனூர் - டான்செம் அதிகாரிகள் 14.01.92 அன்று ஆலைக்கு லே ஆ∴ப் (கதவடைப்பு) விடுவதாகவும் 173 தொழிலாளர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்றும் 78 பேருக்கு மட்டுமே வேலை என்றும் அறிவித்தார்கள். இதற்கான உத்தரவை ஆணையரிடமிருந்தும் அரசிடமிருந்தும் பெறுவதற்கு நிர்வா... மு.க. தொழிற்சங்க கருங்காலிகள் லே ஆ∴ப் வராது என்றும் நாங்கள் எம்.எல்.ஏ., முதல்வரையெல்லாம் பார்த்து பேசியுள்ளோம் என சவடாலடித்து திரிகிறார்கள்.

கதவடைப்பைக் கண்டித்து பொது தொழிற்சங்கம், தி.மு.க. தொழிற்சங்கம், ஸ்டாப் அசோசியேசன் ஆகிய சங்கத்தினர் சேர்ந்து 2,3,4-3-92 ஆகிய நாட்களில் உண்ணாவிரதம் இருந்தார்கள். 5-3-92 அன்று நடந்த பேச்சுவார்த்தையில் "இப்போது லே ஆ∴ப் இல்லை; 9 கோடியே 55 லட்சத்திற்கு ஆர்டர் வந்திருக்கிறது. ஆனாலும் இது எவ்வளவு நாளுக்கு ஓடுமோ தெரியவில்லை. லே ஆ∴ப் எப்போதும் விட்டாலும் விடலாம்" என அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்ற கதையாக உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார்கள்! அக்டோபர் '91 முதல் மார்ச் '92 வரை உற்பத்தியான பைப்பு தேக்கம் 4.5 கோடி ரூபாய் இருக்கிறது. இப்போது கையில் ஆர்டர் இருப்போ 9.55 கோடி ரூபாயாகும். [illegible] அதிகாரிகளின் கொள்ளை, நிர்வாகத் திறமையின்மையா...

...தும் அதனாலேயே லே ஆ∴ப் நிலைமை உருவாகிறது என்பதும் உண்மை. அதிகாரிகளின் 'காண்டிராக்ட்' கொள்ளை தொடர்ந்தால் லே ஆ∴ப் விடக்கூடிய அபாயம் தொடரவே செய்யும்; இதைத்தான் அதிகாரிகள் சொல்லாமல் சொல்கிறார்கள்.

ஆஸ்பெஸ்டாஸ் பைப் உற்பத்திக்குப் பதிலாக ஆஸ்பெஸ்டாஸ் தகடு செய்ய இயந்திரம் வாங்கி தகடு உற்பத்தி செய்தால் பிரச்சினை தீரும் என அப்பாவித்தனமாக தொழிலாளர்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

எந்தப் பொருளை தொழிலாளி உற்பத்தி செய்தாலும் ஊழல் பெருச்சாளிகளான அதிகாரிகளிடத்தில் உற்பத்தியான பொருளின் நிர்வாகம், விற்பனை, விநியோகம் போன்ற அதிகாரம் இருக்கும்வரை பிரச்சினை தீராது. ஆலையின் நிர்வாக அதிகாரம் என்றைக்கு தொழிலாளர்கள் கைக்கு வருகிறதோ அன்றுதான் தொழிலாளர்களின் பிரச்சினைகள் நிரந்தரமாக ஒழியும். அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு தொழிலாளர்கள் துரோக - சந்தர்ப்பவாத தலைமைகளைத் தூக்கியெறிந்துவிட்டு புரட்சிகர சங்கங்களில் ஒன்று திரளவேண்டும். பரந்துபட்ட மக்களின் போராட்டங்களுடன் தம்மை இணைத்துக் கொண்டு ஒரு சமூக மாற்றத்திற்கு வித்திடவேண்டும்.

— தகவல்: பு.ஜ. வாசகர் வட்டம்,

www.padippakam.com

## ஆப்கான்:

# போராளிகளின் வெற்றி இந்தியாவின் பீதி

ரஷியாவின் ஆக்கிரமிப்பு - பொம்மையாட்சியை எதிர்த்து 13 ஆண்டு காலமாக நடத்திவந்த ஆயுதப் போராட்டத்தில் ஆப்கானின் முஜாஹிதீன் கொரில்லாக்கள் இறுதி வெற்றியைச் சாதித்துள்ளனர். ரஷிய ஆக்கிரமிப்புப் பண்டைகள் விலகிய பிறகு, கடந்த ஈராண்டுகளாக, மயிரிழையில் தொங்கிக் கொண்டிருந்த நஜிபுல்லாவின் அரசு வீழ்த்தப்பட்டு, முஜாஹிதீன்களின் இடைக்கால அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளது. ஐ.நா. மன்றத்தின் பெயரால் அமெரிக்கா மற்றும் பிற ஏகாதிபத்தியங்களின் சமரச முயற்சிகளை மீறி இந்த ஆட்சி மாற்றம் நடந்தேறிய போதிலும், முஜாஹிதீன் குழுக்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியின் காரணமாக ஆப்கானில் தொடரும் உள்நாட்டுப் போர் இன்னமும் ஓயவில்லை.

இந்தியாவின் வடமேற்கே பாகிஸ்தான், ஈரான், ரஷ்யக் கூட்டாட்சி நாடுகளுக்கு இடையேயுள்ள சின்னஞ்சிறு நாடுதான் ஆப்கானிஸ்தான். பின்தங்கிய நிலப்பிரபுத்துவ உற்பத்திமுறையின் காரணமாக ஒரே தேசிய இனமாக வளர்ச்சியடையாத நிலையில் பத்துக்கும் மேற்பட்ட பழங்குடி இனங்களைக் கொண்ட நாடு அது.

ஆசிய கண்டத்தை அடிமைப்படுத்தும் யுத்த தந்திர திட்டத்தின் ஒரு பகுதியாக 1980-ல் ரஷிய வல்லரசு ஆப்கானை ஆக்கிரமித்தது. அதன் ஆதிக்கக் கனவுகளுக்கு எதிராக ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போராளிகள் எனப்படும் முஜாஹிதீன்கள் ஆயதமேந்திய கொரில்லா போராட்டத்தில் ஈடுபட்டனர். ரஷியாவுடனான உலக மேலாதிக்கப் போட்டியில் அமெரிக்க ஏகாதிபத்தியம் முஜாஹிதீன்களுக்கு ஆயுதமும் நிதியுதவியும் அளித்து ஆதரித்தது. முஸ்லீம்கள் என்பதால் ஈரான், பாகிஸ்தான் மற்றும் அரபு நாடுகள் முஜாஹிதீன்களுக்கு ஆயுத உதவி செய்தன. ஆப்கானின் தேச விடுதலைப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு தமக்குச் சாதகமான ஆட்சியை ஆப்கானில் நிறுவும் நோக்கத்துடன் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு முஜாஹிதீன் குழுவை ஆதரித்துவந்தன.

ஏறத்தாழ 2 கோடி மக்கட் தொகையைக் கொண்ட ஆப்கானில் பஷ்டூக்கள் எனப்படும் பத்தானியர்கள் 40 சதவீதத்தினர். இதுதவிர தாஜிக், உஸ்பெக், பலுச், துருக்மான், ஹசாரா முதலான இனத்தவர்களும் வடமேற்கே பல்வேறு பழங்குடி இனத்தவர்களும் உள்ளனர். அமெரிக்கா மற்றும் பாகிஸ்தானால் நேற்றுவரை ஆதரிக்கப்பட்ட பஷ்டூன் இனத்தைச் சேர்ந்த ஹெக்மத்தியாரின் ஹிஸ்ப் - இ - இஸ்லாமி எனும் கொரில்லாக் குழு- இப்போது அதிகாரப் போட்டியில் பின்னுக்குத் தள்ளப்பட்டுவிட்டது. ''ஆப்கானின் சிங்கம்'' என்றழைக்கப்படும் தாஜிக் இனத்தைச் சேர்ந்த தளபதி மசூத் தலைமையிலான ஜமாத்-இ-இஸ்லாமி குழுவே இப்போது அதிகாரப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது. சௌதி அரேபிய ஆதரவு பெற்ற இட்டேஹாட்-இ-இஸ்லாமி, தற்போதைய இடைக்கால அரசின் அதிபர் முஜாதிதி தலைமையிலான நிஜாத்-இ-மில்லி, முன்னாள் மன்னர் ஜாகிர் ஷா ஆட்சியை மீண்டும் நிறுவத் துடிக்கும் மஹராஜ்-இ-மில்லி முதலான 10-க்கும் மேற்பட்ட குழுக்களுடன் கூட்டுச் சேர்ந்து மசூத் தலைமையிலான குழு அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளது.

நேற்றுவரை ரஷிய பொம்மையாட்சியின் அதிபர் நாஜிபுல்லாவை ஆதரித்து வந்த தோஸ்தம் தலைமையிலான ஜோஸ் ஜானி கூலிப்படைகள், நஜிபுல்லா ஆட்சி கவிழ்ந்ததும் இன்று மசூதை ஆதரிக்கின்றன. நஜிபுல்லா அரசின் வெளியுறவு அமைச்சராக இருந்த அப்துல் வக்கீல் இன்று சந்தர்ப்பவாதமாக மசூதை தனது சகோதரர் என்றும், நஜிபுல்லாவை வெறுக்கத்தக்க சர்வாதிகாரி என்றும் சாடுகிறார். இத்தகைய பிழைப்புவாதிகள், துரோகிகள், சந்தர்ப்பவாதிகளுடன் கூட்டுச் சேர்ந்து மசூத் அதிகாரப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார். தாங்கள் எதிர்பார்த்தவாறு ஆட்சி அமையாத போதிலும் மாறிய நிலைமைகளின் காரணமாக மேலை நாடுகளும், இஸ்லாமிய நாடுகளும் மசூதையே ஆதரிக்கின்றன. அதிகாரத்தில் உரிய பங்கு கிடைக்காததால், மசூதின் சந்தர்ப்பவாதக் கட்டணியோடு பேரங்கள் நடத்திக் கொண்டிருக்கும்போதே அதை எதிர்த்தும், கூலிப் படைகளையும் துரோகிகளையும் தலைநகரைவிட்டு வெளியேற்றக் கோரியும் ஹெக்மத்தியார் எதிர்த்தாக்குதல் நடத்திவருகிறார்.

இத்தகைய குழப்பங்கள் - பலவீனங்கள் இருந்த போதிலும் முஜாஹிதீன் நடத்தியிருப்பது ஆக்கிரமிப்புக்கு எதிரான நியாயமான யுத்தமாகும். நாட்டின் விடுதலைக்கு அவர்கள் அளப்பரிய தியாகத்தைச் செய்துள்ளனர். அவர்களது சுதந்திரப் போராட்டத்தை, ஆதரித்து அங்கீகரிப்பது ஒடுக்கப்பட்ட நாட்டு மக்களது கடமையாகும். ஆனால் இந்திய அரசோ கடைசி நிமிடம் வரை ரஷியக் கைக்கூலி நஜிபுல்லாவை ஆதரித்து, அவரைக் காப்பாற்றுவதிலேயே குறியாக இருந்தது. இன்று அவருக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரிக்கவும் தயாராக உள்ளது.

1980-இல் ரஷியா நேரடியாக ஆப்கானை ஆக்கிரமித்தபோது, கூட்டுச்சேரா நாடாக தன்னை அறிவித்துக் கொண்டுள்ள இந்தியா, ரஷியாவின் கூட்டாளி நாடாக நின்று கொண்டு ஆக்கிரமிப்பை ஆதரித்தது. அதனுடன் சேர்ந்துகொண்டு இடது, வலது போலிக் கம்யூனிஸ்டுகள் ஆப்கானில் சோசலிசம் வந்துவிட்டதாக ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தினர். ரஷிய ஆக்கிரமிப்பாளர்களின் அட்டூழியங்களைக் கண்டு அஞ்சி அகதிகளாக ஓடிவந்த ஆப்கான் அகதிகளைக் கூட மனிதாபிமானமின்றி இந்திய அரசு விரட்டியது. அவர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அவதூறு செய்தது. இன்று நஜிபுல்லா அரசு வீழ்ந்த பிறகும்கூட, நஜிபுல்லாவைக் காப்பாற்றவும், அவரது ''வாட்டன்'' கட்சிக்கு இடைக்கால அரசில் பிரதிநிதித்துவம் கோரியும் ரகசிய உளவுப் படையான ''ரா'' மூலம் பல சதிகளைச் செய்து வருகிறது.

கடைசியில், உலக முழுவதுமுள்ள துரோகிகள் - சர்வாதிகாரிகளின் புகலிடமாக இந்தியா மாறிவிட்டது. திபெத்தின் தலாய்லாமா, ஈழத்தின் வரதராஜபெருமாள்

**''போராளிகளே, காபூல் உங்களை வரவேற்கிறது!'' - தலைநகரில், விடுதலையைச் சாதித்த போராளிகளுக்கு ஆப்கான் மக்களின் வரவேற்பு: அப்பதாகையின் கீழ் ஓய்வெடுக்கும் முஜாஹிதீன்கள்.**




படிப்பகம்

www.padippakam.com

கேடுகெட்ட வெளியுறவுக் கொள்கையின் விளைவு இது.

இதனாலேயே முஜாஹிதீன்கள் இந்தியாமீது ஆத்திரமடைந்துள்ளனர். "நாங்கள் ஜிகாத் (புனிதப்போர்) நடத்தியபோது இந்தியா பின்பற்றிய கீழ்த்தரமான கொள்கைகளையும் சதிகளையும் எங்களால் மறக்கவோ மன்னிக்கவோ முடியாது" என்கிறார் மசூத்.

ஆப்கானில் நடந்துள்ள ஆட்சி மாற்றம், இந்திய பிற்போக்கு ஆட்சியாளர்களுக்கு புதிய தலைவலியை ஏற்படுத்தியுள்ளது. பெருமளவு அதி நவீன ஆயுதங்களையும், ஆயுதத் தளவாட உற்பத்திச் சாலைகளையும் கொண்டுள்ள முஜாஹிதீன்கள் காஷ்மீரின் ஹிஸ்புல் மற்றும் பிற முஸ்லிம் அடிப்படைவாதக் குழுக்களுக்கு ஆயுத உதவி செய்தது தொடரவே செய்யும். மேலும் காஷ்மீர் விவகாரத்தை சர்வதேச அரங்கில் முக்கிய பிரச்சினையாக்க முஜாஹிதீன் அரசு தீவிரமாக முயற்சிக்கும்.

ஆப்கானில் இஸ்லாமிய அடிப்படைவாத அரசு அமைந்ததும், பாகிஸ்தானின் ஆளும் கட்சி கூட்டணியிலுள்ள ஜமாத்-இ-இஸ்லாமி கட்சி பாகிஸ்தானை இஸ்லாமிய நாடாக்கக் கோருவதோடு, காஷ்மீர் போராளிகளை பகிரங்கமாக ஆதரிக்குமாறும் பாக். அரசை நிர்பந்தித்து வருகிறது. இவையனைத்தும், கைபர் கணவாய் வழியே புதிய நெருக்கடிகளை இந்திய பிற்போக்கு அரசு எதிர்கொள்ளப் போவதை உறுதிப்படுத்துகின்றன.

பயங்கரவாத பூச்சாண்டி காட்டி, காஷ்மீர் போராளிகளை ஒடுக்குவதன் மூலமோ, காஷ்மீரில் மோசடித் தேர்தல் நடத்தி பொம்மையாட்சியை நிறுவுவதன் மூலமோ முஜாஹிதீன்களையும் காஷ்மீர் போராட்டத்தையும் அமைதிப்படுத்திவிட முடியாது. முஜாஹிதீன்களின் வெற்றியின் விளைவாக புதிய உத்வேகத்தோடு காஷ்மீரின் சுயநிர்ணய உரிமைப் போர் தீவிரமடையவே செய்யும். என்ன செய்வது? வினை விதைத்த இந்திய பிற்போக்கு அரசு அதை அறுவடைசெய்துதான் ஆகவேண்டும்.

● ● ●

அளப்பரிய தியாகங்களைச் செய்து ஆயுதப் போராட்டத்தின் மூலம் முஜாஹிதீன்கள் வெற்றிபெற்றுள்ள போதிலும் அமெரிக்கா மற்றும் முஸ்லிம் ஆதிக்க நாடுகளின் வஞ்சக வலையில் சிக்கியுள்ளதால் ஆப்கானின் தேசிய சுதந்திரமும் சுயாதிபத்தியமும் தொடர்ந்து நீடிக்குமா என்பது கேள்விக் குறியாகிவிட்டது. மறுபுறம், இஸ்லாமிய அடிப்படைவாதத்தில் மூழ்கியுள்ள முஜாஹிதீன்கள் "ஷாரியத்" சட்டப்படி ஆட்சி நடத்தப் போவதாக அறிவித்து ஜனநாயக ஆட்சிக்கான அடிப்படைகளையே தகர்த்தெறிந்துவிட்டார்கள். போதாக்குறைக்கு முஜாஹிதீன்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியின் காரணமாக ஆப்கான் தீராத உள்நாட்டுப் போர் அபாயத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறது. தேசிய சுதந்திரத்தைக் கட்டிக்காக்கவும் ஜனநாயகத்தை மீட்கவும் ஆப்கான் மக்கள் தொடர்ந்து போராடாவிட்டால், நாயிட

## தி.மு.க. உட்கட்சி தேர்தல்:

# அம்மணமாகியது ஜனநாயக வேடம்

"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு" என்பதும் "இந்தியாவிலேயே ஜனநாயகப் பூர்வமாக தேர்தல் நடக்கும் ஒரே கட்சி இது" என்பதும் தி.மு.க. பீற்றிக் கொள்ளுபவை. இவை வெறும் காகித எழுத்தாக்கி பட்டம் விட்டுக் கொண்டிருந்தவர்கள் இன்று அதன் நூலையும் கைவிட்டு பறந்து போகச் செய்து விட்டார்கள். தி.மு.க.-வின் ஜனநாயக வேடம், கட்டுப்பாடு கோஷம் எல்லாம் இந்த ஆண்டு ஒன்றிய, நகர, மாவட்ட நிர்வாகிகளின் (உட்கட்சி) தேர்தலில் அம்மணமாகிவிட்டன.

● சென்னை - திருவான்மியூர், 150-வது வட்ட செயலாளர் தேர்தலில் 18.4.92 அன்று நடந்த கோஷ்டி தகராறில் முன்பு கிளைச் செயலாளராக இருந்த மணி என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார். இவர் தி.மு.க. இளைஞரணி தலைவர் மு.க.ஸ்டாலினுக்கும், மாவட்ட செயலாளர் டி.ஆர்.பாலுவுக்கும் வேண்டப்படாத நபர். ஆனால் பகுதியிலே தி.மு.க-வினரிடையே செல்வாக்கு மிக்கவர். இவ்வாண்டு செயலாளர் தேர்தலில் போட்டியிடக்கூடாது என தலைமை மிரட்டவே விலகி கொண்டார். ஆனால் அதற்குப் பிறகும் எதிர் தரப்பு வேட்பாளருக்காக பிரச்சாரம் செய்தார் என்பதால் தீர்த்து கட்டிவிட்டார்கள்!

● பட்டுக்கோட்டை நகரசபைத் தேர்தலில் விசுவநாதன், சீனி.பன்னீர்செல்வம் தலைமையிலான கோஷ்டிகள் மோதின. 29 வார்டுகளில் 7-ல் தேர்தலின்றி சீனி.பன்னீர்செல்வத்தின் ஆட்கள் வெற்றி பெற்றதோடு பெரும்பான்மையான வார்டுகளையும் வெற்றி கொள்வார்கள் என்ற நிலையே இருந்தது. பல ஏக்கர் நிலங்களின் சொந்தக்காரரும், சினிமா தியேட்டர், கார், பங்களா அதிபதியும், இதுவரை நகரசபைத் தலைவராக இருந்து வந்தவருமான விசுவநாதனால் பன்னீர்செல்வத்தின் செல்வாக்கை சகிக்க முடியவில்லை. தன்னுடைய கோட்டையிலேயே தனக்கு தோல்வியா என ஆத்திரப்பட்டு சீனி.பன்னீர்செல்வத்தின் செல்வாக்கை முறியடிக்க பல வழிகளிலும் முயன்று முடியாமல் போகவே ஆளையே கொல்லத் திட்டமிட்டார். 27.4.92 அன்று விசுவநாதன், ஆட்களுடன் வந்து சீனி.பன்னீர்செல்வத்தை போலீசு நிலையத்தின் அருகேயே வெட்டியும் சுட்டும் கொன்றார். இவர், போலீசு அதிகாரிகளை லஞ்சம் கொடுத்து தனக்கு சாதகமாக்கிக் கொண்டார் என்று கூறப்படுகிறது. இன்னும் இவர் கைது செய்யப்படாதது இதை உறுதிபடுத்தவே செய்கிறது. மேலும் இரு வாரம் கழித்து சீனி.பன்னீர்செல்வத்தின் மனைவியும், தம்பியும் துக்கம் தாழாமல் தற்கொலை செய்து கொண்டதாக செய்தி வந்துள்ளது.

**கருணாநிதியின் கடைக்கண் பார்வையில்தான் தி.மு.க.-வின் ஜனநாயகம் தீர்மானிக்கப்படுகிறது. தி.மு.க. அடுப்பறைக்குள் நடந்த கோஷ்டி மோதல், பரிணாம வளர்ச்சியடைந்து புதிய வடிவமெடுத்து கருணாநிதியின் கைமீறி இன்று சந்திக்கு வந்து நாறுகி**

● புதுகை - திருவரங்குளம் ஒன்றியச் செயலாளர் பதவிக்குப் பெரியண்ணன் கோஷ்டியைச் சேர்ந்த தங்கவேலுவும், முன்னாள் கால்நடை அமைச்சர் சந்திரசேகரன் கோஷ்டியைச் சேர்ந்த சுப்பிரமணியமும் போட்டியிட்டனர். இரு கோஷ்டியினரிடையே நடந்த மோதலில் சுப்பிரமணியத்தின் மகன் கொல்லப்பட்டார். 15 பேர் படுகாயமடைந்தனர். இதுவன்றி திருமயம், அரிமளம் ஆகிய ஒன்றியத் தேர்தல்களிலும் மேற்கண்ட இரு கோஷ்டியினருக்குமிடையே அடிதடி வெட்டுக் குத்து நடந்து 7 பேர் படுகாயமடைந்தனர். மேலும் புதுகை நகரச் செயலாளர் தேர்தலில் இரு கோஷ்டியினரும் வார்டு நிர்வாகிகளை கடத்திச் சென்று மது, மாது, பணத்தால் குளிப்பாட்டியிருக்கிறார்கள்!

● வத்திராயிருப்பு ஒன்றிய தேர்தலில் சீனிவாசன் என்பவருக்கும், வக்கீல் சேதுராமன் என்பவருக்கும் இடையே ஏற்பட்ட கோஷ்டி மோதலில் 11 பேருக்கு அரிவாள் வெட்டு விழுந்து படுகாயமடைந்தனர். இதில் மலைச்சாமி என்பவரது நிலை மோசமாக உள்ளது.

● நெல்லை - பாளையங்கோட்டை நகர செயலாளர் போட்டியில் வை.கோபால்சாமி, ஆலடி அருணா ஆகியோரது கோஷ்டியினர் மோதினர். இங்கு ஆள் கடத்தப்பட்டு அவர்களுக்கு சாராயம் சப்ளை செய்யப்பட்டது.

● மேட்டூர் - கொளத்தூர் ஒன்றியத் தேர்தலில் வாக்காளர்கள் கத்தி முனையில் மிரட்டப்பட்டனர். கழகக் கண்மணிகள், பெருமளவிற்கு கள்ள ஓட்டும் இங்கு போட்டனர்.

● ஈரோடு நகரச் செயலர் தேர்தலில் தில்லுமுல்லுகள் நடந்ததைத் தெடர்ந்து பாதிக்கப்பட்ட கோஷ்டியினர் வழக்குத் தொடுக்கவே, தேர்தல் முடிவு அறிவிப்பிற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

ஆகியோர் போட்டியிட்டனர். பொன்முடி கோஷ்டி, வாக்காளர்களை கடத்தி தோட்டத்தில் அடைத்துவைத்து தலைக்கு 2 ஆயிரம் ரூபாயும், மதுவும் சப்ளை செய்தது. அப்படியும் வெற்றிபெற வாய்ப்பில்லாததால் பொன்முடி தலைமை கழகத்திற்குச் சென்று அமைப்பு செயலாளர் நீலநாராயணன் மூலம் சுமார் 20,000 ரூபாயை கைமாற்றி பழனிசாமி பெயரையே வேட்பாளர் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டார். தேர்தல் நாளன்று பழனிச்சாமி பெயரில்லாததற்கு எதிர்ப்பு தெரிவித்து பெரும்பான்மையோர் ஓட்டுப் போடாமல் வெளியேறிவிட்டனர். அதற்குப் பிறகும் தோதல் நடந்து முடிந்தது.

பல இடங்களில் தேர்தல் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. தி.மு.க. தலைமை கழகம், ஒருசிலர் மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. ஒன்றியம், நகரம், வட்டம் போன்ற கீழ்மட்ட தலைமைக்கான தேர்தல்களே இந்த லட்சணம்! இன்னும் மாவட்டம் மற்றும் பொதுக்குழு தேர்தல்கள் நடந்துமுடியவில்லை.

★ ★ ★

கோஷ்டி மோதல் தி.மு.க.-வில் புதியது அல்ல. காலங்காலமாய் இருப்பதுதான். கருணாநிதியின் கடைக்கண் பார்வையில்தான் தி.மு.க-வின் ஜனநாயகம் தீர்மானிக்கப்படுகிறது. கருணாநிதியின் கடைக்கண் பார்வை விழுந்தவர்தான் நகரக்கழக, மாவட்டக்கழக தலைமைக்கு வரமுடியும் என்பது உடன்பிறப்புக்களுக்கிடையே உள்ள ரகசியம். எனவே கருணாநிதியின் கருணையைப் பெற பல கோஷ்டிகள் போட்டி போடுவதும், எதிர்த்தரப்பைப் பற்றி கருணாநிதியிடம் புகார் செய்வதும் ஏதாவது பிரச்சினையில் மாட்டிவிடுவதும், காலை வாரிவிடுவதும், சதித்தனங்களின் மூலம் அவப்பெயர் ஏற்படுத்துவதும் கருணாநிதி தம்பிகளின் கைவந்த கலை. ஆனாலும் கருணாநிதி நரித்தந்திரி அல்லவா? தம்பிகளின் சிலும்புத்தனங்களையெல்லாம் அறிந்து புரிந்துகொண்டு, ஆள் தராதரம், பணபலம், சாதிபலம், ஆள்பலம் பார்த்தும் தனக்கு பலம் சேர்ப்பவரா, பலவீனம் சேர்ப்பவரா, கடந்தகால விசுவாசம் - 'ஜால்ரா' தன்மையெல்லாம் பார்த்தும் சீர்தூக்கி கண்ணசைப்பார். இவற்றையெல்லாம் மீறி பிரச்சினை கிளப்புபவர்கள், கலகம் செய்பவர்கள், முணுமுணுப்பவர்கள், முரண்டு பிடிப்பவர்களை அவர்களது 'செல்வாக்கை' பொறுத்து சமாதானம் அல்லது அடிதடி அல்லது அவர்களது சீரழிவு, ஊழல் ரகசியங்களை வெளிக்கொணர்ந்து மிரட்டுவதன் மூலம் மட்டம்தட்டி வைப்பார். இப்படி தி.மு.க அடுப்பங்கறைக்குள் நடந்த அடிதடிகள் எல்லாம் பரிணாம வளர்ச்சியடைந்து புதிய வடிவமெடுத்து கருணாநிதியின் கைமீறி இன்று சந்திக்கு வந்து நாறுகிறது அவ்வளவுதான்! அடிதடி, வெட்டுக்குத்து, கள்ள ஓட்டு, ஆள் கடத்தல், மது-மாது-பணக் குளியல், கொலை முதலியவை ஓட்டுப் பொறுக்கி அரசியலின் பாரம்பரியமாக இருக்கையில் அவையே தி.மு.க-வின் பிழைப்புவாத தேர்தலிலும் வெளிப்பட்டிருப்பது ஆச்சரியமும் அல்ல!

தி.மு.க-வின் கோஷ்டிப் பதவிக்கு

உரம் ஊட்டியதும் கருணாநிதிதான். எதிர்க்கட்சி நிலையும் இல்லாத படுதோல்வியை சந்தித்த பின்னும் கருணாநிதி அதைத்தான் செய்தார். வை.கோ-வின் விடுதலைப்புலி ஆதரவு நடவடிக்கைகளை கத்தரித்ததால் வை.கோ. கோஷ்டி வலுப்பெற்றது. கட்சியை குடும்பச் சொத்தாக்கும் முயற்சியும் ஸ்டாலினை தனது வாரிசாக்கும் முயற்சியும் கட்சியின் பழம் பெருச்சாளிகளில் ஒரு பிரிவினரை தனி கோஷ்டியாக்கியது. சுப்புலட்சுமியின் குடும்பமே தடாவில் கைதாகியும் அதற்கு எதிரான போராட்டத்தை பெயரளவிற்கு நடத்தியது; தோல்வியை தந்துவிட்டார்கள் என்பதால் மக்கள் அவதிபடட்டுமென விலைவாசி உயர்வுக்கு எதிரான போராட்டத்தைக் கூட ஒப்புக்கு நடத்தியது; தி.மு.க-வின் பேச்சாளர்களை கைது செய்வதோடு கே.பி.ராமலிங்கம் கூட்டத்தில் ஆள் வைத்து தாக்குமளவிற்கு ஜெயாவின் அட்டகாசம் நடந்தும் கருணாநிதி இன்னும் கடிதமெழுதி கொண்டிருப்பது — இவையெல்



பட்டுக்கோட்டை தி.மு.க. கோஷ்டி மோதலில் காயமடைந்தவர்; உள்ளே, கொலையுண்ட சீனி.பன்னீர்செல்வம்

லாம் தி.மு.க-வின் அதிருப்தியாளர்களை பெருக்கின. கோஷ்டிகள் செழிக்க வழிவகுத்துக் கொடுத்தன. சுருக்கமாகச் சொன்னால் ஜெயாவின் பாசிச - பார்ப்பனத் தாக்குதல் சூழ்ந்த இக்கட்டத்தில் கருணாநிதியின் தி.மு.க-வின் அரசியலற்ற, செயலற்ற இத்தன்மை கட்சியை மேலும் பலவீனமாக்கியது. கோஷ்டிகள் தலையெடுக்க அடித்தளமானது. தம்பிகளின் பிழைப்புவாத போதை, பதவிவெறி தலைக்கேறி வெறிக்கூத்தாடச் செய்துவிட்டது.

கட்சியின் பதவிக்கு மோதும் தலைகள் பெரும்பாலும் நில முதலைகளாகவோ, முதலாளிகளாகவோ, சமூக விரோத தொழில் புரியும் செல்வந்தர்களாகவோ இருக்கிறார்கள். தி.மு.க அடுத்து ஆட்சியை பிடிக்கும், அப்பொழுது ஒரு வாரியத் தலைவராகி சம்பாதிக்கலாம் அல்லது ஏதோ ஒரு அரசு நியமன உறுப்பினராகி சம்பாதிக்கலாம் அல்லது

காண்டிராக்ட ஏலம் எடுத்து கொள்ளையடிக்கலாம்; எதிர்க் கட்சியாக இருந்தாலும் காட்டிக் கொடுத்து அம்பலப்படுத்த மாட்டேன் எனக் கூறி ஆளுங்கட்சியுடன் உடன்பாடு செய்து சில 'காண்டிராக்ட்' ஏலத்தை எடுத்து கொள்ளையடிக்கலாம்; முதலாளியாகவோ, வியாபாரியாகவோ இருந்தால் தொழிலை விரிவுபடுத்த பிற பகுதி கழகத் தலைவர்கள் மூலம் சமூகத் தொடர்புகள் கிடைத்து லாபம் ஈட்டலாம்; சூதாட்டம், கள்ளச்சாராயம், விபச்சாரம் போன்ற சமூக விரோத தொழில் முதலாளியாக இருந்தால் பதவி - ஆள், அந்தஸ்து செல்வாக்குடன் தொழிலை பாதுகாத்துக்கொள்ள உதவும் - இதுபோன்ற காரணங்களே கருணாநிதியின் தம்பிகளை கட்சிபதவிக்காக வெறிக் கொள்ளச் செய்கிறது.

ஒரு சிலர் பெரிய அளவிற்கு பொருள் சம்பாதிக்கும் நோக்கம் இல்லாமல் அன்றாட அனைத்து செலவுகளுக்கும் குறைந்தபட்சம் சம்பாதித்தால் போதும் என்ற அளவில் கவுரவம், தகுதி மரியாதையை விரும்பி இப்பதவிகளுக்காக மோதுகிறார் ஊர்த்தகராறு, வரப்புத்தகராறு, குடும்பத்தகராறு எனவும், கடன் உதவி, வேலை சிபாரிசு, சட்ட - வழக்கு உதவி எனவும் கட்சிக்காரர்கள் தேடி வருவது இவர்களுக்கு கவுரவம்! கட்சி பதவி செல்வாக்குடன் போய் போலீசு, அதிகாரிகளுடன் பேரம் பேசி பிரச்சினையை தீர்த்து வைப்பார்கள்! எதிர்கட்சி நிலையில் இருந்தாலும் அதிகாரிகள், ஆளுங்கட்சியாய் இருந்தபோது கூட்டு சேர்ந்து 'சாப்பிட்ட' விசுவாசத்திற்காகவாவது உதவி செய்வார்கள். இதுவல்லாமல் கட்சி கூட்டங்கள், ஊர்வலங்கள், மாநாடுகள், தேர்தல்களின்போது நிதிவசூலிப்பதில் மையத்திலிருந்து வரும் நிதியில் தமக்கு இல்லாவிட்டாலும் தமது சகபாடிகள், கைக்கும்பலுக்கு தீனி கிடைக்கும்படி கண்டுகொள்ளாமல் விட்டால் புகழ்பாடுவார்கள். செல்வாக்கு தேடித் தருவார்கள். இன்னும் பலர் உள்ளாட்சி தேர்தலில் 'சீட்' கிடைக்கும்; ஒரு நகரசபை தலைவராகலாம் ஒரு கவுன்சிலராகலாம் என்ற நப்பாசையில் கட்சிப் பதவிகளைப் பிடிக்க அலைகிறார்கள்.

ஆக, தி.மு.க-விற்கு கொள்கை, கட்டுப்பாடு, ஜனநாயகம் என்றெல்லாம் ஒரு கத்தரிக்காயும் கிடையாது. அது பிழைப்புவாதிகள், புகழ்வெறியர்கள், பதவி வெறியர்களின் கூடாரம்தான் என்பதை இம்முறை நடந்த உள்ளாட்சி தேர்தலே நிரூபித்துவிட்டது. ஆனாலும் கருணாநிதி, உள்ளாட்சி தேர்தல் மோதல்களையும், கொலைகளையும் உளவுப் போலீசு செய்த வேலை என கூசாமல் புளுகிறார்.

★ ★ ★

சென்னை - திருவான்மியூரில் கொல்லப்பட்ட மணி என்பவர் உடல் மாயானத்தில் எரியும்போது அப்பகுதி கழக உடன்பிறப்புகள் சிலர் கட்சியையே வெறுத்து உறுப்பினர் கார்டுகளை தீயிலிட்டு எரித்தார்கள். தமிழினப் பற்றும், மொழிப்பற்றும் கொண்ட நேர்மையானவர்கள் எண்ணற்றவர்கள் இன்னும் தி.மு.க.-வில் இருக்கிறார்கள்; இவர்கள் செய்யவேண்டியதும் இதைத்தான்!

● ராசு

www.padippakam.com

# 'தடா - என்.எஸ்.ஏ தோழர்கள் விடுதலை
# உறுதி குன்றா தோழர்களுக்கு உற்சாக வரவேற்பு

'கடந்த ஆண்டு செப்டம்பரில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் (என்.எஸ்.ஏ) கீழ் கைது செய்யப்பட்ட தஞ்சை ம.க.இ.க தோழர்கள் காளியப்பன், அருள், ஆனந்த ராஜ், பாலசுப்பிரமணியன் ஆகிய நால்வரும் கடந்த ஏப்ரல் 30-ம் தேதி அன்று உயர் நீதி மன்றம் அளித்தத் தீர்ப்பின்படி மே 5-ந் தேதியன்று விடுதலையாகியுள்ளனர். கடந்த ஆண்டு அக்டோபர் 16-ந் தேதியன்று நெய்வேலியில் 'தடா' சட்டத்தின் கீழ் சிறையிடப்பட்ட 5 தோழர்களும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ராஜீவ் பிணத்தைக் காட்டி ஒப்பாரி வைத்து மிருக பலத்துடன் ஆட்சியைப் பிடித்த பாசிச ஜெயா, புலிகள் பூச்சாண்டி காட்டி ஈழத் தமிழர்களைக் கைது செய்து அகதி முகாம்களை திறந்தவெளி சிறைச்சாலைகளாக்கினார். ஈழத் தமிழர்களைக் கட்டாய வெளியேற்றம் செய்தார். கோயில் பாதுகாப்பு நிதி என்று கோடி கோடியாய் குவித்தும், வேதாகம கல்லூரி தொடங்கியும் இந்து சனாதன பார்ப்பன கும்பலின் ஆதிக்கத்தை நிலை நாட்டினார். ஈழ அகதிகளை வெளியேற்றுவதை எதிர்த்தும், வேதாகம கல்லூரி தொடங்குவதை எதிர்த்தும் மக்கள் கலை இலக்கியக் கழகம் தமிழகமெங்கும் சூறாவளி பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது.

இதன்படி, கடந்த ஆண்டு செப்டம்பர் 14-ந் தேதியன்று தஞ்சையில் சுவரெழுத்து எழுதும்போது மூன்று தோழர்களைப் போலீசு கைது செய்தது. அகில இந்திய புரட்சிப் பண்பாட்டு மையத்தின் (AILRC)நாக்பூர் கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பிய தோழர் காளியப்பன் அன்றே கைது செய்யப்பட்டார். காவிப் பொடி, சுண்ணாம்பு மட்டை, ம.க.இ.க கொடிகள் முதலானவற்றைக் கைப்பற்றிய போலீசு, இவற்றைக் கொண்டு ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்ததாக, பிணையில் வெளிவர முடியாத தேசத் துரோக வழக்கு சோடித்தனர்.

அதைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் ம.க.இ.க., புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணி, விவசாயிகள் விடுதலை முன்னணி, தொழிலாளர் பிரச்சாரக் குழு ஆகிய புரட்சிகர அமைப்புகளைச் சேர்ந்த 93 தோழர்கள் கைதானார்கள். ஆனால் தஞ்சையில் கைதான நான்கு தோழர்கள் மீது தேசியப் பாதுகாப்புச் சட்டமும், நெய்வேலியில் வீடுவீடாக பிரசுரம் விநியோகம் செய்த ஐந்து தோழர்கள் மீது 'தடா' சட்டமும் ஏவப்பட்டது.

நெய்வேலியில் கைதான தோழர்கள் ஐவரும் சிறையிலும் போலீசு நிலையத்திலும் மிருகத்தனமான சித்திரவதைக்கு ஆளானார்கள். போலீசாரின் கொடூரமான

முறிந்தது. போலீசு நாய்கள் தோழர் ரமேஷின் வயிற்றில் உதைத்ததால் மாதக் கணக்கில் வயிற்று வலியால் துடித்தார். திடீர் தாக்குதலில் தோழர் அருள்மணியின் மூக்குக் கண்ணாடி உடைந்தது. தோழர் பாலுவின் தந்தை மரணமடைந்தபோது இறுதி மரியாதை செலுத்தக்கூட அவர் அனுமதிக்கப்படவில்லை. இத்தனை அடக்குமுறைக்கு மத்தியிலும் தோழர்களின் உறுதி இம்மியளவும் குறையவில்லை. பாசிசப் பேயாட்சிக்குப் பயந்தவர்கள் நாங்கள் அல்ல; கைதுகளும் சித்திரவதைகளும், வெங்கொடுமை சிறைக் கொட்டடியும் எமது உணர்வையும் உறுதிப்பாட்டையும் ஒருக்காலும் குலைத்




துவிட முடியாது என்பதை தோழர்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டினர்.

பூட்டிய இரும்புக் கூட்டின் கதவுகள் தாள் பணிந்து திறக்க, விடுதலையாகி வெளிவரும் தோழர்களை வரவேற்று திருச்சியிலும் தஞ்சையிலும் எழுச்சிமிகு வரவேற்பு ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. திருச்சியில் 8.5.92 அன்று செங்கொடிகள் பட்டொளி வீசும் அலங்கார வண்டியில் தோழர்கள் அமர்ந்திருக்க தாரை தம்பட்டை முழங்க, விண்ணதிர முழக்கங்களுடன் எழுச்சிமிகு ஊர்வலம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நடந்த பொதுக்கூட்டத்திற்கு திருச்சி ம.க.இ.க செயலர் தோழர் முத்து தலைமை தாங்க, புரட்சிகர மாணவர் இளைஞர் முன்னணித் தோழர் ஜெகதீசன், ரயில்வே ஒர்க்கர்ஸ் யூனியன் தோழர் முருகானந்தம், விலைவாசி எதிர்ப்புப் பெண்கள் போராட்டக் குழுத் தலைவர் [illegible] ம.க.இ.க தோழர் தமிழ்மணி ஆகியோரும், தோழர்க

தோழர் சண்முகநாதனும் வாழ்த்துரை வழங்கினர். விடுதலையான தோழர்களின் சார்பில் தோழர் காளியப்பன் தனது ஏற்புரையில், பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அடக்குமுறை நாங்கள் மேலும் எஃகு போல் உறுதி பெற உதவியாக அமைந்தது என்று குறிப்பிட்டார்.

தஞ்சையில் தோழர்களை வரவேற்று, 9.5.92 அன்று மேரீஸ் கார்னரிலிருந்து தொடங்கி எழுச்சிமிகு ஊர்வலம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து திலீபன் திடலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு பு.மா.இ.மு. தோழர் மன்னை நன்னன் தலைமை தாங்க, ம.க.இ.க. தோழர் தமிழ் மணி, நெய்வேலி தொழிலாளர் பிரச்சாரக் குழு தோழர் சுப்பிரமணியம், விவசாயிகள் விடுதலை முன்னணி தோழர் சந்திரசேகர், மக்கள் ஜனநாயக இளைஞர் கழகத் தோழர் குணாளன், வழக்கறிஞர் சண்முகநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்க, தோழர் காளியப்பன் ஏற்புரையாற்றினார். இரு பகுதிகளிலும் நடந்த வரவேற்பு பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு பகுதி வாழ் மக்கள் திரளாகக் கூடி தமது ஆதரவை நல்கினர்.

தோழர்களின் விடுதலை புரட்சிகர உணர்வுகளுக்கு புது ரத்தம் பாய்ச்சியுள்ளது. தோழர்கள் கைதான நேரத்தில் சிறிதும் ஊசலாட்டமின்றி, அவர்களது லட்சியம் நிறைவேற ஒத்துழைத்த தோழர்களின் குடும்பத்தாருக்கும், இவ்வழக்கை துணிவுடன் ஏற்று நடத்திய வழக்கறிஞர் சண்முகநாதனுக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக முகம் தெரியாத இத்தோழர்களின் விடுதலைக்காக வழக்கு நிதியாக தாராளமாக நன்கொடை அளித்து ஆதரவளித்த தமிழக மக்களுக்கும் எமது புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

சிறையிலிருந்து விடுதலையாகி வந்துள்ள நெருப்பில் பூத்த புரட்சி மலர்களை வாழ்த்தி வரவேற்போம்! பார்ப்பன - பாசிச ஜெ. கும்பலுக்கு எதிரான போராட்டத்தை கரம் இணைத்து தொடர்வோம்!

— மக்கள் கலை இலக்கியக் கழகம்

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd. No. TN/MS(S) 344



# இதுதான் இன்றைய இந்தியா



வறட்சி வாட்டி எடுக்கும் பிராட்சிவாடி கிராமத்துச் சிறுவன் இவன். அது மராட்டிய மாநிலம், பீது மாவட்டம், கைஜ் வட்டத்திலுள்ள சிறு கிராமம். ஏழு குடங்களைச் சைக்கிளில் கட்டிக் கொண்டு காட்டுப் பாதையில் தினமும் நான்கு கி.மீ. தண்ணீர் எடுக்கிறான் இச்சிறுவன். வயதுக்கு மீறிய உழைப்பு!

பக்கச் சுவர்கள் இடிபட்டு கரணம் தப்பினால் மரணம் என்ற நிலையில் அரை மணி நேரம் முயன்று 50 அடி ஆழக் கிணற்றில் இருந்து ஒரு வாளி நீர்தான் இறைக்க முடியும். கடந்த மாதம் இந்தக் கிணற்றில் நீர் இறைத்துக் கொண்டிருந்த சிறுமி தவறிவிழ அவளைப் பிடிக்கப் பாய்ந்த தாயும் விழுந்து மாண்டு போனாள். 1,000 பேர் மக்களும், 800 கால் நடைகளும் வாழும் — வாழ்ந்த இக் கிராமத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பு 12,000 லிட்டர் லாரித் தண்ணீர் கொண்டு வந்து கிணற்றில் கொட்டியதாம், அரசு! குடும்பத்திற்கு ஒரு குடம் எடுப்பதற்குள் வறண்டு போய்விட்டது. ஒரு குடம் நீரின் விலை ரூ.2 முதல் 5 வரை விற்கப்படுகிறது.

மராட்டிய மைய மாவட்டங்கள் பலவும் இப்படி வறட்சியின் கோரப் பிடியில் சிக்கித் தவிக்கிறது.. மலிவான கூலிக்குக் கொத்தடிமைகளாக மேற்கு மராட்டிய கரும்பாலைகளுக்கும் வயல்களுக்கும் உழைப்பாளிகள் ஓடிவர வேண்டும் என்பதற்காகவே நீர் பாசன - குடி நீர் வசதியின்றி பின் தங்கிய நிலையில் இப் பகுதி வைக்கப்பட்டுள்ளது.

ஆனால் கோடையா, எங்களுக்கு இரட்டிப்புக் கொண்டாட்டம் என்று கும்மாளமிடுகின்றனர் மேட்டுக் குடிச் சிறுவர் சிறுமியர். இவர்களுக்காக நாட்டின் நகரங்கள் தோறும் 'ஐஸ்கிரீம்' உணவகங்கள் பெருகி வருகின்றன. குவாலிட்டி, தேல்லாப், யாங்கி டூடுள், அருண், நருலா போன்ற கம்பெனிகள் நாட்டின் நகரங்கள் எங்கும் 'ஐஸ் கிரீம்' உணவகங்களைத் திறக்கின்றன. "100, 200 ரூபாய் என்று ஆயிரத்துக்கும் மேற்பட்டவகைகள்; விடிய விடிய விற்பனை, இரவு உணவுக்குப் பிறகு காரை எடுத்துக் கொண்டு பறந்து வருகிறார்கள்; உணவக உள் அலங்காரத்துக்கு மட்டும் பல லட்சம் செலவாகிறது; பணத்தைப் பற்றி யார் கவலைப் படுகிறார்கள்; சுவையும் உல்லாசமும் அழகும் தானே தேவை" என்கிறார்கள் உணவக நிர்வாகிகள். குளிர் காலத்தில் கூட நள்ளிரவிலும் நன்கு விற்பனை ஆகும் அளவு இவர்கள் பழகிவிட்டார்கள் என்கிறார்கள்.

எப்படி இருக்கிறது பாருங்கள்! நடுங்கும் குளிரில் போர்வையின்றி தவிக்கிறோம்; வாட்டும் வறட்சியில் குடிக்க நீரின்றி அலைகிறோம்; ஆனால் கொழுப்பேறிய கும்பல் வகை வகையான குளிர் பதனப் பொருட்களை உண்டு கொழுக்கின்றது. இதுதான் கலப்புப் பொருளாதாரமோ?

படிப்பகம்